தமிழக அரசின் 2019-2020 ஆம் நிதியாண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் குறித்து

# பாட்டாளி மக்கள் கட்சி

## தமிழக மக்கள் மன்றத்தில் முன்வைக்கும்

# நிழல் நிதிநிலை அறிக்கை

## (பா.ம.க.வின் பதினேழாவது நிழல் நிதிநிலை அறிக்கை)



## பாட்டாளி மக்கள் கட்சி

**திருவள்ளுவர் ஆண்டு 2050 தைத் திங்கள் 23 ஆம் நாள்**

**(06.02.2019 - புதன்கிழமை)**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | 5 |
| 2. | நிதிநிலை அறிக்கை குறித்த விளக்கம் | 7 |
| 3. | அரசியல் கட்சிகளும் நிதிநிலை அறிக்கையும் | 8 |
| 4. | நிதிநிலை அறிக்கையில் பா.ம.க.வின் பங்கு | 8 |
| 5. | செயலாக்கப்பட்ட திட்ட விவர அறிக்கை மற்றும் பொருளாதார ஆய்வறிக்கை | 8 |
| 6. | கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை திட்டங்களின் விளைவுகளும் தாக்கங்களும் | 9 |
| 7. | வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை – அமைச்சரவைக் குழு | 9 |
| 8. | நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன் கலந்தாய்வு | 10 |
| 9. | கிராமசபையில் தொடங்கும் திட்டமிடல் | 10 |
| 10. | பாலின நிதிநிலை அறிக்கை | 11 |
| 11. | 2019–20 அரசு நிர்வாகத்தில் ஊழல் ஒழிப்பு ஆண்டு | 11 |
| 12. | நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை | 11 |
| 13. | வேலைவாய்ப்புகளை பெருக்குவது குறித்து ஆலோசனை வழங்க சிறப்புப் பணிக்குழு | 12 |
| 14. | வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 வரை உதவித்தொகை | 13 |
| 15. | வறுமை ஒழிப்பு ஆணையம் | 13 |
| 16. | ஏழைக் குடும்பங்களுக்கு மாதம் ரூ.2,500 அடிப்படை வருமானத் திட்டம் | 14 |
| 17. | வருவாயைப் பெருக்குவதற்கான பரிந்துரைகளை வழங்க தனி ஆணையம் | 14 |
| 18. | புதிய தொலைநோக்குத் திட்டம் – 2025 | 15 |
| 19. | தமிழ்நாட்டிற்கான நீடித்திருக்கும் மேம்பாட்டு குறிக்கோள்கள் 2030 | 15 |
| 20. | வெளிப்படைத்தன்மை ஆணையம் | 16 |
| 21. | தமிழ்நாடு பொறுப்புடைமை ஆணையம் | 16 |
| 22. | நிர்வாக சீர்திருத்த ஆணையம் | 17 |
| 23. | ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் | 17 |
| 24. | லோக் அயுக்தா அமைப்பு | 19 |
| 25. | பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் | 20 |
| 26. | கல்வி, சுகாதாரம், விவசாயத்துக்கு அனைத்தும் இலவசம் | 21 |
| 27. | தேர்தல் சீர்திருத்தம் – ஓட்டுக்கு பணம் கொடுத்தால் தகுதி நீக்கம் | 22 |
| 28. | ஜூலை மாதம் உள்ளாட்சித் தேர்தல் | 23 |
| 29. | தமிழக பொருளாதாரத்தின் இன்றைய நிலை – ஓர் ஆய்வு | 24 |
| 30. | கடன்சுமை இல்லா தமிழகம் அமைக்க சிறப்புத்திட்டம் | 25 |
| 31. | சட்டம் – ஒழுங்கு | 27 |
| 32. | ஒருதலைக் காதல் கொலைகளைத் தடுக்க தனிப்பிரிவு | 28 |

| | | |
|---|---|---|
| 33. | வருவாய் நிர்வாகம் – மாவட்டங்கள் எண்ணிக்கை 60 | 29 |
| 34. | வறுமை ஒழிப்பு | 29 |
| 35. | தொழில்துறை | 30 |
| 36. | தமிழகம் – 5 இடங்களில் ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள் | 31 |
| 37. | தொழில் முதலீட்டை ஈர்க்க சிறப்புத் திட்டம் | 31 |
| 38. | இளைஞர் நலன் | 32 |
| 39. | ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு | 33 |
| 40. | வேளாண்மை | 34 |
| 41. | ரூ.1 லட்சம் கோடியில் நீர்ப்பாசன நான்காண்டுத் திட்டம் | 35 |
| 42. | வேளாண்துறையில் 30 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் | 36 |
| 43. | வேளாண் விளைபொருட்கள் விலை நிர்ணய ஆணையம் | 36 |
| 44. | வேளாண் விளைபொருள் கொள்முதல் ஆணையம் | 36 |
| 45. | சென்னை – சேலம் 8 வழிச் சாலைத் திட்டம் கைவிடப்படும் | 37 |
| 46. | ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்குத் தடை | 37 |
| 47. | மணல் குவாரிகள் இல்லாத தமிழ்நாடு | 38 |
| 48. | பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் | 38 |
| 49. | வேளாண் சந்தைக்கொள்கை – தனி அமைச்சகம் | 38 |
| 50. | புதிய அமைச்சகங்கள் | 39 |
| 51. | கால்நடை பராமரிப்பு | 39 |
| 52. | மீன்வளம் | 39 |
| 53. | காவிரி ஆணையத்திற்கு கூடுதல் அதிகாரம் | 40 |
| 54. | சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலம் | 40 |
| 55. | தகவல் தொழில்நுட்பம் | 41 |
| 56. | கைத்தறி மற்றும் துணிநூல் | 42 |
| 57. | நெடுஞ்சாலைகள் | 42 |
| 58. | துறைமுகங்கள் | 43 |
| 59. | போக்குவரத்து – பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்படும் | 43 |
| 60. | மாநில நெடுஞ்சாலைகளில் சுங்கக்கட்டணம் இரத்து | 44 |
| 61. | கல்லூரிகள் வாயிலாக ஓட்டுநர் உரிமம் | 44 |
| 62. | சென்னை மெட்ரோ ரயில் – இரண்டாம்கட்டம் | 44 |
| 63. | சென்னைப் போக்குவரத்து – இலவசப் பேருந்துகள் | 45 |
| 64. | தொடர்வண்டித் திட்டங்கள் | 46 |
| 65. | மின்சாரம் | 47 |
| 66. | புதிய எரிசக்தி | 48 |
| 67. | மின்வாரியத்தை லாபத்தில் இயக்க சிறப்புத்திட்டம் | 48 |

| | | |
|---|---|---|
| 68. | சுற்றுலாத் துறை | 49 |
| 69. | தமிழ் வளர்ச்சி | 49 |
| 70. | மருத்துவம் மற்றும் மருத்துவக் கல்வி | 50 |
| 71. | பள்ளி கல்வி வளர்ச்சிக்கு தனி நிதியம் | 51 |
| 72. | பள்ளிக் கல்வித்துறை | 52 |
| 73. | பல்கலைக் கழகங்கள் சீரமைப்பு – மேம்பாட்டுத் திட்டம் | 53 |
| 74. | உயர்கல்வி | 54 |
| 75. | இந்து சமய அறநிலையத்துறை | 56 |
| 76. | ஊரக வளர்ச்சி – உள்ளாட்சிகளுக்கு உண்மையான அதிகாரம் | 56 |
| 77. | நகராட்சி நிர்வாகம் | 57 |
| 78. | நகர்ப்புற வீட்டுவசதி | 57 |
| 79. | குடிநீர்– தண்ணீர் பெறும் உரிமை | 58 |
| 80. | தமிழகத்தின் குடிநீர்ப் பஞ்சத்தை சமாளித்தல் | 59 |
| 81. | காலநிலை செயல்திட்டம் (TN Climate Action Plan) | 59 |
| 82. | மரங்கள் ஆணையம் – சதுப்பு நில ஆணையம் | 60 |
| 83. | சீமைக் கருவேல மரம் ஒழிப்பு | 60 |
| 84. | மதுவிலக்கு | 61 |
| 85. | சமூகநீதி – மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு | 61 |
| 86. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் | 62 |
| 87. | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன் | 63 |
| 88. | மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் | 63 |
| 89. | பெண் குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் நிதியுதவித் திட்டம் | 64 |
| 90. | சத்துணவுத்திட்டம் | 65 |
| 91. | முதியோர், ஆதரவற்றோர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் நலன் | 65 |
| 92. | மாற்றுத்திறனாளிகள் நலன் | 65 |
| 93. | இலங்கைத் தமிழர்கள் நலன் | 66 |
| 94. | சிறுபான்மையினர் | 66 |
| 95. | ஆசிரியர்கள் நலன் | 66 |
| 96. | அரசு ஊழியர்கள் நலன் | 67 |
| 97. | தொழிலாளர்கள் நலன் | 67 |
| 98. | ஓய்வூதியர் நலன் | 68 |
| 99. | பத்திரிகையாளர்கள் நலன் | 68 |
| 100. | வணிகர் நலன் | 68 |
| 101. | நடப்பு நிதியாண்டின் (2019 – 2020) ஒட்டுமொத்த நிதிநிலை | 69 |
| 102. | நிறைவுரை | 72 |

**தமிழக அரசின் 2019–2020 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் குறித்து பாட்டாளி மக்கள் கட்சி தமிழக மக்கள் மன்றத்தில் முன்வைக்கும்**

# நிழல் நிதிநிலை அறிக்கை (Shadow Budget)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். (குறள் 388)

குறள் விளக்கம்: **நீதி முறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்கு தலைவன் என்றுக் கருதித் தனியே மதிக்கப்படுவான்.**

## 1. முகவுரை

1. 2019–2020ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை நாளை மறுநாள் (08.02.2019) தமிழக சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2003–04 ஆம் ஆண்டு முதல் நிழல் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து வரும் பாட்டாளி மக்கள் கட்சி, அதன் 17–ஆவது நிழல் நிதிநிலை அறிக்கையை (Shadow Budget) பொதுமக்களின் மேலான பார்வைக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது. இந்தப் பணியை தமிழக மக்களுக்கு தான் ஆற்றக்கூடிய மகத்தான சமூக, பொருளாதார, அரசியல் கடமையாக **“பாட்டாளி மக்கள் கட்சி”** கருதுகிறது.

2. இந்த மாநில மக்கள் மீதும், சமூக நீதியோடு கூடிய வளர்ச்சியின் மீதும், ஏழை, எளிய, நடுத்தர அனைத்துத் தரப்பு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் மீதும் உண்மையான, உள்ளார்ந்த, உணர்வுப்பூர்வ அக்கறைக் கொண்டுள்ள எங்கள் நிறுவனத் தலைவர் **மருத்துவர் அய்யா** அவர்களின் சிந்தனைகள், விவேகம், வழிகாட்டுதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நிழல் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழகம் வளர்கிறது..... ஆனால் தமிழர்கள், குறிப்பாக ஏழை, எளிய மக்கள் வளரவில்லை என்ற ஒரு சமூக நீதியற்ற நிலை காணப்பட்டது. ஆனால், இப்போது தமிழகமும் வளரவில்லை. தமிழக மக்களும் வளரவில்லை என்ற கவலையளிக்கும் நிலை நிலவி வருகின்றது.

3. **தமிழ்நாட்டை தனிநாடாக கருத்தில் கொண்டால், மக்கள்தொகை அடிப்படையில் உலக நாடுகள் வரிசையில் 17ஆவது இடத்தில் இருக்கும். உலகின் பணக்கார நாடுகளாகக் கருதப்படும் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, தென்கொரியா, கனடா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள் தமிழகத்தைவிட குறைந்த மக்கள்தொகை கொண்டவையாகும். இந்த நாடுகளின் இயற்கை வளங்களும் பெரிதாக இல்லை. மனிதவளத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இந்த நாடுகள் மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளன. மனிதவளத்தின் அடிப்படையில் பார்க்கும்போது மேற்கண்ட நாடுகளைவிட தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது. ஆனாலும், இந்த**

**நாடுகளுக்கு இணையான வளர்ச்சியை தமிழகத்தால் எட்ட முடியவில்லை. இதற்குக்காரணம் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்படாததுதான்.**

4. **வளர்ச்சியின்மைக் காரணமாக தமிழகத்தின் வருமானம் குறைந்துகொண்டே செல்கிறது. கடன் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் தமிழ்நாட்டு மக்கள்தான். ஆட்சியாளர்களின் 5 முக்கிய கடமைகளில் ஒன்றாக திருவள்ளுவரால் குறிப்பிடப்பட்டிருப்பது பொதுமக்களைக் காத்தல் ஆகும். அமைதியையும் வளர்ச்சியையும் பெருக்குவதன் மூலமாகவே மக்களைக் காக்கமுடியும். அதற்கான யோசனைகளை வழங்குவதற்காகவே பாட்டாளி மக்கள் கட்சி கடந்த 16 ஆண்டுகளாக நிழல் நிதிநிலை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.**

5. தமிழ்நாட்டை முன்னேற்றுவது எப்படி? தமிழகத்தை வளம் கொழிக்கும் மாநிலமாக மாற்றுவது எப்படி? என்ற வினாக்களுக்கு விடை அளிக்கும் வகையில், 2019–20ஆம் ஆண்டிற்கான நிழல்நிதிநிலை அறிக்கையை பாட்டாளி மக்கள் கட்சி தயாரித்து வெளியிடுகிறது. தமிழக மக்களும், தமிழகப் பொருளாதாரமும் ஒன்றாக வளரவேண்டும்; எல்லோரும் எல்லாமும் பெற்று மனமகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. மக்களோடு வாழும் இக்கட்சி மக்கள் பிரச்சனைகளை நன்கு உணர்ந்து, ஆராய்ந்து அவைகளுக்கு இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான நடவடிக்கைகளை எடுக்கலாம், எப்படி வருவாயைத் திரட்டலாம் என்பன உள்ளிட்ட யோசனைகளை இந்த நிழல் நிதிநிலை அறிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சி வழங்கியிருக்கிறது.

6. **தமிழகத்தின் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்திருப்பது வேலையில்லாத் திண்டாட்டம் ஆகும். தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப்படுத்துதல், வேலையில்லாத இளைஞர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல், உழவர்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கச் செய்தல், ஏழைகளுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு இந்த நிழல் நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழக அரசின் கடன் சுமையை படிப்படியாக குறைத்தல், நஷ்டத்தில் இயங்கும் மின்வாரியம் மற்றும் போக்குவரத்துக் கழகங்களை சீரமைத்து லாபத்தில் இயங்கச் செய்வதற்கான திட்டங்களை இந்த நிழல் நிதிநிலை அறிக்கை முன்வைத்திருக்கிறது.**

7. மக்களின் வாழ்வுரிமையைப் பெற்றுத் தந்து முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரு வரவு – செலவுத் திட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த இந்த நிதிநிலை அறிக்கை உதவி புரியும். அரசின் வரவு–செலவுத் திட்டம் தமிழகத்தின் எல்லாத் தரப்பினரையும், பல்வேறு அமைப்புகளையும், கலந்தாலோசித்து அந்த கருத்துக்களையும் உள்ளடக்கி தயாரிக்கும் ஓர் அணுகுமுறை காலப்போக்கில் உருவாக்கிட உதவும்; விழிப்புணர்வையும் உண்டாக்கும்.

8. இந்த அறிக்கையின் மீது தமிழகம் தழுவிய அளவில் ஒரு ஆரோக்கியமான விவாதம் நடந்து அதன் அடிப்படையில் தமிழக அரசு தனது திட்டங்களையும் முன்னுரிமைகளையும்

மாற்றியமைத்து ''கனவுகளை நனவுகளாக'' மாற்றி மக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி எதிர்பார்க்கிறது. அதே பின்னணியில் தான் இந்த நிதியாண்டிற்கான (2019–2020) இந்த நிழல் நிதிநிலை அறிக்கையை ''பாட்டாளி மக்கள் கட்சி'' தமிழகத்தின் அனைத்து மக்கள் அடங்கிய மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறது.

9. ஒரு நிதிநிலை அறிக்கை என்பது, வரும் நிதியாண்டில் அரசு தான் எதிர்பார்க்கும் மொத்த வருவாய், மொத்த செலவு, நிகர உபரி, மொத்த பற்றாக்குறை ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடும் ஓர் அறிக்கையாகும். அதே நேரத்தில் இந்த ஆண்டில் மாநிலத்தில் நிலவும் கடுமையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் திட்ட வளர்ச்சியை துரிதப்படுத்த தேவைப்படும் திட்டங்களையும் செயல்பாடுகளையும் ஒரு நிதிநிலை அறிக்கை உள்ளடக்கியிருக்க வேண்டும். குறிப்பாக பழங்குடியின, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினரின் பொருளாதார வளர்ச்சியையும், சமூக நீதியையும் அளிக்கும் எண்ணத்தோடு கூடிய திட்டங்கள் இடம்பெற வேண்டும். அத்திட்டங்கள், தெளிவானதாகவும், பிரச்சனைகளை நேரடியாக தீர்ப்பதாகவும், குறிப்பானதாகவும், இலக்கோடு கூடியதாகவும், தொலைநோக்குப் பார்வை கொண்டதாகவும் இருக்க வேண்டும். நிதிநிலை அறிக்கை என்பது, இலக்கு நிர்ணயிக்கப்படாத, வழிவகை சொல்லப்படாத நிதி ஒதுக்கீட்டால், அரசின் கனவுகளையும், விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் மட்டும் உள்ளடக்கிய ஒரு அரசியல் கட்சியின் வாக்குறுதி அறிக்கையாக அமைந்துவிடக்கூடாது.

## 2. நிதிநிலை அறிக்கை குறித்த விளக்கம்

10. நிதிநிலை அறிக்கையை நிதி குறித்த தகவல்களுக்கு அப்பாற்பட்டு ஓர் ஆழ்ந்த தாக்கத்தை உருவாக்கக்கூடிய ஒரு கருவியாகக் கருத வேண்டும். சமூக நீதியோடு கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் என்ற நோக்குடைய ஒரு பொதுநல அரசின் நிதிநிலை அறிக்கை, சாதாரண மனிதனின் நலனை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றது என்பதனை பிரதிபலிக்க வேண்டும்.

11. இதற்கு அடிப்படையாக அமைவது மக்களின் பிரச்சனைகளைப் பற்றியும், பொருளாதாரத்தின் சிக்கல்களைப் பற்றியும் அறிந்துகொள்வதாகும். அரசாங்கத்தின் திட்டங்களையும், வரவு – செலவு நிதிநிலை அறிக்கையை தயார் செய்பவர்கள் மக்களின் தேவைகளையும், உணர்வுகளையும் நன்கு புரிந்து இருப்பார்களா? என்பது சந்தேகத்திற்கு உரியதே. அதனால்தான் பல ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மக்களை சார்ந்தவையாக அமையவில்லை. மக்களைச் சாராத திட்டங்களும், நிதிநிலை அறிக்கைகள் மக்களின் வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் பெரிய தாக்கத்தை அல்லது முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. இதைக் கடந்த கால அனுபவங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. உண்மையில், மக்களின் தேவைகளுக்கும், அரசாங்கத்தின் திட்டங்களுக்கும் நிறைய இடைவெளி ஏற்பட்டு மக்கள் பலன் பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த இடைவெளியைக் குறைப்பது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையைச் சமுதாயத்தில் ஏற்படுத்தும்.

## 3. அரசியல் கட்சிகளும் நிதிநிலை அறிக்கையும்

12. இச்சூழ்நிலையை உருவாக்க வேண்டியது ஓர் அரசியல் கட்சியின் தலையாயக் கடமை. பாட்டாளி மக்கள் கட்சி வேலையின்மையிலும், ஏழ்மையிலும், அறியாமையிலும் வாடும் மக்களுக்காக பாடுபடும் துடிப்புமிக்க ஓர் அரசியல் இயக்கம். இதன் நிறுவனத்தலைவர் **மருத்துவர் அய்யா** அவர்கள் மக்களுடன் நெருக்கமாகப் பழகுபவர். மக்களுக்காக வாழ்பவர். மக்களின் வளர்ச்சியில்தான் மாநிலத்தின் வளர்ச்சி இருக்கிறது என்று நம்புபவர். எனவே, மக்களின் தேவைகளையும், பிரச்சனைகளையும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று அவற்றிற்கு தீர்வுகாண வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டவர். இதனைச் செய்வதற்கு இந்த நிழல் நிதிநிலை அறிக்கை ஒரு சிறந்த கருவியாக இருக்கும் என நம்புகிறோம்.

## 4. நிதிநிலை அறிக்கையில் பா.ம.க.வின் பங்கு

13. கடந்த 16 ஆண்டுகளாக தமிழக அரசு தனது நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, பாட்டாளி மக்கள் கட்சி தனது நிழல் நிதிநிலை அறிக்கையை மக்கள் மாமன்றத்தில் முன்மொழிவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

14. வளர்ந்த மேற்கத்திய நாடுகளில்தான் அரசியல் கட்சிகள் அரசுக்கு நிழல் நிதிநிலை அறிக்கை அளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளன. இந்தியாவில் இதுவரை எந்த அரசியல் கட்சியும் இம்மாதிரியான நிழல் நிதிநிலை அறிக்கையை தயாரிக்காத நிலையில், பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமே மக்களுக்கான இந்த ஆரோக்கிய கடமையை தவறாமல் செய்து வருகிறது.

15. பாட்டாளி மக்கள் கட்சியின் நிழல் நிதிநிலை அறிக்கையின் நோக்கம் மக்களின் பிரச்சனைகளை விவாதிப்பதற்கு ஓர் அரங்கத்தை உருவாக்குவதும், அவர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்தான். தமிழகத்தில் மக்களாட்சி தழைத்தோங்க, அரசின் செயல்பாடுகளை அறிந்தவர்களாக மக்கள் மாறவேண்டும். அரசின் நடவடிக்கைகளை மக்கள் தொடர்ந்து கண்காணித்து அதில் பங்கேற்பதுதான் உண்மையான மக்களாட்சி ஆகும். அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து மக்கள் அறிவதும் விவாதிப்பதும் கருத்தினை தெரிவிப்பதும் அவசியமாகும். மக்களது கருத்துகளை அறிந்து அவற்றை அரசுக்கு தெரிவிக்க வேண்டியது பாட்டாளி மக்கள் கட்சியின் கடமை என்று கருதுகிறோம். அந்தப் பிரச்சனைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதும், இந்த அணுகுமுறையின் மூலம் மாநில அரசு ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்க வழிவகுப்பதும், அதன் பலன்கள் மக்களை சென்றடைவதும், அவர்கள் மகிழ்வோடு வாழ்வதும்தான் எங்களது விருப்பம். மக்களை முன்னேற்றுவதற்கான ஓர் அறிவியல் முயற்சிதான் இந்த நிழல் நிதிநிலை அறிக்கை.

## 5. செயலாக்கப்பட்ட திட்ட விவர அறிக்கை (Action Taken Report) மற்றும் பொருளாதார ஆய்வறிக்கை (Economic Survey)

16. ஒவ்வொரு ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போதும் சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்

பட்டிருக்கின்றன என்பதை ஆராய வேண்டியது அவசியம். அதுகுறித்த விவரங்கள் அடங்கிய நடவடிக்கை அறிக்கையை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதைப் போல தமிழக அரசும் தனது செயலாக்க திட்ட விவர அறிக்கையை சட்டமன்றத்தில் அறிவிக்கும்.

17. நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன் தற்போது நிலவும் பொருளியல் சூழ்நிலை என்ன? பொருளாதாரத்தின் பின்னணி என்ன? பொருளாதாரத்தை எதிர்நோக்கியுள்ள சவால்கள் என்ன? என்பதைப் பற்றிய புரிதல் தேவை. சூழ்நிலையை உணரும்போதுதான் நல்ல திட்டங்களை நிதிநிலை அறிக்கையில் சேர்க்க முடியும். அதேநேரத்தில், நிதிநிலை அறிக்கையை சரியான கோணத்தில் மதிப்பிடவும் முடியும். எனவே, நிதிநிலை அறிக்கையை தயார் செய்து சமர்ப்பிப்பதற்கு முன்பாக தற்போதைய பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கையை அரசு வெளியிடும். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்பாக பொருளாதார ஆய்வறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கிறது. ஆனால் தமிழக அரசு அம்மாதிரியான பொருளாதார அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. நிதிச்சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக இந்தப் பொருளாதார ஆய்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக, தமிழக அரசு சமர்ப்பிப்பது ஓர் ஆரோக்கிய சூழ்நிலையை உருவாக்கும்.

## 6. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை திட்டங்களின் விளைவுகளும் தாக்கங்களும் (Outcome Budget)

18. நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் திட்டங்களும் அதற்காக ஆகும் செலவும் பல தாக்கங்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அரசு, செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயும் பொறுப்பாக செலவிடப்பட்டால் தான் ஓர் ஆரோக்கியமான பயனை நாம் எதிர்பார்க்க முடியும். உதாரணமாக கல்வித்துறைக்காக ரூபாய் 100 கோடி செலவு செய்தால் அதன் விளைவாக பள்ளிக்கூடங்கள் கட்டப்படலாம். புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம், பள்ளிக் கூடத்திற்கு தேவையான உபகரணங்கள் வாங்கலாம். இதன் விளைவாக கல்வியின் தரம் உயரக்கூடும். மாணவர்களின் பள்ளி வருகை சதவீதம் அதிகரிக்கக்கூடும். கல்வித்துறைக்கான செலவு இந்த விளைவுகளை ஏற்படுத்தும். இதுபோல் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்படும் செலவும் அத்துறையில் பல தாக்கங்களை உருவாக்கும். அந்தத் தாக்கங்களை வரிசைப்படுத்தும் அறிக்கைக்கு விளைவு அறிக்கை அல்லது தாக்க அறிக்கை (Outcome Budget) என்று சொல்லப்படுகிறது. இந்த அறிக்கையை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையோடும் அரசாங்கம் ஒப்பிட்டால் அரசின் செலவுத்திட்டங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை மதிப்பிடலாம். இம்முறையை அரசு பின்பற்றினால் தமிழகத்தில் ஆரோக்கியமான நிலையை உருவாக்க முடியும்.

## 7. வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை – அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Agriculture)

19. தமிழ்நாட்டில் பெரும்பான்மையானவர்களுக்கு வேலை வழங்கும் துறையாக விளங்குவது வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை உள்ளடக்கிய முதன்மைத் துறைதான்.

தமிழ்நாட்டில் தற்போதைய நிலவரப்படி 60% பேர் தங்களின் வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தையும், அதை சார்ந்த தொழில்களையும் நம்பியிருக்கின்றனர். ஆனால் மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்திக்கு வேளாண் துறையின் பங்களிப்பு 10 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. வேளாண்துறை வளராமல் ஒரு மாநிலத்தின் பொருளாதாரம் வளர முடியாது. வேளாண் துறையில் அதிக வளர்ச்சியை ஈட்ட வேண்டுமெனில், அத்துறை மீது அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். **இதைக் கருத்தில் கொண்டு வேளாண் துறைக்காக தனி நிதிநிலை அறிக்கையை 2008 – 2009 ஆம் ஆண்டு முதல் பாட்டாளி மக்கள் கட்சி தயாரித்து வெளியிட்டு வருகிறது. இதைப் பின்பற்றி கர்நாடக அரசும் வேளாண்மைக்கு என தனி நிதிநிலை அறிக்கையை தயாரித்து வெளியிடத் தொடங்கியுள்ளது. ஆந்திராவில் கடந்த 2013–14 ஆம் ஆண்டு முதல் வேளாண்துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தயாரித்து வெளியிடப்பட்டு வருகிறது. புதிதாக உருவாக்கப்பட்ட தெலுங்கானா மாநிலம் 2018–19ஆம் ஆண்டு முதல் வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து வருகிறது. தமிழகத்தில் அடுத்த கட்டமாக வேளாண்மை சார்ந்த திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்காக மூத்த அமைச்சர்களைக் கொண்டு தனி அமைச்சரவைக் குழு அமைக்கப்படும்.**

## 8. நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன் கலந்தாய்வு

20. எந்த ஒரு வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டமிடுதல் என்பது கலந்தாய்வு அடிப்படையில் அமைய வேண்டும். இனி நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன் அனைத்து துறைகளின் உயர் அதிகாரிகள், தொழில் அதிபர்கள், கல்வியாளர்கள், தொண்டு நிறுவனங்கள், வணிகர் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், விவசாய சங்கங்கள், நெசவாளர் – மீனவர் சங்கங்கள், நுகர்வோர் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், தொழிற்சங்கங்கள், அரசு ஊழியர்–ஆசிரியர் சங்கங்கள் போன்ற அமைப்புகளோடு அரசு கலந்தாய்வு செய்ய வேண்டும்.

## 9. கிராமசபையில் தொடங்கும் திட்டமிடல்

21. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திட்டமிடல் என்பது மாவட்ட அளவில் உருவாக்கம் பெறுகிறது. மாவட்ட அளவில் திட்டமிடும்போது, தொலைதூர பகுதிகளில் உள்ள கிராமங்களின் தேவைகள் கணக்கில் கொள்ளப்படாமல் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றால்தான், இந்தியா முழுமையான வளர்ச்சியை எட்டமுடியும். அப்போதுதான், வளர்ச்சியின் பயன்கள் அனைவருக்கும் சென்றடையும். இதைக் கருத்தில் கொண்டு, நிதிநிலை அறிக்கைக்கான திட்டமிடல் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாவட்ட ஊராட்சி, மாநகராட்சி ஆகிய நிலைகளில் மேற்கொள்ளப்படும். **ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 ஆம் தேதி மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் அன்று நடைபெறும் கிராமசபைக் கூட்டங்கள் அந்த கிராமத்தின் தேவைகளை அறிந்து நிதிநிலை அறிக்கையில் சேர்ப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளப்படும். நகர்ப்புறங்களில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தேவைகள் கணக்கெடுக்கப்படும். இந்த அமைப்புகளின் தேவைகளை கருத்தில் கொண்டு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படும். இதன் மூலம் கிராமசபைகள் மூலம் திட்டமிடலைத் தொடங்கும் முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழகம் பெறும்.**

## 10. பாலின நிதிநிலை அறிக்கை (Gender Budgeting)

22. அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்களும் வளர்ச்சி பெற வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு மிகப்பெரியது. ஆனால், கிராமப்புறங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பெண்கள் வளர்ச்சியின் எந்தப் பயனையும் அடையாமல் உள்ளனர். ஒவ்வொரு திட்டத்திலும் ஒதுக்கப்படும் நிதி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக அமைவதால், பெண்களுக்கென சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த முடிவதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக மத்திய நிதிநிலை அறிக்கையில் சிறப்புத் திட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு துறைக்கான ஒதுக்கீட்டிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ப சிறப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. அதேபோல், பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு திட்டத்திலும் சுமார் 50 விழுக்காடு தொகை பெண்களுக்காக ஒதுக்கப்படும். இதுகுறித்த விவரங்கள் அடங்கிய பாலின நிதிநிலை அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

## 11. 2019-20 வேலைவாய்ப்புகளை பெருக்க அடித்தளம் அமைக்கும் ஆண்டு

23. **தமிழகத்தில் மிகப்பெரிய வலிமை அதன் இளைஞர்கள் ஆவர். தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 52 விழுக்காட்டினர் 25 வயதுக்கும் குறைவானவர்களாவர். 18 முதல் 54 வயது வரையிலானவர்களின் எண்ணிக்கை தமிழக மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கு ஆகும். இதைவிட வலிமையான மனிதவளம் உலகில் வேறு எந்த நாட்டிற்கும் அமையாது. ஆனால், இந்த மனிதவளத்தை நாம் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஒருபுறம் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுக்கு திறமையான இளைஞர்கள் கிடைக்கவில்லை என்று தொழில்துறையினர் ஏங்குகின்றனர். மற்றொருபுறம், பொறியியல் உள்ளிட்ட தொழில்நுட்பப் படிப்புகளை முடித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவிக்கின்றனர். இந்த இரு குறைகளையும் சரி செய்தால், அனைவருக்கும் வேலை கிடைப்பது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் வளர்ச்சி இதுவரை இல்லாத அளவுக்கு வேகம் பெறும் என்பது உறுதி.**

24. **படித்த இளைஞர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளை அளித்தல், உயர்நிலை வகுப்புகளிலிருந்தே தொழில் பயிற்சியைக் கட்டாயமாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் இதை சாத்தியமாக்க முடியும். அதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் 2019-20ஆம் ஆண்டில் தொடங்கப்படும். அதைக் குறிக்கும் வகையில், 2019-20 ஆம் ஆண்டு வேலைவாய்ப்புகளைப் பெருக்க அடித்தளம் அமைக்கும் ஆண்டு என்று அறிவிக்கப்படுகிறது.**

## 12. நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை

25. **தமிழகத்தின் இன்றைய சூழலையும் எதிர்கால வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு 2019-20ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட 10 அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:**

1. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல்
2. வறுமை ஒழிப்புக்காக ஏழைகளுக்கு நிதியுதவி
3. தொழில் வளர்ச்சியை அதிகரித்தல்
4. தமிழகத்தின் பாசனப் பரப்பை இருமடங்காக்குதல்
5. வெளிப்படைத்தன்மை
6. ஊழல் ஒழிப்பு
7. நிர்வாக சீர்திருத்தம்
8. விவசாயம்
9. கல்வி
10. அரசின் வருவாயை அதிகரித்தல்

மேற்கண்ட 10 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே 2019-20ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

## 13. வேலைவாய்ப்புகளை பெருக்குவது குறித்து ஆலோசனை வழங்க சிறப்புப் பணிக்குழு

26. இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவாக 6.1% என்ற அளவை எட்டியிருப்பதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பின் புள்ளி விவரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. அவை உறுதி செய்யப்பட்ட புள்ளிவிவரங்கள் அல்ல என்று மத்திய அரசும், நிதிஆயோக் அமைப்பும் கூறியுள்ளபோதிலும், அந்தப் புள்ளி விவரங்கள் உண்மையானவை என்பதை அரசு உள்ளிட்ட எவரும் மறுக்கவில்லை.

27. இதில் கவலையளிக்கும் விசயம் என்னவென்றால், கிராமப்புறங்களைவிட நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதுதான். ஊரகப் பகுதிகளில் 5.3%ஆக இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், நகர்ப்பகுதிகளில் 7.8%ஆக அதிகரித்திருக்கிறது. இது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

28. இந்தியாவில் மிக அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகத் திகழ்வது தமிழகம் தான். தமிழக மக்களின் 54% மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு இல்லாததால் அங்குள்ள மக்கள் வேலைதேடி நகர்ப்புறங்களில் குடியேறியது தான். அவ்வாறு குடியேறியவர்களில் பலர் அடிப்படை வசதிகள் கூட இல்லாத சூழலில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

29. நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு சேகரித்துள்ள தகவல்கள் தமிழ்நாட்டுக்கும் பொருந்தும். நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தால், வருவாய்க்கு வழியற்ற மக்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதைத்

**தடுக்க வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாட்டில் அமைப்பு சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைப்பதற்காக மனிதவள மேம்பாட்டு வல்லுநர்கள், பொருளாதார வல்லுநர்கள் உள்ளிட்டோர் அடங்கிய சிறப்புப் பணிக்குழு அமைக்கப்படும். இக்குழு அடுத்த 3 மாதங்களில் அறிக்கை அளிக்கும். அதன் அடிப்படையில் வேலைவாய்ப்பைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

## 14. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 வரை உதவித்தொகை

30. தமிழக அரசின் சார்பில் படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200, தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300, 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.600 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

31. படித்து முடித்த இளைஞர்கள் அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவடைந்த பிறகே இந்த உதவித்தொகை பெற தகுதியானவர்களாவர். ஆண்டுக்கு ரூ.50,000–க்கும் குறைவான குடும்ப வருமானம் கொண்டவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் இந்த உதவித்தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

32. **படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தவும், அதற்கான நிபந்தனைகளை தளர்த்தவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படவுள்ள உதவித்தொகை விவரம்:**

| | | |
|---|---|---|
| **1.** | **பத்தாம் வகுப்பில் தோல்வி** | **ரூ.1,000** |
| **2.** | **பத்தாம் வகுப்பில் தேர்ச்சி** | **ரூ.2,000** |
| **3.** | **12ஆம் வகுப்பு தேர்ச்சி** | **ரூ.3,000** |
| **4.** | **பட்டப்படிப்பு முடித்தவர்கள்** | **ரூ.4,000** |
| **5.** | **பட்டமேற்படிப்பு முடித்தவர்கள்** | **ரூ.5,000** |

33. **படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும். அதன்படி, படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 3 ஆண்டுகள் நிறைவடைந்த இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். ஏற்கெனவே 3 ஆண்டுகள் மட்டும் வழங்கப்பட்ட இந்த உதவித்தொகை, இனி 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இந்த உதவித்தொகை பெறுவதற்கான குடும்ப வருமான வரம்பு ரூ.50 ஆயிரத்திலிருந்து, ரூ.2 லட்சமாக உயர்த்தப்படும்.**

## 15. வறுமை ஒழிப்பு ஆணையம்

34. இந்தியா விடுதலையடைந்து 72 ஆண்டுகள் நிறைவடைந்தும் இன்னும் வறுமையை ஒழிக்க முடியாதது தேசிய அளவிலும், மாநில அளவிலும் கடைபிடிக்கப்பட்டு வரும் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களின் தோல்வி என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

35. **1991ஆம் ஆண்டு இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு வறுமை ஒழிப்பு என்பது பெரும் சவாலாக மாறியுள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு பொருளாதார பாகு பாடு அதிகரித்துவிட்டது. ஏழைகள் மேலும் ஏழைகளாகின்றனர்; பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகின்றனர். இதனால், ஏராளமான வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட பிறகும் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை.**

36. **மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 2 கோடி குடும்பங்களில் 34.848 லட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இது தமிழகத்தின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 18% ஆகும். இந்தியாவின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இது குறைவுதான் என்றாலும், தமிழகம் போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு இது அதிகமாகும்.**

37. **எனவே, தமிழ்நாட்டில் வறுமையை முற்றிலுமாக ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு பரிந்துரைப்பதற்காக புதிய ஆணையம் அமைக்கப்படும். இதன் தலைவராக பொருளாதார வல்லுநர் ஒருவர் நியமிக்கப்படுவார்.**

## 16. ஏழைக் குடும்பங்களுக்கு மாதம் ரூ.2,500 அடிப்படை வருமானத் திட்டம்

38. **வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க தலைசிறந்த வழி அவர்களுக்கு நேரடி பண உதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவது தான் என்று பொருளாதார வல்லுநர்கள் பரிந்துரைத்துள்ளனர். அதைப்பின்பற்றி, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும், கனடா உள்ளிட்ட நாடுகளிலும் ஏழைக் குடும்பங்களுக்கு அடிப்படை மாத வருமானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

39. **இதைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அடிப்படை வருமானமாக மாதம் ரூ.2,500 வழங்கும் திட்டம் வரும் ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப் படும். இத்திட்டத்தின்கீழ் சுமார் 35 லட்சம் குடும்பங்கள் பயனடையும். இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ.10,500 கோடி செலவாகும். இத்திட்டப் பயனாளிகள் பொருளாதார கணக்கெடுப்பு மூலம் கண்டறியப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.**

40. **வழக்கமாக மேலை நாடுகளில் அடிப்படை வருமானம் பெறும் குடும்பங்களுக்கு, பிற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவிகள் நிறுத்தப்படும். ஆனாலும், தமிழகத்தில் அடிப்படை வருமானமாக வழங்கப்படும் தொகை மிகவும் குறைவு என்பதால் பிற சமூகப் பாதுகாப்பு திட்டப்படியான உதவிகளும் தொடரும்.**

## 17. வருவாயைப் பெருக்குவதற்கான பரிந்துரைகளை வழங்க தனி ஆணையம்

41. தமிழக அரசின் அனைத்துத்துறை வருவாய் வளர்ச்சி குறைந்து வருவது கவலை அளிக்கிறது. இதை மாற்றி, மக்கள் மீது வரிச் சுமையை அதிகரிக்காமல், வருவாயைப் பெருக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

42. **நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள குளறுபடிகள், வரிகளை வசூலிப்பதில் காணப்படும் சுணக்கம் ஆகியவையே வரிவருவாய் குறைவதற்குக் காரணமாகும். இதுவரை நடைமுறையில் இருந்த வணிக வரி முறை ரத்து செய்யப்பட்டு, ஜிஎஸ்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், தமிழக அரசின் வருவாய் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், மற்ற வரிகளை வசூலிப்பதில் உள்ள குறைகளை களைந்தும், ஜி.எஸ்.டி. வரி விதிப்பு முறையில் வரி ஏய்ப்பு செய்ய முடியாது என்பதால், அதன் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் அதிகரிக்கும் என்பதை கருத்தில் கொண்டும் தமிழக அரசின் வரிவருவாய் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 25% வளர்ச்சி அடைவதை உறுதி செய்ய தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது. இதற்காக பணியில் உள்ள இ.ஆ.ப. அதிகாரி ஒருவர் தலைமையில் குழு அமைக்கப்படும்.**

## 18. புதிய தொலைநோக்குத் திட்டம் – 2025

43. ஒரு மாநிலத்தின் சமூக, பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு அடிப்படையான தேவை வலிமையான கட்டமைப்பு ஆகும். தமிழகம் அதிவேக வளர்ச்சியடைய வேண்டுமானால், தமிழகத்திற்கு அதிக அளவில் தொழில் முதலீடுகள் தேவைப்படுகின்றன. அத்தகைய தொழில் முதலீடுகளை ஈர்க்க உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

44. **தமிழகத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த “வளரும் தமிழகத்திற்கு வலிமையான கட்டமைப்பு – 2025” என்ற பெயரில் புதிய தொலைநோக்குத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக அடுத்த 6 ஆண்டுகளில் ரூ.10 லட்சம் கோடி செலவிடப்படும். இதில், அரசின் பங்காக ஆண்டுக்கு ரூ.50,000 கோடி வீதம் மொத்தம் ரூ.3 லட்சம் கோடி செலவிடப்படும். மீதமுள்ள முதலீடு தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் பெறப்படும்.**

45. **இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், அதற்காக செலவிடப்பட்ட தொகை குறித்த விவரங்கள் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்படும்.**

## 19. தமிழ்நாட்டிற்கான நீடித்திருக்கும் மேம்பாட்டு குறிக்கோள்கள் 2030 (Tamil Nadu Sustainable Development Goals 2030)

46. **நீடித்திருக்கும் வளர்ச்சி குறிக்கோள்கள் 2030 (Sustainable Development Goals - SDGs) எனும் உலகளாவிய உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் அவையால் 25 செப்டம்பர் 2015 இல் ஒருமனதாக ஏற்கப்பட்டது. இந்தியா உட்பட உலகின் 193 நாடுகள் இந்த உடன்படிக்கையை செயல்படுத்த ஒப்புக்கொண்டுள்ளன.**

47. **2016 ஆம் ஆண்டு தொடங்கி 2030 ஆண்டு வரையிலான காலத்தில் உலகின் ஒவ்வொரு நாடும் அடைய வேண்டிய மேம்பாட்டு 17 குறிக்கோள்களை (Goals) இந்த உடன்படிக்கை உள்ளடக்கிருக்கிறது. இதனை உறுதி செய்வதற்கான 169 குறிப்பான இலக்குகளும் (Targets) வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட லட்சியத்தை தமிழ்நாட்டில் முழுமையாக செயல்படுத்தும் வகையில் முதலமைச்சர் தலைமையில் தனி அமைச்சரவை குழு அமைக்கப்படும்.**

## 20. வெளிப்படைத்தன்மை ஆணையம் (Transparency Commission)

48. மக்களாட்சியின் உண்மையான எஜமானார்கள் மக்கள்தான். அவர்களின்றி அரசாங்கம் இல்லை. மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் மக்களுக்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும் பணியாளர்கள்தான் மக்கள் பிரதிநிதிகள் ஆவர். தனியார் நிறுவனங்களில் அவற்றின் உரிமையாளர்களின் கவனத்திற்கு வராமல் எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படாது. அதைப்போலவே அரசு நிர்வாகத்தின் மக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படாமல் எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படக்கூடாது. அதுதான் மக்களாட்சியின் மகத்துவம் ஆகும்.

49. **ஆனால், தமிழகத்தின் நிலை அப்படிப்பட்டதாக இல்லை. அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை. அரசின் முடிவுகள் குறித்த விவரங்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் கேட்கப்பட்டால்கூட வழங்கப்படுவதில்லை. இதுதான் ஊழலுக்கு வழிவகுக்கிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும் என்று அரசு விரும்புகிறது. அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வெளிப்படைத்தன்மை ஆணையம் என்ற புதிய சட்டப்பூர்வ அமைப்பை தமிழக அரசு உருவாக்கும். இது தகவல் பெறும் உரிமை ஆணையத்தைவிட வலிமையான அமைப்பாக இருக்கும்.**

50. **தகவல் பெறும் ஆணையத்தில் அரசின் முடிவுகள் குறித்த விவரங்களை விண்ணப்பித்துதான் பெறமுடியும். ஆனால், வெளிப்படைத்தன்மை ஆணையத்தில் அரசின் முடிவுகள், அமைச்சரவையின் முடிவுகள், ஒவ்வொரு திட்டமும் செயல்படுத்தப்படும் விதம், அதற்காக செய்யப்பட்ட செலவு, அரசின் ஒப்பந்தங்கள் வழங்கப்படும் விதம், அதற்கான காரணங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் கேட்காமலேயே மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். இதற்காக தனியாக இணையதளம் தொடங்கப்படும். இதன் மூலம் அரசு நிர்வாகத்தில் முழுமையான வெளிப்படைத்தன்மை உருவாக்கப்படும். இது ஊழல் ஒழிப்புக்கு மிகப்பெரிய அளவில் உதவியாக இருக்கும். இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக அப்பழுக்கற்ற பின்னணி கொண்ட சமூக ஆர்வலர்கள் நியமிக்கப்படுவர். ஆணையத்தின் உறுப்பினர் செயலராக மூத்த இ.ஆ.ப. அதிகாரி நியமிக்கப்படுவார்.**

## 21. தமிழ்நாடு பொறுப்புடைமை ஆணையம்
## (Tamilnadu Accountability Commission)

51. **அரசு நிர்வாகத்தின் அங்கங்களான அதிகாரிகள் முதல் அமைச்சர்கள் வரை அனைவரும் தங்களின் செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்க வேண்டியது கட்டாயமாகும். அப்போதுதான் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் தங்களின் சுயநலனுக்காக, மாநில நலனுக்கு எதிரான முடிவுகளை எடுப்பதைத் தடுக்க முடியும். இதற்காக தமிழ்நாடு மாநில பொறுப்புடைமை ஆணையம் என்ற புதிய சட்டப்பூர்வ அமைப்பு ஏற்படுத்தப்படும். இந்த அமைப்பின் தலைவராக ஓய்வுபெற்ற / பணியில் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்படுவார். அப்பழுக்கற்ற பின்னணி கொண்ட சமூக ஆர்வலர்கள் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். தலைவர் தவிர, மொத்தம் 6 உறுப்பினர்கள் இந்த ஆணையத்தில் இருப்பர்.**

52. **முதலமைச்சர், அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள் பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் ஆகியோர் இந்த ஆணையத்தின் அதிகார வரம்புக்குள் வருவார்கள். அவர்கள் எடுக்கும் முடிவுகளால் மாநில அரசுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டாலோ, ஊழல்கள் நடந்தாலோ அதற்கு சம்பந்தப்பட்டவர்களைப் பொறுப்பாக்கி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுதான் இந்த ஆணையத்தின் பணியாகும். அரசு நிர்வாகத்தில் தவறு நடப்பது தெரியவந்தால், தானாக முன்வந்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க இந்த ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்படும். இது லோக் அயுக்தாவுக்கு இணை அமைப்பாக செயல்படும்.**

## 22. நிர்வாக சீர்திருத்த ஆணையம் (Administrative Reforms Commission)

53. ஒரு மாநிலத்தின் நிர்வாகக் கட்டமைப்பு முறையாக அமைக்கப்பட்டிருந்தால்தான் அரசின் திட்டங்களும் நலத்திட்ட உதவிகளும் மக்களை முறையாக சென்றடையும். இல்லாவிட்டால், அரசின் திட்டங்களால் யாருக்கும் பயன்கிடைக்காத நிலை ஏற்படும்.

54. தமிழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மிக மோசமாக சிதைந்திருக்கிறது. மக்களின் தேவைகள் குறித்த கோரிக்கைகள் நிர்வாகத்தின் அடிமட்டத்திலிருந்து ஆட்சியாளர்களுக்கு சென்றடைந்து, அவர்கள் அதுகுறித்து முடிவு எடுக்க பல மாதங்கள் ஆகின்றன. இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பை வைத்துக்கொண்டு தமிழகத்தை முன்னேற்றுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

55. **தமிழக அரசு நிர்வாகங்களில் நிலவும் ஊழல்கள், முடிவு எடுப்பதில் தாமதம் உள்ளிட்ட அனைத்திற்கும் நிர்வாகக் கட்டமைப்பு சரியாக இல்லாததே காரணமாகும். நிர்வாகக் கட்டமைப்பில் ஒரு சில குறைகள் இருந்தால் அதை சரிசெய்யலாம். ஆனால், கட்டமைப்பு முழுமையாக சீர்குலைந்துள்ள நிலையில், அதை முற்றிலும் புதிதாக கட்டி எழுப்பவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக, நிர்வாக சீர்திருத்த ஆணையம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் இந்த ஆணையம் அமைக்கப்படும். இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள், இந்திய காவல்பணி அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.**

## 23. ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள்

56. நாட்டின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது ஊழல் ஆகும். புற்றுநோயைப் போல ஊழல் அனைத்துத் துறைகளிலும் பரவி, அரசு நிர்வாக அமைப்பை சீரழித்து வருகிறது. இதைத் தடுக்க ஊழல் ஒழிப்புத் திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்படும். அத்துடன், வெளிப்படையான நிர்வாகம் உறுதி செய்யப்படும். இதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அ. வெளிப்படையான நிர்வாகத்தை உறுதிசெய்வதற்காக தகவல்பெறும் உரிமை கட்டமைப்பு வலுப்படுத்தப்படும்.**

ஆ. பொது சேவை பெறும் உரிமைச் சட்டம் உடனடியாக இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

இ. அரசு ஊழியர்களைத் தேர்வு செய்வதற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின் தலைவர்களாக மிகமிக நேர்மையான அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைக்கப்படும். தகுதியில்லாதவர்களையும், அரசியல் தொடர்புடையவர் களையும் உறுப்பினராக நியமிக்கும் வழக்கத்திற்கு முடிவு கட்டப்படும்.

ஈ. அரசிடம் பொதுமக்கள் அளித்த மனுக்கள் அடங்கிய கோப்புகள் எந்த நிலையிலான பரிசீலனையில் உள்ளன என்பதை இணையதளம் மூலம் பொதுமக்களே அறிந்து கொள்ளும் வசதி (File Tracking System) விரைவில் அறிமுகம் செய்யப்படும்.

உ. அரசின் செயல்பாடுகளை ''உள்ளாட்சிகளும், மக்கள் குழுக்களும்'' கண்காணிக்கச் செய்தல், அரசு அலுவலகங்கள் அனைத்திலும் ''மக்கள் சாசனத்தை'' செயல்படுத்துதல் ஆகியவை கட்டாயமாக்கப்படும்.

ஊழல் ஒழிப்பு

அ. மாநில அளவில் ஊழல் ஒழிப்புக்கான லோக்அயுக்தா அமைப்பு ஏற்படுத்தப்படும்.

ஆ. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஊழல் ஒழிப்பு அதிகாரிகளாக அறிவிக்கப்படுவர். மாநில அளவிலான அரசு அலுவலகங்களுக்கான ஊழல் ஒழிப்பு அதிகாரிகளாக அவற்றின் துறைத் தலைவர்களும், பொதுத்துறை நிறுவனங்களின் ஊழல் ஒழிப்பு அதிகாரிகளாக அவற்றின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்களும், வாரியங்களின் ஊழல் ஒழிப்பு அதிகாரிகளாக நிர்வாக இயக்குனர்களும் செயல்படுவார்கள்.

இ. அரசு அலுவலகங்களில் ஊழல் நடக்காமல் தடுக்க வேண்டியது அந்தந்த அலுவலகங்களுக்கு பொறுப்பான ஊழல் ஒழிப்பு அதிகாரியின் கடமையாகும். ஊழல் தொடர்பாக எவரேனும் புகார் கொடுத்தால் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அணுகுமுறையை விடுத்து, அரசு அலுவலகங்களை தீவிரமாக கண்காணித்து ஊழல் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கும் Pro-Active அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும். அரசு அலுவலகங்களில் கையூட்டு பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால், அதற்கு பொறுப்பான ஊழல் ஒழிப்பு அதிகாரி மீது கடமை தவறிய (Dereliction of duty) குற்றச்சாற்றின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈ. ஊழல் செய்யும் அதிகாரிகள் மீது வழக்குத் தொடர அரசிடம் இருந்து அனுமதி பெற வேண்டும் என்ற விதி நீக்கப்படும்.

உ. **ஊழல்கள் குறித்து புகார் தெரிவிக்க 3 இலக்கம் கொண்ட இலவச தொலைபேசி சேவை அறிமுகம் செய்யப்படும். எந்தத் துறையில் ஊழல் நடந்தாலும், அதுபற்றி இந்த எண்ணில் தகவல் தெரிவித்தால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

ஊ. சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊழலை வெளிக்கொண்டு வருபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

## 24. லோக் அயுக்தா அமைப்பு (Lokayukta)

57. **2016 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாட்டில் ஊழலை ஒழிப்பதற்கான லோக்அயுக்தா அமைப்பு ஏற்படுத்தப்படும். லோக்அயுக்தா அமைப்பதற்கான சட்டமுன்வரைவு 2018ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், லோக்அயுக்தாவை அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

58. **தமிழ்நாட்டில் லோக்அயுக்தா அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்வதற்காக சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, தமிழக அரசின் முன்னாள் தலைமை வழக்குரைஞர், ஓய்வுபெற்ற காவல்துறை உயரதிகாரி ஆகியோரைக் கொண்ட தேர்வுக்குழு கடந்த 28.12.2018 அன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டது.**

59. **தமிழ்நாடு லோக்அயுக்தா அமைப்புக்கு ஒரு தலைவர், நீதித்துறை உறுப்பினர்கள் இருவர், நீதித்துறை சாரா உறுப்பினர்கள் இருவர் என மொத்தம் 5 பேரை தேர்வு செய்வதற்கான அறிவிக்கை தேர்வுக்குழுவால் கடந்த திசம்பர் மாதம் வெளியிடப்பட்டது. அப்பதவிகளுக்கு 18.01.2019 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களை தேர்வுக்குழு ஆய்வு செய்து வருகிறது. உச்சநீதிமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டவாறு இம்மாத இறுதிக்குள், அதாவது 28.02.2019–க்குள் தமிழ்நாட்டில் லோக்அயுக்தா அமைக்கப்படும்.**

60. லோக்அயுக்தா அமைப்பு கீழ்க்கண்ட அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கும்.

i. **லோக் அயுக்தா அமைப்பு, மாநில அரசின் தலையீடு இல்லாத தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாக இருக்கும்.**

ii. **முதலமைச்சர், அமைச்சர்கள், பிரிவு 1 மற்றும் பிரிவு 2 அதிகாரிகள் ஆகியோர் லோக்அயுக்தா அமைப்பின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரப்படுவார்கள்.**

iii. **தமிழக அரசின் கையூட்டுத் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, லோக் அயுக்தா அமைப்பின் கட்டுப்பாட்டில் செயல்படும்.**

iv. **ஏதேனும் ஒரு துறையில் ஊழல் நடப்பதாக தெரியவந்தால், அதுதொடர்பாக தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து, விசாரிக்கும் அதிகாரம் லோக் அயுக்தாவுக்கு வழங்கப்படும்.**

**v. லோக் அயுக்தாவுக்கு வரும் புகார்கள், லோக் அயுக்தா அமைப்பே தாமாக முன்வந்து, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் புகார்கள் மீது, 60 நாட்களில் முதல்கட்ட விசாரணை முடிவடைந்து, வழக்குத் தொடரப்படும். யார் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறதோ, அவரையும் விசாரித்தப்பிறகு தான் விசாரணைக்கு ஆணையிடப்படும். இந்த விசாரணை 6 மாதங்களில் முடிக்கப்பட்டு, தீர்ப்பளிக்கப்படும்.**

**vi. ஓர் அதிகாரி மீதான ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.**

**vii. ஊழல் அதிகாரியால் அரசுக்கு ஏற்பட்ட இழப்புகள் கணக்கிடப்பட்டு, அந்த அதிகாரியிடமிருந்து வசூலிக்கப்படும்.**

**viii. அரசு அதிகாரிகள் குடிமக்களுக்கு வழங்கவேண்டிய சேவையை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கவேண்டும். அவ்வாறு செய்து முடிக்காத அதிகாரிகள், லோக்அயுக்தா அமைப்பால் விசாரிக்கப்பட்டு, காலதாமதம் நிருபிக்கப்படும் பட்சத்தில் அபராதம் விதிக்கப்படும். அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை பாதிக்கப்பட்ட குடிமகனுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.**

**ix. லோக்அயுக்தா அமைப்பில் உள்ள அதிகாரிகள் மீது ஏதேனும் ஊழல் குற்றச்சாட்டுகள் வந்தால், ஒரு மாதத்தில் விசாரணை முடிக்கப்படும். அதிகாரி மீதான ஊழல் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால், அவர் உடனடியாக பணிநீக்கம் செய்யப்படுவார்.**

**x. லோக்அயுக்தா அமைப்பால் விசாரிக்கப்படும் ஊழல் வழக்குகளில், குறைந்தபட்சம் ஓராண்டு முதல், அதிகபட்சம் வாழ்நாள் சிறைத் தண்டனை வரை விதிக்கப்படும்.**

**xi. அரசு நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்களை வெளிக்கொண்டு வருபவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும்.**

## 25. பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் (Right to Public Services Act)

61. குடிமக்களுக்கு சேவை வழங்குவதுதான் அரசின் முதல் கடமையாகும். இதை கட்டாயமாக்கும் நோக்குடனும், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும் **பொது சேவைபெறும் உரிமைச் சட்ட முன்வரைவு நடப்புக்கூட்டத் தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும்.** இச்சட்டம் கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

**அ. சாதிச்சான்று, பிறப்புச் சான்று, இறப்புச் சான்று, திருமண பதிவுச் சான்று, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, நில ஆவணங்களின் நகல்கள், மின்இணைப்பு வழங்குதல், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்குதல் ஆகிய சேவைகளை இந்த சட்டத்தின் மூலம் பெறமுடியும்.**

**ஆ. பொதுமக்கள் கோரும் ஒவ்வொரு சேவையும் எவ்வளவு நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும் என்பது வரையறுக்கப்படும்.**

**இ. குறிப்பிட்ட நாட்களுக்குள் சேவை வழங்கப்படாவிட்டால், அதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், முதல்நிலை மேல்முறையீட்டு அமைப்பிடம் புகார் அளிக்கலாம். அப்புகாரை விசாரிக்கும் முதல்நிலை மேல்முறையீட்டு அமைப்பு, சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து உரிய ஆணை பிறப்பிக்கும்.**

**ஈ. முதல்நிலை மேல்முறையீட்டு அமைப்பு பிறப்பிக்கும் உத்தரவு மனநிறைவளிக்கவில்லை என்றால், இரண்டாம்நிலை மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.**

**உ. முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை மேல்முறையீட்டு அமைப்புகளுக்கு 1908 ஆம் ஆண்டின் சிவில் நடைமுறை விதிகளின்படி, சிவில் நீதிமன்றத்திற்கான அதிகாரம் வழங்கப்படும். இந்த அமைப்புகள் லோக்அயுக்தா அமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும்.**

**ஊ. பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய சேவையை குறிப்பிட்ட நாட்களுக்குள் ஓர் அதிகாரி வழங்காவிட்டால், அவருக்கு ரூ.500 முதல் ரூ.5000 வரை அபராதம் விதிக்கப்படும். அத்துடன் துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்கப்படும் அபராதம், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.**

## 26. கல்வி, சுகாதாரம், விவசாயத்துக்கு அனைத்தும் இலவசம்

62. அரசின் வருவாயில் பெரும் பகுதி மக்களிடமிருந்து வரி மூலமே வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட ஒவ்வொரு பைசாவும் பயனுள்ள வகையில்தான் செலவிடப்படவேண்டும். உதாரணமாக 2019–20ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் மானியங்கள் மற்றும் இலவசங்களுக்காக மட்டும் ரூ.75,723 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது தமிழக அரசின் சொந்த வரி வருவாயான ரூ.1,12,616 கோடியில் 67.24% ஆகும். இலவசங்களுக்காகவோ, மானியங்களுக்காகவோ இவ்வளவு தொகை செலவிடுவதை தவறு என்று கூறுமுடியாது. ஆனால், மாநிலத்தின் சொந்த வரிவருவாயில் 67.24% தொகையை ஒரு விஷயத்திற்காக செலவிடும்போது, அது பயனுள்ளதாக அமையவேண்டும். ஆனால், தமிழக அரசின் மானியங்களும், இலவசங்களும் பயனுள்ளதாக இல்லை என்பதே பா.ம.க.வின் குற்றச்சாட்டு.

63. பயனுள்ள இலவசங்களை பாட்டாளி மக்கள் கட்சி எப்போதும் ஆதரிக்கிறது. அதே நேரத்தில், பயனில்லாத, மக்களை சோம்பேறிகளாக்கக்கூடிய இலவசங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கையாகும். பாட்டாளி மக்கள் கட்சி கடைபிடித்து வரும் சமூக ஜனநாயகக் கொள்கையின்படி, அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமை மட்டுமின்றி, சமூகப் பொருளாதார உரிமைகளும் வழங்கப்படவேண்டும். அதன்படி, மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை உறுதி செய்யும் வகையிலான இலவசங்களை பா.ம.க. ஆதரிக்கிறது.

64. சமூக ஜனநாயகக் கொள்கையை கடைபிடித்து வரும் பிரேசில் உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளில் இலவசத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஆனால் அந்தத் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களை அடுத்த நிலைக்கு முன்னேற்றும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. இத்தகைய இலவசங்கள்தான் பயனுள்ள இலவசங்களாகும்.

65. மாறாக, வாக்கு வங்கியை இலக்காக வைத்து வழங்கப்படும் இத்தகைய இலவசங்களால் வறுமை ஒழியாது; மக்களின் வாழ்வில் முன்னேற்றமும் ஏற்படாது. மாறாக மக்களை சோம்பேறிகளாக்கிவிடும். இதனால், நாட்டின் உற்பத்தியும், பொருளாதார வளர்ச்சியும் குறையும். இத்தகைய இலவசங்களை பாட்டாளி மக்கள் கட்சி எதிர்க்கிறது.

66. மாறாக, **மக்கள் உயிர்வாழ்வதற்குத் தேவையான, முன்னேற்றத்திற்கு வழிவகுக்கக்கூடிய, அத்தியாவசிய தேவைகளான கல்வி, சுகாதாரம், விவசாயம் ஆகிய மூன்றுக்கும் தேவையான அனைத்தும் மற்றும் குடிநீரும் இலவசமாக வழங்கப்படவேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கையாகும். அதன்படி, அனைவருக்கும் தரமான, சுகமான, சுமையற்ற, விளையாட்டுடன் கூடிய கட்டாயக் கல்வி இலவசமாக வழங்கப்படும். கல்வி கற்பதற்குத் தேவையான பென்சில் முதல் மடிக்கணினி, ஐ பேட் வரை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். கல்விக்காக ஒரு ரூபாய் செலவு செய்ய வேண்டிய தேவையில்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும்.**

67. **அதேபோல், அனைவருக்கும் அனைத்து வகையான மருத்துவச் சேவைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையான விவசாயத்திற்கு தேவைப்படும், விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்து, தண்ணீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளும் இலவசமாக வழங்கப்படும்.** முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் இந்த இலவசத் திட்டங்களை மட்டும் பா.ம.க. செயல்படுத்தும்.

## 27. தேர்தல் சீர்திருத்தம் – ஒட்டுக்கு பணம் கொடுத்தால் தகுதி நீக்கம்

68. **தமிழ்நாட்டில் ஜனநாயகத்தைக் காக்கவும், ஊழலை அடியோடு ஒழிக்கவும் உடனடியாக செய்யப்படவேண்டிய சீர்திருத்தம் தேர்தல் சீர்திருத்தம் ஆகும். ஓட்டுக்கு பணம் கொடுத்ததற்காக தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட அவலம் தமிழ்நாட்டில்தான் மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது என்பதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.**

69. **ஓட்டுக்கு பணம் கொடுத்ததற்காக தேர்தலை தற்காலிகமாக ஒத்திவைப்பதால் மட்டும் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடாது. மாறாக, ஓட்டுக்கு பணம் கொடுக்கும் வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்வதன் மூலமும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கும் கூடுதலான தொகுதிகளில் ஒரு கட்சியின் வேட்பாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டால், அந்தக் கட்சியை தடை செய்வதும்தான் இதற்குத் தீர்வாக அமையும்.**

70. **எனினும், இந்த விஷயத்தில் தமிழக அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. தேர்தல் ஆணையம்தான் இந்த சீர்திருத்தத்தைச் செய்யவேண்டும். ஆனால், தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட சில மாநிலங்களில் மட்டும்தான் ஓட்டுக்கு பணம்**

**கொடுக்கும் கலாச்சாரம் அதிகமாக இருக்கிறது என்பதால், இச்சிக்கலுக்கு தீர்வு காண்பதில் தேர்தல் ஆணையம் உரிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று தோன்றுகிறது. தேர்தல் ஆணையத்திற்கு அதிக அழுத்தம் கொடுப்பதன் மூலம் மட்டும்தான் தேர்தல் ஊழலுக்கு முடிவு கட்டமுடியும் என்பதால், இதற்காக மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும்படி மத்திய அரசையும், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் சட்ட ஆணையத்தையும் தமிழக அரசு நேரடியாக வலியுறுத்தும்.**

71. தேர்தல்கள் நேர்மையாக நடப்பதை உறுதிசெய்யும் வகையில்...

அ. தேர்தலில் ஓட்டுக்கு பணம் தரும் வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்தல்

ஆ. 6 விழுக்காட்டுக்கும் அதிகமான தொகுதிகளில் ஏதேனும் ஒரு கட்சியின் வேட்பாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டால் அந்தக் கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்தல்

இ. மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆகிய பணியிடங்களில் வெளிமாநிலப் பிரிவுகளில் பணியாற்றும் தமிழகத்தை சாராத அதிகாரிகளை நியமித்தல்

ஈ. தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து கருத்துகணிப்புகளுக்கு தடை விதித்தல்.

உ. தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன்பிருந்தே அரசு விளம்பரங்களை ஊடகங்களில் வெளியிட தடை விதித்தல்.

ஊ. தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பே அரசு நிர்வாகத்தில் அரசியல் ரீதியாக நியமனம் செய்யப்பட்ட வாரியத் தலைவர்கள் உள்ளிட்டோரை பதவி நீக்கம் செய்தல் உள்ளிட்ட தேர்தல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக, தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்கள் மற்றும் பிற மாநிலத் தலைவர்களை முதலமைச்சர் மற்றும் சட்ட அமைச்சர் அடங்கியக் குழு சந்தித்து இதுபற்றி பேச்சு நடத்தும். இந்த சீர்திருத்தங்களை விரைந்து செய்து முடிக்கும்படி தேர்தல் ஆணையம் மற்றும் மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

72. ஓட்டுக்கு பணம் – பரிசுப் பொருட்களை கொடுப்பதும், வாங்குவதும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 123 ஆவது பிரிவின்படி குற்றம் என்பதையும், இந்த குற்றத்திற்காக இந்திய தண்டனைச் சட்டத்தின் 171 ஆவது பிரிவின்படி பணம் கொடுப்பவர், வாங்குபவர் இருவருக்குமே ஓராண்டு வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும் என்பதையும், இந்த தண்டனையை 3 ஆண்டுகளாக அதிகரிக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட இருப்பதையும் மக்களுக்கு விளக்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

## 28. ஜூலை மாதம் உள்ளாட்சித் தேர்தல்

73. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2016ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெறவிருந்த தேர்தல் சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி ஒத்திவைக்கப்பட்டது.

எனினும், அந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்கப்படவேண்டிய உள்ளாட்சித் தேர்தல், அதன்பின் இரு ஆண்டிற்கு மேலாகியும் இதுவரை உள்ளாட்சித்தேர்தல் நடத்தப்படவில்லை.

74. **நீதிமன்ற ஆணைப்படி உள்ளாட்சித் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணிகள் கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டன. இப்பணிகள் மே மாதத்தில் முழுமையாக நிறைவடையும். தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தல்கள் முடிவடைந்த பிறகு, மே மாத இறுதியில் உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடப்படும். ஜூலை மாத இறுதிக்குள் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும்.**

75. **தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பணிகளுக்காக, கடந்த ஆண்டு ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்காக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு நடப்பாண்டில் ரூ.750 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்படும்.**

## 29. தமிழக பொருளாதாரத்தின் இன்றைய நிலை – ஓர் ஆய்வு

76. தமிழக அரசின் கடன் 2018–19ஆம் நிதியாண்டின் இறுதியில் ரூ.3,55,845 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மார்ச் மாத இறுதியில்தான் தமிழகத்தின் நிகர கடன்மதிப்பு துல்லியமாக தெரியும். 2019–20ஆம் ஆண்டில் தமிழக அரசு குறைந்தது ரூ.70,000 கோடி கடன் வாங்கவேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்தால் 2019–20ஆம் ஆண்டு இறுதியில் தமிழக அரசின் நேரடிக் கடன் மட்டும் ரூ.4.25 லட்சம் கோடியாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை நாளை மறுநாள் தாக்கல் செய்யப்படும்போது இந்த மதிப்பு தெரியவரும்.

77. இது தமிழக அரசின் நேரடிக் கடன் மட்டும் தான். தமிழ்நாடு மின்சார வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கடன் உத்தேசமாக ரூ.3.75 லட்சம் கோடி இருக்கும் என்று வைத்துக் கொண்டாலும் தமிழக அரசின் மொத்தக் கடன் ரூ.8 லட்சம் கோடியை நெருங்கும். தமிழகத்தின் மக்கள் தொகை 7.23 கோடி மட்டுமே. இதை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், தமிழகத்தில் அனைவர் பெயரிலும் ரூ.1,10,650 கடன் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் அதிகமாகும்.

78. தமிழக அரசின் செலவுகள் ஒருபுறம் அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலையில், வருவாயைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாததுதான் தமிழக அரசின் கடன் சுமை இந்த அளவு அதிகரித்ததற்குக் காரணம் ஆகும். தமிழக அரசின் சொந்த வரிவருவாயில் 67.24% இலவசங்களுக்காகவும், மானியங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டால், தமிழக அரசால் கடன் சுமையிலிருந்து வெளியேறவும் முடியாது; தமிழகம் முன்னேறவும் முடியாது. அதே நேரத்தில், இலவசங்களையும், மானியங்களையும் முற்றிலுமாக ரத்து செய்ய முடியாது. ஆக்கபூர்வமான வழிகளில் இலவசம் மற்றும் மானியம் வழங்கப்படத் தான் வேண்டும். ஆனால், அவை ஓர் அளவுக்குள் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி, இலவசங்களும், மானியங்களும் அதிகரிக்கும் அளவுக்கு அரசின் வருவாயும் அதிகரிக்கப்பட வேண்டும்.

**79. தமிழக அரசின் சொந்த வரிவருவாய் எனப்படுபவை ஜி.எஸ்.டி. வரி, ஆயத்தீர்வை வரி, முத்திரைத்தாள் வரி, மோட்டார் வாகன வரி ஆகியவை ஆகும். இவற்றில் ஆயத்தீர்வையைத் தவிர மற்ற வரிகள் எதுவும் கடந்த 6 ஆண்டுகளில் இலக்கை எட்டவில்லை. 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஜி.எஸ்.டி. வரி நடைமுறைப் படுத்தப்பட்டதன் பயனாக, அனைத்து மாநிலங்களிலும் வரி வருவாய் சற்று அதிகரித்துள்ளது என்பதுதான் ஓரளவு மனநிறைவு அளிக்கும் செய்தியாகும்.**

**80. ஒரு மாநிலத்தின் நிதி நிலைமை திடமாக இருக்க வேண்டுமானால் வரி அல்லாத வருவாய் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால், 2018–19ஆம் ஆண்டில் தமிழகத்தின் வரி அல்லாத வருவாய் என்பது ரூ.11,301 கோடி மட்டும் தான். இது அதற்கு முந்தைய ஆண்டின் வரி அல்லாத வருவாயைவிட குறைவு ஆகும். தமிழகத்தின் இயற்கை வளங்களை முறையாக பயன்படுத்தினால் வரி அல்லாத வருவாயை இன்னும் 10 மடங்கு, அதாவது ரூ.1.25 லட்சம் கோடியாக அதிகரிக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக மட்டுமே தமிழ்நாடு பொருளாதார ரீதியாக திவால் ஆவதைத் தடுக்க முடியும்.**

## 30. கடன்சுமை இல்லா தமிழகம் அமைக்க சிறப்புத்திட்டம்

81. இந்தியாவில் நிதிப்பற்றாக்குறை அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது என்று இந்திய ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறியிருந்தது. தமிழகத்தின் நிதிப்பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்து வருவதுதான் கடன் சுமை உயருவதற்கு காரணம். 2019–20ஆம் ஆண்டின் இறுதியில் தமிழகத்தின் நேரடி கடன்சுமை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் கடன்சுமை சுமார் ரூ.8 லட்சம் கோடியை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

82. நடப்பாண்டில் தமிழக அரசின் நேரடி கடனுக்கான வட்டி மட்டும் ரூ.49,800 கோடியாக அதிகரிக்கும். பொதுத்துறை நிறுவனங்களின் கடனுக்கான வட்டி ரூ.45,000 கோடியாக உயரும். ஒரு மாநிலம் ஆண்டுக்கு சுமார் ரூ.95,000 கோடியை கடன் வட்டியாக மட்டும் செலவிடுவது ஆரோக்கியமான நிதிச்சூழல் அல்ல. இதனால், வளர்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியவில்லை.

83. அதேபோல் பொதுத்துறை நிறுவனங்கள் இழப்பை சமாளிக்கவும், கடன் தவணை மற்றும் வட்டி கட்டுவதற்காகவும் கூடுதலாக கடன் வாங்க வேண்டியுள்ளது. இதனால் தமிழக அரசும், பொதுத்துறை நிறுவனங்களும் மீளாக் கடன் வலையில் சிக்கிக் கொள்ளும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை தவிர்ப்பதற்காக தமிழக அரசு அதன் நேரடிக் கடனை அடுத்த 5 ஆண்டுகளில் மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 5%–க்கும் கீழ் குறைக்க சிறப்புத் திட்டம் வகுக்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:–

**அ. தமிழக அரசுக்கு சொந்தமான கிரானைட் குவாரிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி அனைத்தும் ரத்து செய்யப்பட்டு, குறைந்த மனித வளத்துடன் பராமரிக்க சாத்தியமான குவாரிகள் தமிழக அரசின் கனிம நிறுவனத்தின் (டாமின்) மூலம் நடத்தப்படும். மற்ற குவாரிகள் வெளிப்படையான போட்டி ஏல முறையில் தனியாருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் அரசுக்கு**

ஆண்டுக்கு கூடுதலாக ரூ.35,000 கோடி வருவாய் கிடைக்க வகை செய்யப்படும்.

ஆ. 1957 ஆம் ஆண்டின் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு & ஒழுங்குமுறை) சட்டத்தின்படி தாது மணல் குவாரிகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லை. மத்திய அரசுக்கு மட்டுமே அந்த அதிகாரம் உள்ளது. அதன்படி, தமிழகத்தில் உள்ள தாது மணல் குவாரிகளை நிர்வகிக்கும் உரிமை மத்திய அரசிடம் பேச்சு நடத்தி பெறப்படும். அதன்பின்னர் தாது மணல் குவாரிகளில் 60 விழுக்காட்டை டாமின் நிறுவனம் மூலம் தமிழக அரசே நடத்தும். மீதமுள்ள குவாரிகளில் தாது மணல் அள்ளும் உரிமை வெளிப்படையான போட்டி ஏலம் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். ஏற்கனவே இந்த தொழிலில் இருந்து முறைகேடு செய்த நிறுவனங்களுக்கு மீண்டும் இந்த உரிமம் வழங்கப்படாது. இந்த வகையில் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.75,000 கோடி வருவாய் கிடைக்க வகை செய்யப்படும்.

இ. ஆற்று மணல் விற்பனை மூலம் இப்போது அரசுக்கு ஆண்டுக்கு ரூ.86 கோடி மட்டுமே வருவாய் கிடைக்கிறது. இதை முறைப்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு ரூ.25,000 கோடி வருவாய் ஈட்ட முடியும். எனினும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் கருதியும், உயர்நீதிமன்ற தீர்ப்பை மதித்தும் தமிழகத்தில் உள்ள மணல் குவாரிகள் மார்ச் மாதத்துடன் மூடப்படும். இதனால், மணல் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்காது. அதே நேரத்தில், செயற்கை மணல் மீதான வரி, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் மீதான தீர்வை, இறக்குமதி மணல் அரசின் மூலம் விற்பனை செய்யப்படுவதால் கிடைக்கும் இலாபம் ஆகியவற்றின் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.15,000 கோடி வரை வருமானம் கிடைக்கும்.

ஈ. ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை மூலம் தமிழக அரசின் வரி வருவாய் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. தமிழக அரசின் பிற வரி வசூல்முறையில் உள்ள குறைகளை களைவதன் மூலம், வரி வருவாய் அதிகரிக்கப்படும். இவ்வாறாக மக்களுக்கு கூடுதல் வரிச்சுமை இல்லாமல், சீர்திருத்தங்களின் மூலமாக மட்டும் ஆண்டுக்கு ரூ.25,000 கோடி கூடுதல் வரி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உ. மேற்குறிப்பிட்ட 4 வகை நடவடிக்கைகளின் மூலம் அரசுக்கு கூடுதலாக ரூ.1,50,000 கோடி வருவாய் கிடைக்கும். முழு மது விலக்கு நடைமுறைப் படுத்தப்படுவதால் அரசின் வருவாய் ரூ.25,000 கோடி அளவுக்கு குறையும். இதைக் கருத்தில் கொண்டால், தமிழக அரசுக்கு ரூ.1,25,000 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

ஊ. கல்வி, சுகாதாரம், விவசாயம் ஆகிய துறைகளுக்கான அனைத்தையும் இலவசமாக வழங்கவும், குடும்ப அடிப்படை வருமானத் திட்டத்தை செயல்படுத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஆண்டுக்கு ரூ.25,000

**கோடி நிதி ஒதுக்கவும் அரசு முடிவு செய்துள்ளதால், அவற்றுக்காக ஆண்டுக்கு ரூ.75,000 கோடி கூடுதலாக நிதி ஒதுக்கப்படும்.**

எ. **மீதமுள்ள ரூ.50,000 கோடி கடன் தவணையாக செலுத்தப்படும். அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த தொகையை மேலும் அதிகரிப்பதன் மூலம் அரசின் நேரடிக் கடன் அடுத்த 5 ஆண்டுகளில் நான்கில் ஒரு பங்காக குறைக்கப்பட்டுவிடும்.**

ஏ. **தமிழக அரசின் மற்ற திட்டங்கள் செம்மைப்படுத்தப்படுவதன் மூலமும், நிர்வாகச் செலவுகளை குறைப்பதன் மூலமும் நிதிப்பற்றாக்குறை கட்டுப்படுத்தப்படும். வளர்ச்சி மற்றும் கட்டமைப்புத் திட்டங்களுக்காக மட்டுமே கடன் பெறப்படும். இந்தக் கடன், தமிழகத்தின் நிதிநிலை அறிக்கை மதிப்பில் 5 விழுக்காட்டுக்கு மிகாமல் பார்த்துக்கொள்ளப்படும்.**

## 31. சட்டம் – ஒழுங்கு

84. மாநிலத்தின் வளர்ச்சிக்கு அமைதியான சூழலும், சட்டம் – ஒழுங்கு பராமரிப்பும்தான் முதல் தேவை என்பதை தமிழக அரசு உணர்ந்திருக்கிறது.

85. சட்டம் – ஒழுங்கு முழுமையாக பாதுகாக்கப்படும். புலனாய்வுத் துறையை நவீனப்படுத்துவதன் மூலம் கொலைகள், கொள்ளைகள், வழிப்பறிகள், திருட்டுக்கள் போன்றவை கட்டுப்படுத்தப்படும். அனைவரும் வாழ விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு மாற்றப்படும்.

86. **தமிழ்நாட்டில் காவல்துறை தலைமை இயக்குநர்களின் எண்ணிக்கை இப்போது 6ஆக உள்ளது. இவர்களில் சட்டம் – ஒழுங்கு பிரிவின் தலைமை இயக்குநர் சீருடைப்பணியாளர் தேர்வாணையத் தலைவர் தவிர மற்ற நால்வரும் முக்கியத்துவம் அற்ற பதவிகளில்தான் அமர்த்தப்பட்டுள்ளனர். காவல்துறை தலைமை இயக்குநர்களின் திறமையும் அனுபவமும் முழுமையாக பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.**

87. **காவல்துறை தலைமை இயக்குநர்களின் திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்குடன் தலைநகர் சென்னை தவிர்த்த தமிழகத்தின் மற்ற பகுதிகள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு காவல்துறை தலைமை இயக்குநர் நியமிக்கப்படுவார். சென்னை மாநகர காவல்துறை ஆணையர் பதவி இப்போதுள்ள காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (ஏடிஜிபி) நிலையிலிருந்து காவல்துறை தலைமை இயக்குநர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும். இதற்கு வசதியாக தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் பதவிகளின் எண்ணிக்கை 8ஆக உயர்த்தப்படும்.**

88. தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்ற காவல்துறையின் அனைத்து பதவிகளிலும் தகுதியும், திறமையும் உள்ளவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள். **காவல்துறை அதிகாரிகள் நியமனம், பணியிட மாற்றம் ஆகியவற்றில் எந்தவிதமான அரசியல் குறுக்கீடும் இருக்காது. சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படுவார்கள்.**

**காவல்துறை சுதந்திரமாக செயல்படுவதை உறுதி செய்ய மாநில பாதுகாப்பு ஆணையம் (State Security Commission) ஏற்படுத்தப்படும்.**

89. குற்றங்களை செய்பவர்களை தண்டிப்பதற்காக இந்திய தண்டனைச் சட்டம் உள்ளது. அந்தச் சட்டத்தின் மூலமாகவே குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். **குண்டர் தடுப்புச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்றவை அரிதிலும் அரிதாக தவிர்க்க முடியாத சூழல்களில் மட்டுமே பயன்படுத்தப்படும். தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் ஒருவரை கைது செய்வதற்கான அதிகாரம் உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழுவுக்கு அளிக்கப்படும்.** அக்குழுவின் அனுமதி பெற்றுதான் தடுப்புக் காவல் சட்டத்தில் எவரையும் கைது செய்யமுடியும் என்பதால், இந்தச் சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படும்.

90. காவல்துறை மோதல் கொலைகள் **(Encounters)** முற்றிலுமாக தடுக்கப்படும்.

91. காவல்துறையினரின் பணி சிறக்க 8 மணிநேர பணிவரம்பு நிர்ணயிக்கப்படும். காவல்துறையின் அனைத்து நிலைகளிலும் உள்ளவர்களுக்கு 8 ஆண்டுகளுக்கு ஒரு படி பதவி உயர்வு வழங்கப்படும். காவல்துறையினரின் நலனை காக்க, 4–வது காவல் ஆணையம் ஏற்படுத்தப்படும்.

92. காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத்துறை ஆகியவற்றுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருவதுடன், கூடுதல் காவலர்களும் நியமிக்கப்படுவார்கள். இந்தத் துறைகளுக்கு நடப்பாண்டிற்கான வரவு–செலவுத்திட்டத்தில் ரூ.8,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## 32. ஒருதலைக் காதல் கொலைகளைத் தடுக்க தனிப்பிரிவு

93. தமிழ்நாட்டில் மாணவிகளும், இளம் பெண்களும் ஒருதலைக் காதல் காரணமாக கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுவது தொடர்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் 10க்கும் மேற்பட்டோர் இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். ஒருதலைக் காதலால் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிதி வழங்கப்படும்.

94. ஒருதலைக் காதல் படுகொலைகளால் தமிழகத்திற்கு ஏற்பட்ட அவப்பெயரைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பெண்களை போற்றிப் பாதுகாக்கும் மாநிலம் என்று பெருமையுடன் பேசப்படும் அளவுக்கு தமிழகத்தில் மகளிருக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

95. ஒருதலைக் காதல் கொலைகள் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையில், தனி காவல் பிரிவு ஏற்படுத்தப்படும். இப்பிரிவுக்கு பெண் ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர் தலைமை இயக்குநராக நியமிக்கப்படுவார். **மோசடித் திருமணங்களால் பெண்கள் பாதிக்கப்படுவதை தடுக்கவும், பள்ளி – கல்லூரி மற்றும் அலுவலகங்களுக்குச் செல்லும் பெண்கள் கேலி, கிண்டல்களுக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுக்கவும் இந்த தனிப் பிரிவு நடவடிக்கை எடுக்கும்.**

## 33. வருவாய் நிர்வாகம் – மாவட்டங்கள் எண்ணிக்கை 60

96. ‘சிறியதே அழகு’ என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். அதை உணர்ந்து தான் விழுப்புரம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில், அது செயல்பாட்டுக்கு வரும்.

97. விழுப்புரம் மாவட்டத்தைப் போன்று வேலூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, நாகை உள்ளிட்ட மாவட்டங்களைப் பிரித்து புதிய மாவட்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. அவற்றை ஏற்று, நிர்வாக வசதிக்காகவும், மக்கள் தங்களின் சேவைகளை விரைவாக பெறுவதை உறுதி செய்யவும், அதிக தொலைவுக்கு அலைவதைத் தடுக்கவும், **தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் மறுவரையறை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.**

98. **ஆந்திராவிலிருந்து பிரிக்கப்பட்ட தெலுங்கானா மாநிலத்தில் 10 மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. ஆனால், 2016ஆம் ஆண்டில் நிர்வாக வசதிக்காக 10 மாவட்டங்களும் பிரிக்கப்பட்டு மொத்தம் 31 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதன்பிறகுதான் அம்மாநிலத்தில் நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது.**

99. **தெலுங்கானாவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 11.29 லட்சம் மக்கள் இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் அதைவிட இருமடங்கு, அதாவது 22.59 லட்சம் பேர் உள்ளனர். உதாரணமாக, சென்னை மாவட்டத்தில் 46.46 லட்சம், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் தலா 40 லட்சம், திருவள்ளூர் மாவட்டத்தில் 38 லட்சம், விழுப்புரம் மாவட்டத்தில் 36 லட்சம் பேர் உள்ளனர். இந்த மாவட்டங்களை சரிவர நிர்வகிக்க முடியாததால்தான் சென்னை தவிர்த்த பிற வடமாவட்டங்கள் மிகவும் பின்தங்கியுள்ளன.**

100. **இச்சிக்கலுக்கு தீர்வுகாணும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 லட்சம் பேர் இருக்கும் வகையில் மாவட்டங்களின் எல்லைகள் பிரிக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும். தமிழக மாவட்டங்களின் எண்ணிக்கை 60ஆக உயர்த்தப்படும்.** இதற்காக, வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது. இக்குழுவினர் புதிய மாவட்டங்களை உருவாக்குவது குறித்து ஆய்வு செய்து, அடுத்த 6 மாதங்களில் அறிக்கை அளிப்பார்கள். அதன் அடிப்படையில் நடப்பு நிதியாண்டின் இறுதியில் புதிய மாவட்டங்கள் அறிவிக்கப்படும்.

101. வீட்டு மனைகளுக்கு பட்டா வழங்கும் நடைமுறை எளிதாக்கப்படும். 2018–19 ஆம் ஆண்டில் 3 லட்சம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதேபோல், 2019–20 ஆம் ஆண்டிலும் 3 லட்சம் இலவசப் பட்டாக்களை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

## 34. வறுமை ஒழிப்பு

102. இலவசங்களை வழங்குவதன் மூலம், வறுமையை ஒழிக்க முடியாது என்று தமிழக அரசு உறுதியாக நம்புகிறது. மீனை கொடுப்பதற்கு பதில் மீன்பிடிக்கக் கற்றுக்கொடு என்ற பழமொழிக்கு ஏற்றவகையில், அனைவருக்கும் தரமான கல்வியும், அதன் அடிப்படையிலான வேலைவாய்ப்பும் வழங்க வகை செய்யப்படும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்பதற்காக அடிப்படை வருமானம் வழங்கும் திட்டம் ரூ.10,500 கோடியில்

செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தனித்திட்டமாக செயல்படுத்தப்படும்.

103. அதே நேரத்தில், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள ஏழைகளும் பயனடைகிறார்கள். அதனால், அத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தும் வகையில், அவற்றுக்கு 2019–20 ஆம் ஆண்டில் ரூ.1,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 35. தொழில்துறை

104. தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பைப் பெருக்கவும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும் தொழில்துறை வளர்ச்சி மிகவும் அவசியமாகும். தொழில்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு உறுதிபூண்டிருக்கிறது.

1. தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய முன்வருபவர்களைச் சந்திக்க முதலமைச்சர், வாரம் 3 மணிநேரம் ஒதுக்குவார். அந்த நேரத்தில் முதலீட்டாளர்கள் முதலமைச்சரைச் சந்தித்து முதலீடுகள் குறித்துப் பேசலாம்.
2. தமிழகத்திற்கான புதிய தொழில்கொள்கை விரைவில் அறிவிக்கப்படும்.
3. புதிய தொழில் தொடங்குவதற்கான அனைத்து அனுமதிகளும் ஒற்றைச்சாளர முறையில் (Single Window System) வழங்கப்படும்.
4. புதிதாகத் தொழில் தொடங்குவோர் எதிர்கொள்ளும் தடைகள் முற்றிலும் களையப்படும். பலவிதமான உரிமங்களை ஒழித்து ஒற்றைப் பதிவுமுறை (Single Registration) ஏற்படுத்துதல், பதிவு செய்யும் நடைமுறையில் லஞ்சம், ஊழலை அறவே ஒழித்து, 3 வாரங்களுக்குள் அனைத்து பதிவு அனுமதிகளையும் வழங்குதல். தொழில்முனைவோருக்கான அனைத்துவிதமான கட்டணங்களையும் நீக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.
5. ரூ.100 கோடிக்கும் அதிக மதிப்புள்ள தொழில் திட்டங்களில் முதலீட்டாளர்களுக்கு உதவ முதலமைச்சரின் அலுவலகத்தில் முதலீட்டாளர்களுக்கு உதவி செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.
6. தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், கிடங்குகள் உள்ளிட்ட அனைத்துக்கும் கட்டிட அனுமதி உடனடியாக வழங்கப்படும். கட்டிட அனுமதி நடைமுறையில் ஊழலை அறவே ஒழித்து, எல்லாவிதமான விதிமுறைகளையும் முறையாக பரிசோதித்து, முழுமையான கட்டிட அனுமதி அதிகபட்சமாக 3 வாரங்களில் வழங்கப்படும்.
7. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், தங்களின் சொந்த பூமியான தமிழ்நாட்டில் தொழில்முதலீடு செய்ய வசதியாக, சிறப்புத்திட்டம் செயல்படுத்தப்படும். புதிய தொழில் தொடங்குவதற்கான நிலம் மானிய விலையில் வழங்கப்படும், அவர்களின் தொழில் திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி அளிக்கப்படும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதைப் பெருமையாகக் கருதும்நிலை உருவாக்கப்படும்.
8. தமிழகத்திலுள்ள அனைத்து தொழில்பேட்டைகளும் விரிவுபடுத்தி, மேம்படுத்தப்படும்.

## 36. தமிழகம் – 5 இடங்களில் ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள்

105. **இந்தியாவின் தொழில்வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழும் போதிலும், தொழில் நிறுவனங்கள் சென்னை மற்றும் அதையொட்டிய பகுதிகளில் மட்டுமே உள்ளன. தமிழகத்தின் பரவலான வளர்ச்சியை உறுதி செய்ய அனைத்துப் பகுதிகளிலும் தொழில் மண்டலங்கள் உருவாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 5 ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள் அமைக்கப்படும்.**

106. **தமிழ்நாட்டில் திருபெரும்பதூர் முதல் கும்மிடிப்பூண்டி வரையிலான பகுதிகள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக உருவெடுத்துள்ளன. இப்பகுதியையொட்டிய ஆந்திர மாநிலத்தின் ஸ்ரீசிட்டியும் சிறப்புப் பொருளாதார மண்டலமாக உருவெடுத்துள்ளது. அதேபோல், வேலூர் மாவட்டத்தையொட்டிய இருமாநில எல்லைகளிலும் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இரு மாநில எல்லைகளிலும் உள்ள தொழில் பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த தொழில்மண்டலம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

107. **இதுதவிர, தமிழகத்தின் கிழக்கு மேற்கு, வடக்கு, தெற்கு மண்டலங்களில் தலா ஒரு ஒருங்கிணைந்த தொழில் மண்டலம் அமைக்கப்படும். ஒவ்வொரு மண்டலமும் 5,000 ஏக்கர் முதல் 8,000 ஏக்கர் வரை பரந்து விரிந்திருக்கும். இதற்காக உழவர்களிடமிருந்து ஒரு ஏக்கர் நிலம் கூட கையகப்படுத்தப்படாது. ஏற்கெனவே உள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்களை மேம்படுத்தி ஒருங்கிணைந்த தொழில் மண்டலங்கள் அமைக்கப்படும்.**

108. புதிய தொழிற்சாலைகள் அதிக அளவில் ஏற்படுத்தப்படும் பகுதிகளையொட்டி துறைமுகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

109. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள்தான் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புக்கும் அதிக அளவில் பங்களிக்கின்றன. எனவே, இத்தகைய தொழிற்சாலைகளுக்கும், குடிசைத் தொழிலுக்கும் மானியம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் வழங்கப்படும்.

## 37. தொழில் முதலீட்டை ஈர்க்க சிறப்புத் திட்டம்

110. பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாடு 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனித் தனி பொருளாதார ஆணையரகங்களாக அறிவிக்கப்படும் என்றும், அதன் மூலம் தமிழ்நாட்டிற்கு அதிக முதலீட்டை ஈர்க்கமுடியும் என்றும், சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பா.ம.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இதேபோன்ற திட்டத்தை ஆந்திர அரசு நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.10.54 லட்சம் கோடி தொழில்முதலீடு ஈர்க்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 665 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இது பெரும் வெற்றியாகும்.

111. தமிழ்நாட்டில் கடந்த ஜனவரி மாதம் 23 மற்றும் 24 தேதிகளில் நடைபெற்ற இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மூன்று லட்சத்து 431 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்ய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். இந்த முதலீட்டைக் கொண்டு 304 தொழில் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்படவுள்ளன. எனினும், ஆந்திர மாநிலத்துடன் ஒப்பிடும்போது இந்த முதலீடு மிகமிக குறைவு ஆகும்.

112. **தமிழ்நாட்டில் தொழில்முதலீட்டை ஈர்க்கும் வகையில், தமிழகம் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனித்தனிப் பொருளாதார ஆணையரகங்களாக அறிவிக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் தலைமைச் செயலாளர் நிலையில் உள்ள அதிகாரி ஒருவர் பொருளாதார ஆணையர்களாக நியமிக்கப்படுவர். மண்டல அளவில் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதுதான் இந்த ஆணையரகங்களின் பணிகளாகும்.**

113. **ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள இயற்கை வளங்கள், தொழில் முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, அதற்கேற்ற வகையில் புதிய தொழில்களைத் தொடங்குதல், அதற்கான முதலீட்டை வெளிநாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஈர்த்தல் ஆகியப் பணிகளில் இந்த அமைப்பு ஈடுபடும்.**

114. இந்தப் பணிகளில் மண்டலப் பொருளாதார ஆணையர்களுக்கு உதவுவதற்காக, அரசு அதிகாரிகள் மற்றும் அந்த மண்டலத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் உள்ளடக்கிய ஆலோசனை அமைப்பு உருவாக்கப்படும். உலக அளவில் ஏற்படும் தொழில்முறை முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்து அவற்றை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி அரசுக்கு இந்த அமைப்பு பரிந்துரைக்கும்.

## 38. இளைஞர் நலன்

115. தமிழக மக்கள் தொகையில் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை மூன்றரை கோடி அதாவது, 45 விழுக்காடாகும். மக்கள் தொகையில் இளைஞர்கள் பெரும்பகுதியாக இருப்பது மக்கள் தொகையின் லாபப் பங்கு என்று அழைக்கப்படுகிறது. இந்த மனித வளத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்வதன் மூலமாகவே தமிழகம் அதிவேக வளர்ச்சியை எட்டமுடியும். இதற்காக, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அ. இளைஞர்களுக்கு முதல் முன்னுரிமையாக தரமான கல்வி வழங்கப்படும். பட்டப்படிப்புகளும் பட்டமேற்படிப்புகளும் பட்டம் என்ற காகிதத்தை வழங்கும் கல்வியாக இல்லாமல், வேலைவாய்ப்பை வழங்கும் கல்வியாக மாற்றப்படும்.

ஆ. பொறியியல் உள்ளிட்ட தொழில்நுட்பக் கல்வி பயிலும் இளைஞர்களில் 20 விழுக்காட்டினர் கூட வேலைபெறும் தகுதி உள்ளவர்களாக இல்லை. இவர்களை வேலைவாய்ப்புக்கு ஏற்றவர்களாக மாற்றும்நோக்குடன் திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்காக, 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.300 கோடி நிதி ஒதுக்கப்படும்.

இ. இளைஞர்களுக்கு அளிக்கப்படும் கல்வி, விரைவாக முன்னேறிவரும் பொருளாதாரத்தின் பரந்துபட்ட தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும், அதேவேளையில் தமிழ்ப் பண்பாட்டையும் உழைப்பின் மேன்மையையும் போற்றுவதில் ஆர்வம் கொண்டதாகவும், எதிர்காலக் கண்ணோட்டம் உடையதாகவும் இருக்கும் வகையில் மாற்றப்படும்.

ஈ. அரசாங்கத்திலோ அரசுக்கு வெளியிலோ இளைஞர்களுக்குக் கூலி வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவதை நம்பி மட்டுமே எந்த நாடும் முன்னேறியதில்லை. இளைஞர்கள் இடையிலான தொழில்முனைவுச் செயல்பாடு என்பதுதான் பொருளாதார வளர்ச்சிக்கும், செல்வச் செழிப்புக்கும் அடிப்படை இந்த ஆற்றலைக் கட்டவிழ்த்துவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

உ. பசுமைத் தொழிலில், சிறுதொழில்களுக்கும் குறுந்தொழில்களுக்கும் வாய்ப்புகள் கண்டறியப்படும்.

## 39. ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு

**116. தமிழ்நாட்டில் 31.12.2018 அன்றைய நிலவரப்படி 72 இலட்சத்து 26,792 பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலைக்காக காத்திருக்கிறார்கள். இவர்கள் தவிர, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யாமல், 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்புக்காக காத்திருக்கின்றனர். படித்த இளைஞர்களுக்கு வேலை வழங்க வேண்டியது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கடமை என்று இந்த அரசு கருதுகிறது. அவர்களுக்கு வேலைவழங்கும் நோக்குடன் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்காக, கீழ்க்கண்டவாறு சிறப்புத்திட்டம் ஒன்றை தமிழக அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

1. **சர்வதேச தளவாடக் கிடங்கு மையம் (International Warehousing Hub):** தமிழ்நாட்டில் உள்ள 6 பெரிய துறைமுகங்கள் மற்றும் 20 சிறிய துறைமுகங்களை இணைத்து தமிழகம் உலகின் தளவாடக் கிடங்கு மையமாக மாற்றப்படும். துறைமுக நகரங்கள் அனைத்திலும் அனைத்து வசதிகளும் கொண்ட கிடங்குகள் ஆயிரக்கணக்கில் உருவாக்கப்படும். இதனால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி அதிகரிக்கும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 லட்சம் பேருக்கு வேலை கிடைப்பது உறுதிசெய்யப்படும்.

2. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து சென்னையில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். கோவை மற்றும் திருப்பூரில் ஆடை சார்ந்த தொழில்களும், நீலகிரி, கன்னியாகுமரி, திண்டுக்கல், நாமக்கல், தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சுற்றுலா சார்ந்த தொழில்களும் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் 2 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்.

3. உலக மருத்துவ கவனிப்பு மையமாக தமிழகத்தை மாற்றுதல், சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களை மருத்துவச் சுற்றுலா நகரங்களாக மாற்றுதல், மருத்துவம்

சார்ந்த அயல்பணி வணிக மையமாக (Health Care BPO) தமிழகத்தை மாற்றுதல், தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளை அமைத்து பயிற்சிபெற்ற செவிலியர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புதல் ஆகியவற்றின் மூலம் ஐந்து ஆண்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 20 லட்சம் பேருக்கு வேலைவழங்கப்படும்.

4. தமிழ்நாட்டில் இருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் தகவல்தொழில்நுட்பம், சுற்றுலா, ஆடை தயாரிப்பு உள்ளிட்ட பொருட்கள் மற்றும் சேவைத்துறை மூலம் பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும்.

5. படித்த இளைஞர்களில் சுயதொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் தாங்கள் தொடங்கவுள்ள தொழிலுக்கான திட்ட அறிக்கை மற்றும் அதற்குத் தேவைப்படும் முதலீடுகள் குறித்த விவரங்களுடன் விண்ணப்பித்தால், அவர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ரூ.5 லட்சம் வரை கடன் பெற்றுத் தர வழிவகை செய்யப்படும்.

ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதற்கான இந்தப் பணிகளை மேற்கொள்ள தனி துறை உருவாக்கப்படும். இத்துறை முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். இத்துறைக்கான அலுவலகங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்காக தொடரா செலவினமாக (Non Recurring Expenditure) ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

# முதன்மைத் துறை

## 40. வேளாண்மை

117. 2019-20ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் அளிக்கப்படும் 10 அம்சங்களில் வேளாண்மைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. வேளாண் வளர்ச்சிக்காக எந்த அளவுக்கு புதிய திட்டங்களைச் செயல்படுத்த முடியுமோ, அத்தனை புதிய திட்டங்களை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்துறைக்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

118. உழவர்கள் கடன் சுமையில் சிக்குவதை தவிர்க்கவும், வேளாண்மையை இலாபம் தரும் தொழிலாக மாற்றவும், சிறு, குறு உழவர்களுக்கு மூலதன மானியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

119. மூலதன மானியத் திட்டத்தின்படி ஒவ்வொரு சிறு, குறு விவசாயிக்கும் ஒரு ஏக்கருக்கு, ஒரு பருவத்திற்கு ரூ.5,000 வீதம் ஆண்டுக்கு இரு பருவங்களுக்கு ரூ.10,000 மானியம் வழங்கப்படும். இதை அரசுக்கு திரும்பச் செலுத்தத் தேவையில்லை. இதன் மூலம் உழவர்களுக்கு உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்ற பா.ம.க.வின் வாக்குறுதி நிறைவேற்றப்படும்.

120. 2019-20 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.13,000 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும். உழவர்களின் நலன் கருதி பயிர்க்கடனுக்கு 10% வட்டி மானியம் வழங்கும்

திட்டம் செயல்படுத்தப்படும். அதன்படி ரூ.1 லட்சம் கடன் வாங்குபவர்கள் ரூ.90,000 திருப்பிச் செலுத்தினால் போதும்.

121. அனைத்துப் பயிர்களுக்கும் மறுமுறை பயன்படுத்தமுடியாத பன்னாட்டு நிறுவனங்களின் விதைகளை பயன்படுத்தும் முறைக்கு முடிவுகட்டப்பட்டு, அரசின் தொழில்நுட்ப உதவியுடன் விவசாயிகளே விதைகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படும்.

122. **விவசாய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு டிராக்டர் இலவசமாக வழங்கப்படும். இதை விவசாயிகள் உழவுப் பணிகளுக்காக கட்டணமின்றி பயன்படுத்திக் கொள்ளலாம்.**

123. **நீர்ப்பாசனத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான செலவில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படும்.**

124. வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு கடந்த காலங்களில் இல்லாத அளவாக ரூ.43,000 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

## 41. ரூ.1 லட்சம் கோடியில் நீர்ப்பாசன நான்காண்டுத் திட்டம்

125. **தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படாததுதான் தமிழக விவசாயிகளின் இன்றைய அவலநிலைகளுக்குக் காரணம் ஆகும். வேளாண் துறை வளர்ச்சியில் மத்தியப்பிரதேசம்தான் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.**

126. **வேளாண்துறை வளர்ச்சியில் மத்தியப்பிரதேசம் முன்னணியில் இருப்பதற்குக் காரணம் அங்கு செயல்படுத்தப்படும் பாசனத் திட்டங்கள்தான். மத்தியப்பிரதேசத்தில் 94,55,000 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி செய்துதரப்பட்டுள்ளது. இந்தியாவின் பாலைவன மாநிலம் என்று அழைக்கப்படும் ராஜஸ்தானில் 76,50,000 ஹெக்டேர் நிலங்களில் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 26,79,000 ஹெக்டேர் நிலங்கள் மட்டுமே பாசன வசதி பெற்றுள்ளன.**

127. **தமிழ்நாட்டின் பாசனப் பரப்பை அடுத்த 4 ஆண்டுகளில் 50 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.1 லட்சம் கோடியில் நீர்ப்பாசன நான்காண்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி நடப்பாண்டில் பாசனத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ.25,000 கோடி வேளாண் நிழல் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.**

128. இத்திட்டத்தின்படி நடப்பாண்டில் அத்திக்கடவு – அவினாசித் திட்டத்திற்கு ரூ.3,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

129. காவிரி, சரபங்கா, திருமணிமுத்தாறு கால்வாய் இணைப்புத் திட்டத்திற்கு ரூ.1,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

130. பாலாறு பாசனத் திட்டத்திற்கு ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

131. தாமிரபரணி – நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கு ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

132. காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு ரூ.4,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

133. நந்தன் கால்வாய் திட்டம் மற்றும் தென்பெண்ணை – துரிஞ்சலாறு இணைப்புத் திட்டத்திற்கு ரூ. 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 42. வேளாண்துறையில் 30 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள்

134. **தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் இன்றைய நிலையில் 1.40 கோடி இளைஞர்கள் வேலையில்லாமல் தவித்து வருகின்றனர். ஊரகப் பகுதிகளில் வேலை கிடைக்காததால், அவர்கள் நகரங்களுக்கு இடம்பெயருகின்றனர். அவ்வாறு இடம்பெயர்ந்தாலும் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. இதை மாற்றி கிராமப்புறங்களில் வேளாண்துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.**

135. **தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படவிருக்கும் நீர்ப்பாசன பெருந்திட்டங்கள், வேளாண் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், கூட்டுறவு உணவகங்கள், நீரா விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 30 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் இளைஞர்களுக்கு நல்ல ஊதியத்துடன் கூடிய வேலை கிடைக்கும், வேலை தேடி நகரப்பகுதிகளுக்கு இடம்பெயர்வது தவிர்க்கப்படும்.**

## 43. வேளாண் விளைபொருட்கள் விலை நிர்ணய ஆணையம்

136. **விவசாயிகளுக்கு போதிய கொள்முதல் விலை கிடைக்கும் வகையில் தமிழகத்தில் விளையும் அனைத்து வகை உணவு தானியங்களுக்கும் மாநில அரசே விலை நிர்ணயிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணையம் அமைக்கப்படும்.**

137. **வேளாண் விளை பொருள் விலை நிர்ணய ஆணையத்தில் மாநில நிதித்துறை, வேளாண்துறை, உணவுத்துறை ஆகியவற்றின் அதிகாரிகளுடன் உழவர் சங்கப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள்.**

138. **பயிர்களின் உற்பத்திச் செலவை கணக்கிட்டு, அத்துடன் 50 விழுக்காடு இலாபம் சேர்த்து, கொள்முதல் விலையை விளைபொருள் விலைநிர்ணய ஆணையம் தீர்மானிக்கும்.**

## 44. வேளாண் விளைபொருள் கொள்முதல் ஆணையம்

139. **தமிழ்நாட்டில் உள்ள உழவர்களுக்கு அதிக இலாபம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அனைத்து வகை உணவுதானியங்களுக்கான கொள்முதல் விலையை மாநில அரசே நிர்ணயிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக வேளாண் விளைபொருள் கொள்முதல் வாரியம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்படும்.**

140. **2018–19 ஆண்டில் ஒரு டன் கரும்புக்கான கொள்முதல் விலை ரூ.5,120ஆக நிர்ணயிக்கப்படும். தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு வேளாண் விலை பொருள் கொள்முதல் வாரியம் மூலமாகவே உழவர்கள் கரும்பு வழங்கமுடியும். கரும்பு கொள்முதல் செய்யப்பட்ட 30 நாட்களில் கொள்முதல் வாரியம் மூலமாகவே உழவர்களின் வங்கிக் கணக்கில் கொள்முதல் விலை வரவு வைக்கப்படும்.**

141. **2019–20 ஆம் ஆண்டில் ஒரு குவிண்டால் நெல்லுக்கான கொள்முதல் விலை ரூ.2,911 என நிர்ணயிக்கப்படும்.**

## 45. சென்னை – சேலம் 8 வழிச் சாலைத் திட்டம் கைவிடப்படும்

142. சென்னையிலிருந்து சேலம் வரை புதிய எட்டு வழி பசுமை சாலை அமைப்பதற்காக சுமார் 7,000 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டால், 10,000 குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. வளர்ச்சி என்பது வாழ்வாதாரங்களை அழித்து மேற்கொள்ளப்படக்கூடாது என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. எனவே, மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சென்னை – சேலம் பசுமை சாலைத் திட்டம் கைவிடப்படும்.

143. தமிழ்நாட்டில் புதிய எட்டுவழிச் சாலைத்திட்டங்களுக்கு அதற்கான தேவைகளின் அடிப்படையில், மக்களிடம் கருத்துக்கேட்பு கூட்டங்கள் நடத்தி அனுமதி அளிக்கப்படும்.

## 46. ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்குத் தடை

144. தமிழ்நாட்டில் நான்காவது ஹைட்ரோகார்பன் திட்டம் திருவாரூர் மாவட்டம் திருக்கார வாசலில் 471.19 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் செயல்படுத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. ஏற்கெனவே, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் 85 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு மண்டலத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை செயல்படுத்துவதற்கான உரிமம் ஓ.என்.ஜி.சி நிறுவனத்திற்கும், கடலில் 170 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான இரு உரிமங்கள் வேதாந்தா குழுமத்திற்கும் வழங்கப் பட்டுள்ளன. காவிரி பாசன மாவட்டங்களைச் சீர்குலைக்கும் மத்திய அரசின் சதி இத்துடன் ஓயவில்லை. இந்த ஆண்டு இறுதியில் காவிரி டெல்டாவில் 1863.24 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஹைட்ரோ கார்பன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான இரு உரிமங்கள் ஏலம் மூலம் வழங்கப்படவுள்ளதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

145. ஹைட்ரோ கார்பன் திட்டத்தை தமிழக அரசின் அனுமதி இல்லாமல் செயல்படுத்த முடியாது என்று மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டங்களுக்கு மக்களும், உழவர் அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால், அவற்றுக்கு தடை விதிப்பது என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

146. தமிழ்நாட்டில் எண்ணூர் – நாகப்பட்டினம், நாகப்பட்டினம் – மதுரை, நாகப்பட்டினம் – தூத்துக்குடி, திருவள்ளூர் – பெங்களூர் ஆகிய 4 வழித்தடங்களில் 1,175 கிலோமீட்டர் நீளத்திற்கு எரிவாயு குழாய்ப் பாதை அமைக்க இந்தியன் ஆயில் நிறுவனம் முடிவு செய்திருக்கிறது. இத்திட்டத்தால் விளைநிலங்கள் பாதிக்கப்படும் என்பதால் இதற்கு அளிக்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

143. இத்திட்டத்தை மாற்றியமைத்து விளைநிலங்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் செயல்படுத்த இந்தியன் ஆயில் நிறுவனம் முன்வந்தால், அதற்கு அனுமதி தருவது குறித்து அரசு ஆராயும்.

## 47. மணல் குவாரிகள் இல்லாத தமிழ்நாடு

**144. தமிழகத்தின் முக்கிய ஆறுகளில் மொத்தம் 48 மணல் குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. அதிகபட்சமாக 3 அடி ஆழத்திற்கு மட்டுமே மணலை அள்ளவேண்டும்; மணல் அள்ள எந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது என நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தாலும், அவை பின்பற்றப்படவில்லை. பல இடங்களில் 60 அடி ஆழம் வரை மணல் அள்ளப்படுவதால் சுற்றுச்சூழல் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் நிலத்தடி நீர் பாதாளத்திற்கு சென்று விட்டது.**

**145. மணல் குவாரிகளில் அளவுக்கு அதிகமாக மணல் அள்ளப்படுவதால் ஏற்படும் பாதிப்புகளை பசுமை கட்சியான பாட்டாளி மக்கள் கட்சி நன்றாகவே உணர்ந்திருக்கிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சி, வரும் மார்ச் 31ஆம் தேதியுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து மணல் குவாரிகளையும் மூட முடிவு செய்துள்ளது. வரும் ஏப்ரல் மாதம் முதல் தமிழ்நாட்டில் மணல் குவாரிகள் இருக்காது. தமிழ்நாடு மணல் குவாரிகள் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்படும். இதன் மூலம் சுற்றுச்சூழலும் நிலத்தடி நீர் மட்டமும் பாதுகாக்கப்படும். இது வேளாண் வளர்ச்சிக்கு பெருமளவில் உதவியாக இருக்கும். அதேநேரத்தில் வெளிநாட்டு மணல் இறக்குமதி, செயற்கை மணல் (M-Sand) தாராளமாக கிடைக்க வகை செய்வது ஆகியவற்றின் மூலம் கட்டுமானத் தொழில் பாதிக்கப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படும்.**

## 48. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்

**146. தமிழக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகியவையும், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவிக்கப்படும்.**

147. இந்த மாவட்டங்களில் பூமிக்கு அடியில் மீத்தேன் உள்ளிட்ட எரிவாயுக்களும், கனிமங்களும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அவற்றை எடுப்பதற்காக வேளாண் விளை நிலங்களை நாசமாக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் முயற்சிகள் முறியடிக்கப்படும்.

## 49. வேளாண் சந்தைக்கொள்கை – தனி அமைச்சகம்

**148. வேளாண் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்குடன், அண்டை மாநிலமான கர்நாடகத்தில் வேளாண் சந்தைக்கு தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்பின்பற்றி தமிழகத்திலும் வேளாண் சந்தைக்கு புதிய அமைச்சகம் உருவாக்கப்படும். அதற்கு தனி அமைச்சர் நியமிக்கப்படுவார்.**

**147. புதிய வேளாண் சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும், விளை பொருட்களை சந்தைப் படுத்துவதில் உள்ள முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்காகவும், புதிய வேளாண் சந்தைக் கொள்கை வெளியிடப்படும்.**

## 50. புதிய அமைச்சகங்கள்

**148. தமிழ்நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் சம்பந்தப்பட்ட துறையாக வேளாண்துறை திகழ்கிறது. வேளாண்மை சார்ந்த அனைத்துப் பணிகளையும் வேளாண்துறை அமைச்சகத்தால் மட்டும் மேற்கொள்ள இயலாது. எனவே, வேளாண்துறையை மூன்றாகப் பிரித்து, வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் சந்தைத்துறை ஆகிய அமைச்சகங்கள் ஏற்படுத்தப்படும். அதேபோல், பொதுப்பணித்துறையைப் பிரித்து நீர்வள மேலாண்மை என்ற புதிய அமைச்சகம் ஏற்படுத்தப்படும். வேளாண் துறை சார்ந்த பணிகளைக் கவனிப்பதற்கு மட்டும் மொத்தம் 4 அமைச்சகங்கள் செயல்படும். ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் தனித்தனி அமைச்சர்கள் என மொத்தம் 4 அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள்.**

## 51. கால்நடை பராமரிப்பு

149. கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கு தேவையான வைக்கோல், தீவனம் போன்றவை மானிய விலையில் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

150. பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று பால் கொள்முதல் விலை உயர்த்தப்படும். எருமைப்பாலுக்கு லிட்டருக்கு ரூ. 43–ம், பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.33–ம் கொள்முதல் விலையாக வழங்கப்படும்.

151. கால்நடைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.1,900 கோடியாக உயர்த்தப்படும். இது கடந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டைவிட, ரூ.150 கோடி அதிகமாகும்.

## 52. மீன்வளம்

152. மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்க 2019–20 ஆம் ஆண்டில் ரூ.500 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்படும்.

153. மீனவர்கள் விசைப்படகு வாங்குவதற்கு 60 விழுக்காடு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

154. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்ந்து நடைபெறுகிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்படும் வரை, அவர்களின் குடும்பத்திற்குத் தேவையான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும்.

155. **31.12.2018 வரை இலங்கைப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 180 படகுகளில் 48 படகுகளைத்தவிர மீதமுள்ள படகுகள் சேதமடைந்துவிட்டன. ஓரளவு சேதமடையாமல் உள்ள 48 படகுகளில் 28 படகுகளை இலங்கை அரசு அண்மையில் விடுவித்தது. மீதமுள்ள 20 படகுகளை மீட்கவும், மீட்கப்பட்ட 24 படகுகளை சீரமைப்பதற்கான முழு செலவை வழங்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.**

156. **இலங்கை கடற்பகுதிக்குள் எல்லை தாண்டி வந்து மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.20 கோடி வரை அபராதம் விதிக்க இலங்கை அரசு சட்டம் இயற்றியுள்ளது. இதனால் தமிழக மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இலங்கை அரசிடம் பேசி இச்சிக்கலுக்கு தீர்வுகாணும்படி மத்திய அரசுக்கு தமிழக அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்.**

## 53. காவிரி ஆணையத்திற்கு கூடுதல் அதிகாரம்

157. **காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டு 11 ஆண்டுகள் கழித்து, கடந்த ஆண்டு மே மாதம் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது. எனினும், காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டிலும், கர்நாடகத்திலும் கட்டப்பட்டுள்ள அணைகளை நிர்வகிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு இல்லை.**

**158. காவிரி அணைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லாமல் காவிரி பிரச்சினையைத் தீர்க்க காவிரி மேலாண்மை ஆணையத்தால் இயலாது. எனவே, காவிரி அணைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் மேலாண்மை ஆணையத்திற்கு வழங்கப்படவேண்டும். மத்தியில் புதிய அரசு அமைந்தவுடன் இதுகுறித்து பேச்சுநடத்தி காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக சட்ட அமைச்சர் தலைமையில் அமைச்சர்கள் குழு அமைக்கப்படுகிறது. இதில், வேளாண்மை, நீர்வள மேலாண்மை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் அமைச்சர்களும் இடம்பெறுவார்கள்.**

159. முல்லைப்பெரியாற்றின் நீர்மட்டத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் 152 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

160. பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைகளைக் கட்டவும், ஏற்கெனவே கட்டப்பட்ட தடுப்பணைகளின் உயரத்தை அதிகரிக்கவும் ஆந்திர அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் முறியடிக்கப்படும்.

161. பவானி ஆற்றிலும், பாம்பாற்றிலும் தடுப்பணை கட்டுவதற்கான கேரள அரசின் திட்டத்தை முறியடிக்க சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 54. சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலம்

162. கிராமங்களை மையப்படுத்திய தொழில் வளர்ச்சியை உருவாக்க சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலங்களை அமைப்பது அவசியம் ஆகிறது. இதில் பின்வரும் தொழில்கள் அடங்கும். ஊரகப் பொருளாதாரத்தின் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைத் துறைகளின் செயல்பாடுகள் பின்வருவனவாக வரையறுக்கப்படும்.

163. முதல்நிலைச் செயல்பாடுகள்: உணவுப் பயிர்கள், பணப்பயிர்கள், தீவனப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், தோட்டக்கலைப் பயிர்கள், தோட்டங்கள், கால்நடைத் துறை, மீன்பிடித் தொழில், கோழி, காடை, முயல் வளர்ப்பு.

164. இரண்டாம்நிலைச் செயல்பாடுகள்: உணவுப் பதப்படுத்துதல், வேளாண் தொழில்கள், பால்பண்ணைத் தொழில், கருவிகள் உற்பத்தி.

165. மூன்றாம் நிலைச் செயல்பாடுகள்: பொருள்களைக் கிடங்குகளில் சேமித்தல், பொருள் போக்குவரத்து, குளிர்பதனத் தொழில், இடுபொருள்கள் வழங்கல், தொழில்நுட்பம்.

166. முதல்நிலை, இரண்டாம்நிலை, மூன்றாம் நிலை ஆகிய இந்த மூன்று துறைகளுமே, மாநிலத்தின் சிறப்பு வேளாண் – பொருளாதார மண்டலங்களை அமைக்கும்போது செயலாக்கப்படுகிற, வேளாண்மைச் செயல்பாட்டை மையமாகக் கொண்ட வளர்ச்சிக் கொள்கைத் திட்டத்தில் இணைந்திருக்கும்.

## 55. தகவல் தொழில்நுட்பம்

**167. உலக அளவில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள மென்பொருள் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் முன்னறிவிப்பின்றி பணிநீக்கம் செய்யப்படுகின்றனர். கடந்த சில ஆண்டுகளில் சுமார் 60,000 பேர் வேலை இழந்துள்ளனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. இதுதொடர்பாக தமிழ்நாட்டில் உள்ள மென்பொருள் நிறுவனங்களின் நிர்வாகிகளை தமிழக அரசு அழைத்துப் பேசி இச்சிக்கலுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கும்.**

168. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதுசார்ந்த சேவைகளில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதற்கு, தமிழகத்தில் திறமையான தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒரு காரணம் என்றால், உலக அளவில் ஒப்பிடும்போது, தமிழகத்தில் இந்தச் சேவை மிகக்குறைந்த செலவில் கிடைப்பதுதான் மற்றொரு காரணமாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதுசார்ந்த சேவைகளைப் பெருக்க திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்படும்.

169. ஓசூரில் தொடங்கி கிருஷ்ணகிரி, தருமபுரி வரையுள்ள பகுதி தகவல் தொழில்நுட்ப தாழ்வாரமாக மாற்றப்படும். பெங்களூரு நகரத்தின் நீட்சியாக இப்பகுதிகளில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படுவதால், வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

170. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த சேவை வழங்கும் நிறுவனங்கள், அயல்பணி வணிக (BPO) நிறுவனங்கள் ஆகியவற்றை வட்டத் தலைநகரங்களுக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். வட்டத் தலைநகரங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொடங்க முன்வருவோருக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்கப்படும்.

171. கிராமப்புறங்களில் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பொது சேவை மையங்கள் அமைக்கப்படும்.

172. சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஓசூர் ஆகிய நகரங்களில் மட்டுமே தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தக்கட்டமாக, வேறு எந்தெந்த நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம் என்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

## 56. கைத்தறி மற்றும் துணிநூல்

173. **கூட்டுறவுச் சங்கங்களிலும், பொதுத்துறை வங்கிகளிலும் நெசவாளர்களுக்கு வங்கிகள் வழக்கம்போல் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.**

174. **தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், முதல் கட்டமாக கடந்த 2016–17ஆம் ஆண்டு காஞ்சிபுரம் – ஆரணியிலும், 2017 – 18 ஆம் ஆண்டில் கும்பகோணம் – திருபுவனம் பகுதியிலும் அறிவிக்கப்பட்ட பட்டுப்பூங்காக்களின் கட்டுமானப் பணிகள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் அவை திறக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

175. பட்டு நெசவாளர்களுக்கு நடப்பாண்டில் 10 விழுக்காடு கூலி உயர்வு வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் 10 விழுக்காடு கூலி உயர்வு வழங்குவது வாடிக்கையாக்கப்படும்.

## 57. நெடுஞ்சாலைகள்

176. தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை நெடுஞ்சாலைகளாகும். மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட சாலைகளை புதுப்பிக்கவும், தேவையான இடத்தில் புதிய சாலைகளை அமைக்கவும் வசதியாக, நெடுஞ்சாலைத் துறைக்கு நடப்பு ஆண்டில் ரூ.15,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

177. **அனைத்து சாலைகளும் அடுத்த 5 ஆண்டுகளில் இருவழிச் சாலைகளாக மாற்றப்படும்.** முதல்கட்டமாக 2017–18 ஆம் ஆண்டில் 3,000 கி.மீ. நீள சாலைகளும் 2018–19ஆம் ஆண்டில் 2,000 கிலோமீட்டர் சாலைகளும் இருவழிச் சாலைகளாக மாற்றப்பட்டன. 2019–20ஆம் ஆண்டில் மேலும் 2,000 கி.மீ. நீள சாலைகள் தரம் உயர்த்தப்படும்.

178. தமிழ்நாட்டில் உள்ள 11,752 கி.மீ. நீள மாநில சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்படும். முதற்கட்டமாக இதுவரை 2,000 கி.மீ. நீளச் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ள நிலையில், 2019–20ஆம் ஆண்டில் மேலும் 2,000 கி.மீ. நீள சாலைகள் நான்குவழிச் சாலைகளாக மாற்றப்படும்.

179. அனைத்து மாவட்டத் தலைநகரங்களும் மாநிலத் தலைநகர் சென்னையுடன் தேசிய நெடுஞ்சாலைகள் மூலம் இணைக்கப்படுவதை இந்த அரசு உறுதிசெய்யும். இதுதொடர்பாக, மத்திய அரசுடன் பேச்சுநடத்த நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் தலைமையிலான குழு விரைவில் தில்லி செல்லும்.

180. **தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்படும் சாலைகள், அடுத்த 5 ஆண்டுகளுக்கு அதே தரத்தில் இருப்பதை அப்பணியை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் உறுதி செய்யவேண்டும். புதிதாக அமைக்கப்பட்ட சாலை தரமற்றதாக இருந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ, அதற்குரிய இழப்பீடு அந்த ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும். அதுமட்டுமின்றி, அந்த ஒப்பந்ததாரரின் பெயர் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என்பதால், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கான ஒப்பந்த நடைமுறைகளில் அவரால் பங்கேற்க முடியாது.**

## 58. துறைமுகங்கள்

181. இந்தியாவின் மிகநீளமான கடல் எல்லையைக் கொண்டுள்ள தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் துறைமுகங்களை அமைக்க தமிழக அரசு உறுதிபூண்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலை அடுத்த இனயம் பகுதியில் ரூ.21,000 கோடி செலவில் அமைக்கப்படவிருந்த புதிய துறைமுகத்தை இப்போது கன்னியாகுமரி பகுதியில் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு வழங்கும்.

182. சென்னை துறைமுகத்தின் வளர்ச்சி நாளுக்குநாள் குறைந்துவரும் சூழலில், வளர்ச்சிக்குத் தடையாக உள்ள முட்டுக்கட்டைகளை அகற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்கும். மதுரவாயல் – சென்னை துறைமுகம் சாலைத் திட்டத்தைச் செயல்படுத்த விதிக்கப்பட்ட தடையை அகற்றி, அத்திட்டம் நிறைவேற தமிழக அரசு உதவும்.

183. கடலூர் துறைமுகத்தை ரூ.500 கோடி செலவில் விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2019–20 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் துறைமுகம் ரூ.500 கோடியில் விரிவுபடுத்தப்படும்.

## 59. போக்குவரத்து – பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்படும்

184. தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இழப்பை கட்டுப்படுத்தும் நோக்குடன் கடந்த ஆண்டு பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்பட்டன. ஆனால், அதற்குப் பிறகும் பெரும்பான்மையான அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து இழப்பை எதிர்கொண்டு வருகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்தவும், இலாபத்தில் இயங்கச் செய்யவும் பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவற்றின் விவரம்:

அ. **பேருந்துகளை மிகச் சிறப்பான முறையில் பராமரிப்பதன் மூலம் ஒரு லிட்டர் டீசலுக்கு 5.5 கி.மீ முதல் 6.00 கி.மீ வரை இயங்கச் செய்வது உறுதி செய்யப்படும். இதனால் போக்குவரத்துக் கழகங்களின் எரிபொருள் செலவு 25% வரை மிச்சப்படுத்தப்படும். இதனால் கிடைக்கும் பயன்கள் கட்டணக் குறைப்பாக மக்களுக்கு வழங்கப்படும்.**

ஆ. **அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் ஒரே வழித்தடத்தில் இயங்காத வகையில் பார்த்துக்கொள்ளப்படும். அரசுப் பேருந்துகளுக்கென குறிப்பிட்ட வழித்தடங்களும், தனியார் பேருந்துகளுக்கென குறிப்பிட்ட வழித்தடங்களும் ஒதுக்கப்படும்.**

இ. **சென்னையில் இருந்து தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களுக்கும், தமிழகத்தில் உள்ள மற்ற முக்கிய நகரங்களுக்கு இடையிலும் தனியார் ஆம்னி பேருந்துகளுக்கு இணையான வசதிகளுடன் கூடிய சொகுசுப் பேருந்துகள் குறைந்த கட்டணத்தில் இயக்கப்படும்.**

185. சென்னையில் மெட்ரோ சேவை விரிவுபடுத்தப்படும். கோவை, மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் மெட்ரோ இரயில்கள் அறிமுகப்படுத்தப்படும்.

186. தமிழகத்தின் கிழக்குக் கடலோர நீர்வழிப்பாதைகள் வளர்த்தெடுக்கப்பட்டு அதைப் பயன்பாட்டுக்குரிய பொதுமக்கள் பயண வசதியாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 60. மாநில நெடுஞ்சாலைகளில் சுங்கக்கட்டணம் இரத்து

**187. சாலைகளில் பயணம் செய்வோர் எரிபொருளுக்காக செலவிடும் தொகையில் பாதியை சுங்கக்கட்டணங்களுக்காக செலவிடவேண்டியுள்ளது. இந்தச் சுமையைக் குறைக்கும் வகையில், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் சுங்கக்கட்டணம் வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் ரத்து செய்யப்படும்.**

**188. மத்திய அரசுடன் பேசி தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக்கட்டண வசூல் முறைப்படுத்தப்படும். சாலை அமைப்பதற்காக செய்யப்பட்ட முதலீடு ஈட்டப்பட்ட சாலைகளில் சுங்கக் கட்டணம் தற்போதுள்ள கட்டணத்தில் 40 விழுக்காடு மட்டுமே வசூலிக்கப்படும்.**

## 61. கல்லூரிகள் வாயிலாக ஓட்டுநர் உரிமம்

189. பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ–மாணவியர் உரிமம் இன்றி வாகனம் ஓட்டுவது நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இழப்பீடுகளைப் பெற்றுத்தருவது சிக்கலாகிறது. இந்த நிலையை மாற்றும் நோக்குடன், மாணவ–மாணவியருக்கு கல்லூரிகள் வாயிலாக ஓட்டுநர் உரிமம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது.

190. **அதன்படி, கல்லூரிகளில் பயிலும் 18 வயது நிறைவடைந்த மாணவ–மாணவியர் இருசக்கர மற்றும் 4 சக்கர ஊர்திகளை ஓட்டிப் பழகுவதற்கான உரிமத்தை கல்லூரிகள் மூலம் ஆன்லைனில் பெறமுடியும். அவர்கள் வாகனங்களை ஓட்டிப்பழகியதற்குப் பிறகு முறைப்படியான விண்ணப்பம்கோரி கல்லூரி வாயிலாக விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிப்போருக்கு 6 மாதங்களுக்கு ஒருமுறை தேர்வு நடத்தி உரிமம் வழங்கப்படும். கல்லூரி வளாகத்திலேயே வாகனம் ஓட்டும் தேர்வு நடத்தப்படும் என்பதால், அவர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வரத்தேவையில்லை. இந்தமுறை மிகவும் எளிமையானது என்பதுடன், உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டும் வழக்கமும் பெருமளவில் குறையும்.**

## 62. சென்னை மெட்ரோ ரயில் – இரண்டாம்கட்டம்

191. சென்னை பெருநகர தொடர்வண்டித் திட்டம் முதல்கட்டமாக சென்னை சென்ட்ரல் முதல் ஆலந்தூர் வரையிலும், வண்ணாரப்பேட்டையிலிருந்து விமான நிலையம் வரையிலும் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இவற்றில் சென்னை சென்ட்ரல் முதல் ஆலந்தூர் வரையிலான பாதை செயல்பாட்டுக்கு வந்துவிட்டது. வண்ணாரப் பேட்டையிலிருந்து விமானம் நிலையம் வரையிலான பாதையில், டி.எம்.எஸ். முதல் விமான நிலையம் வரையிலான பாதையில் போக்குவரத்து தொடங்கப்பட்டுவிட்டது.

**192. டி.எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ தொடர்வண்டிப் பாதை போக்குவரத்துக்கு தயாராக உள்ளது. இப்பாதை அடுத்த சில நாட்களில் தொடங்கி வைக்கப்படும். வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோநகர் வரையிலான முதல்கட்ட மெட்ரோ ரயில் தொடர்வண்டிப் பாதையின் விரிவாக்கம் அடுத்த சில மாதங்களில் தொடங்கப்படும்.**

**193. சென்னைப் பெருநகர தொடர்வண்டித் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. இரண்டாம்கட்டத்தில் மொத்தம் 107.55 கிலோமீட்டர் நீளத்திற்கு மொத்தம் 3 தொடர்வண்டிப் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:**

**அ. சென்னை மாதவரத்தில் தொடங்கி சேத்துப்பட்டு – மந்தைவெளி – பெருங்குடி – சோழிங்கநல்லூர் – சிறுசேரி – சிப்காட் வரை 45.77 கிலோமீட்டர் தொலைவுக்கு முதல் பாதை அமைக்கப்படும். இதில், மொத்தம் 50 தொடர்வண்டி நிலையங்கள் இடம்பெறும்.**

**ஆ. சென்னை கடற்கரை கலங்கரை விளக்கத்தில் தொடங்கி, ஆழ்வார்பேட்டை – நந்தனம் – கோடம்பாக்கம் – வடபழனி – விருகம்பாக்கம் – இளங்கோநகர் – கோயம்பேடு தானிய சந்தை வழியாக கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் வரை இரண்டாம் பாதை அமைக்கப்படும்.** இப்போதை 17.12 கிலோமீட்டர் நீளத்திற்கு அமையும் இவற்றில், மொத்தம் 20 தொடர்வண்டி நிலையங்கள் அமைக்கப்படும்.

இ. சென்னை பெருநகர தொடர் வண்டித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் அமைக்கப்படும் மூன்றாவது பாதை சென்னை மாதவரத்தில் தொடங்கி சோழிங்கநல்லூர் வரை அமைக்கப்படும். இப்பாதை கொளத்தூர் – திருமங்கலம் – கோயம்பேடு – வளசரவாக்கம் – பட்ரோடு – வானுவம்பேட்டை – மடிப்பாக்கம் – பெரும்பாக்கம் வழியாக சோழிங்கநல்லூரை சென்றடையும். 44.66 கிலோமீட்டர் நீளம் கொண்ட இப்பாதையில் மொத்தம் 46 தொடர் வண்டி நிலையங்கள் அமைக்கப்படும்.

ஈ. கலங்கரை விளக்கம் முதல் கோயம்பேடு வரையிலான பாதையை வடபழனியிலிருந்து போரூர், பூந்தமல்லி வழியாக திருமழிசைவரை 25 கிலோமீட்டர் தொலைவுக்கு நீட்டிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. எனினும், இப்பாதை இறுதி செய்யப்படவில்லை.

194. சென்னை பெருநகர தொடர்வண்டித் திட்டத்தின் இரண்டாம்கட்ட பணிகள் முழுமையாக முழுமடைந்தவுடன், சென்னையில் பெருநகர தொடர்வண்டிப் பாதையின் மொத்த தொலைவு 176.70 கிலோமீட்டராக இருக்கும். இது தில்லி பெருநகர தொடர்வண்டித்திட்டத்திற்கு அடுத்து மிகப்பெரிய தொடர்வண்டித் திட்டமாக இருக்கும்.

## 63. சென்னைப் போக்குவரத்து – இலவசப் பேருந்துகள்

195. சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருப்பதுபோன்று, அதிவிரைவு பேருந்து பாதை அமைப்பு (Bus Rapid Transit System - BRTS) அமைக்கப்படும். இதன் மூலம், தடையற்ற தனிப்பாதையில்

பேருந்துகள் இயக்கப்படும் என்பதால், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாகவும், விரைவாகவும் செல்லமுடியும்.

196. **சென்னையில் பொதுப் போக்குவரத்து வலுப்படுத்தப்படும். சென்னையில் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை கடந்த 2016–17ஆம் ஆண்டில் 3,000–லிருந்து 4,000ஆக உயர்த்தப்பட்டது. 2018–19ஆம் ஆண்டில் 5,000ஆக உயர்த்தப்படும். சென்னை மாநகரப் பேருந்துகளில், வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதிமுதல் கட்டணமில்லாப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். அன்றுமுதல் மாநகரப் பேருந்துகளில் அனைவரும் இலவசமாக பயணம் செய்யலாம் என்று தமிழக அரசு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.**

197. தொடர்வண்டி முறைக்கும் பேருந்துகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும். (எடுத்துக்காட்டாக – அனைத்துத் தொடர்வண்டி நிலையங்களில் பேருந்து நிறுத்தங்களை அமைத்தல், ஒரே பயணச்சீட்டில் இரண்டிலும் பயணித்தல் போன்றவை).

198. சென்னையின் சாலைகளில் வாகன நிறுத்த சாத்தியமான பகுதிகளைத் தெரிந்தெடுத்து, அங்கு மட்டுமே கட்டணத்துடன் வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படும். இலவசமாக வாகனம் நிறுத்த சென்னையில் ஓர் இடம்கூட இல்லை என்ற நிலை உருவாக்கப்படும். இதனால், மகிழுந்துகள் தேவையின்றி சாலைக்கு வருவது – குறிப்பாக ஒரு மகிழுந்தில் ஒரே ஒருவர் பயணிப்பது தடுக்கப்படும். இதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு நடைபாதைகளில் நடந்து செல்வோருக்கு சிறப்பு வசதிகள் செய்து தரப்படும்.

199. சென்னைப் பெருநகரில் நீர்வழிப் போக்குவரத்தினைக் கொண்டு வருவது சாத்தியமானதுதான். சென்னை மாநகர அளவில் மட்டும் 88 கிலோ மீட்டர் தொலைவுக்கு நீர்வழிகள் இருக்கின்றன. அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் அனைத்திலும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை படகுகள் ஓடின. அதனைப் புதுப்பிப்பது சென்னை மக்களுக்கு பெரும் பயனாக இருக்கும் என்பதால், அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படும்.

200. **சென்னையில் கலங்கரை விளக்கம் முதல், சாத்தியமாகக்கூடிய தொலைவுவரை கடலில் படகுப் போக்குவரத்தை தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்படும். சென்னை ஐ.ஐ.டி. மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

201. சென்னையின் நீர்வழிகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் “சென்னை நீர்வழிகள் ஆணையம்” என்ற தனி அமைப்பு உருவாக்கப்படும்.

202. சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 500 இடங்களில் 10,000 மிதிவண்டிகளுடன் மிதிவண்டிப் போக்குவரத்துத் திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தில் சென்னை மாநகர மக்கள் தங்களின் அடையாளங்களை பதிவு செய்து அதிகபட்சம் 2 மணி நேரம் வரை இலவசமாக மிதிவண்டிகளை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## 64. தொடர்வண்டித் திட்டங்கள்

203. **தமிழ்நாட்டிற்கு அறிவிக்கப்பட்டு போதிய நிதி ஒதுக்கப்படாததால் கிடப்பில் போடப்பட்டுள்ள தொடர்வண்டித் திட்டங்களை செயல்படுத்தி முடிக்க ரூ.20,064**

**கோடி தேவை. இந்தத் தொகையை தொடர்வண்டித்துறை ஒதுக்க குறைந்தது 15 ஆண்டுகள் ஆகும். அதற்குள் இந்த திட்டங்களின் மதிப்பு பல மடங்கு அதிகரித்து விடும் என்பதால் இவை நிறைவேற வாய்ப்பே இல்லாமல் போய்விடும். இதைக் கருத்தில் கொண்டு இந்த திட்டங்களுக்குத் தேவையான நிதியில் பாதியை, அதாவது ரூ.10,000 கோடியை மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.** இந்த நிதி அடுத்த 3 ஆண்டுகளில் சமதவணைகளாக தொடர்வண்டித்துறைக்கு வழங்கப்படும். இதன் மூலம் தமிழகத்தில் நிலுவையில் உள்ள அனைத்துத் தொடர்வண்டித் திட்டங்களும் அடுத்த 3 ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்கப்படும். இதற்காக தமிழக அரசும், மத்திய அரசும் இணைந்து சிறப்புப் பயன்பாட்டு நிறுவனம் ஒன்றை தொடங்கும்.

204. சென்னையில் இருந்து மாமல்லபுரம், புதுச்சேரி, கடலூர், மயிலாடுதுறை, காரைக்குடி, தூத்துக்குடி, திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரிக்கு கிழக்கு கடற்கரையோர ரயில்பாதை அமைக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்தும்படி மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொள்ளும். இதற்கான செலவின் ஒரு பகுதியை அரசு ஏற்கும்.

## 65. மின்சாரம்

205. **இரு மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணம் வசூலிக்கும் முறை கைவிடப்பட்டு, மாதம் ஒருமுறை மின்கட்டணம் வசூலிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். மின்கட்டண படிநிலையிலும் (Slab) சிறிய அளவில் மாற்றம் செய்யப்படும். இதன் மூலம் மின்கட்டணம் 25% வரை குறையும்.**

206. தமிழ்நாட்டில் அதிரடியாக சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய துறை மின்துறையாகும். தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் முதன்மை தேவை மின்சாரமாகும். ஆனால், கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்தில் 1,800 மெகாவாட் அளவுக்கு மட்டுமே புதிய மின்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதே வேகத்தில் மின்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், தமிழகம் வெகுவிரைவில் இருண்டமாநிலமாகிவிடும். இந்த நிலையை மாற்றி, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தடையற்ற மின்சாரம் கிடைப்பதற்கும், மின்வெட்டை அறவே நீக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இதற்காக தமிழக அரசு செயல்படுத்தவுள்ள சிறப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

அ. தலா 4,000 மெகாவாட் திறன்கொண்ட கடலாடி, செய்யூர் மின்திட்டங்கள், 1320 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி மின்திட்டம், 1320 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல மின்திட்டம், 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல்மின் நிலையம் உட்பட 17,340 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்திட்டங்கள் அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்கப்படும்.

ஆ. எண்ணூரில் செயல்படுத்தப்பட்டு வரும் 660 மெகாவாட் திறன்கொண்ட விரிவாக்கப்பட்ட மின்திட்டப் பணிகள் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மின்உற்பத்தி தொடங்கும்.

இ. 1320 மெகாவாட் திறன்கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல மின்திட்டம், 2640 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி மின்திட்டங்கள், 1600 மெகாவாட் திறன்கொண்ட உப்பூர் மின்திட்டம் ஆகியவற்றிற்கான ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மின்உற்பத்தித் தொடங்கப்படும்.

## 66. புதிய எரிசக்தி

207. 2020ஆம் ஆண்டிற்குப் பிறகு நிலக்கரி உள்ளிட்ட படிம எரிபொருட்களை பயன்படுத்தும் அனல்மின் நிலையங்களை அமைக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு சூரியஒளி மின்சக்தி, காற்றாலை மின்சக்தி ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

208. அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 5,000 மெகாவாட் அளவுக்கு சூரியஒளி மின்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

209. காற்றாலை மின்உற்பத்தி, சூரியஒளி மின்உற்பத்தி ஆகிய இரண்டையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் கலப்பின மின்உற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

210. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தலா ஒரு மெகாவாட் திறன் கொண்ட சூரியஒளி மின்நிலையங்கள் அமைக்கப்படும். இதில் கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு, அந்த ஊராட்சிகளில் உள்ள வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படும். இது 10 ஆண்டு நீண்டகாலத் திட்டமாக செயல்படுத்தப்படும். இதற்கான செலவை அரசே ஏற்கும். பராமரிப்புக்காக மட்டும் ஒவ்வொரு வீட்டிற்கும் மாதம் ரூ.50 வசூலிக்கப்படும்.

## 67. மின்வாரியத்தை லாபத்தில் இயக்க சிறப்புத்திட்டம்

211. மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட உதய் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திரண்ட கடன் ரூ. 80,000 கோடியை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதனால், தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு ஆண்டும் கட்டவேண்டிய வட்டி சுமை குறையும். இந்த வகையில் மட்டும் ஆண்டுக்கு ரூ.7,000 கோடி மிச்சமாகும். இதைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தை லாபத்தில் இயங்கச் செய்ய சிறப்புத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தவுள்ளது. அதன் விவரம் வருமாறு:

**அ. தனியாரிடமிருந்து அதிகவிலை கொடுத்து மின்சாரம் வாங்கும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இந்த ஒற்றை நடவடிக்கையின் மூலமாக மட்டுமே மின்வாரியத்தின் இழப்பில் பெரும்பகுதியை குறைக்க முடியும்.**

**ஆ. நிலுவையில் உள்ள மின்திட்டங்களில் 6220 மெகாவாட் மின்திட்டங்கள் அடுத்த 3 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு, தமிழகம் மின்மிகை மாநிலமாக மாற்றப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மின்வாரியம் லாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்படும்.**

**இ. தமிழ்நாடு மின்வாரியத்தின் மின் இழப்பு தற்போது சுமார் 30% ஆக உள்ளது. இது மிகவும் அதிகமாகும். தமிழகத்தின் மின்தொகுப்பு அதிக தொலைவு கொண்டதாக இருப்பது தான் அதிக மின் இழப்புக்கு காரணம் ஆகும்.**

**இந்த நிலையை மாற்றி ஒரு பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அந்த பகுதியிலேயே வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் மின் இழப்பு 6 விழுக்காட்டிற்கும் கீழ் கொண்டுவரப்படும்.**

ஈ. **மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இழப்பு தடுக்கப்படுவதுடன், மின்வாரியம் ஆண்டுக்கு ரூ.12,000 கோடி இலாபம் ஈட்டும் நிலையை எட்டும். இந்த நிதியைக் கொண்டு உதய் திட்டத்தின்கீழ் தமிழக அரசுக்கு செலுத்தவேண்டிய கடனை மின்வாரியம் அடுத்த 10 ஆண்டுகளில் அடைக்கும்.**

**தமிழ்நாடு மின்வாரியத்தின் கடன்கள் படிப்படியாக அடைக்கப்படும்.**

## 68. சுற்றுலாத் துறை

212. தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை அதிவேக வளர்ச்சியடைந்து வருகிறது. லட்சக்கணக்கானோருக்கு வேலை அளிக்கும் துறையாக சுற்றுலாத் துறை திகழ்வதால், அதை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

213. **சென்னை முதல் புதுச்சேரி வரையிலான கிழக்குக் கடற்கரை சாலை பொழுதுபோக்கு சுற்றுலா வழித்தடமாக மாற்றப்படும். சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் இருப்பதைப் போன்று இந்த வழித்தடத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்தப்படும்.**

214. சென்னை, கோவை நகரங்கள் மருத்துவச் சுற்றுலா நகரங்களாக மாற்றப்படும்.

215. கன்னியாகுமரி மாவட்டத்தில் பனிப்பொழிவு தவிர, கடல், நீர்வீழ்ச்சி, ஆறுகள், ரப்பர் காடுகள், தென்னை தோட்டங்கள் உள்ளிட்ட இயற்கை அளித்த கொடைகள் நிரம்பி கிடக்கின்றன. இதைப் பயன்படுத்திக்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டம் பசுமை சுற்றுலா மையமாக மாற்றப்படும்.

216. இயற்கை எழில் கொஞ்சும் மற்ற மாவட்டங்களிலும் பசுமை சுற்றுலா திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 69. தமிழ் வளர்ச்சி

217. மொழி வாழ்ந்தால்தான் இனம் வாழ முடியும். இதைக் கருத்தில் கொண்டு, தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

218. அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தைத் தொடர்ந்து, உலகில் உள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் தமிழ் ஆய்வுக்கு தனி இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

219. மழலை வகுப்பிலிருந்து 5ம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி முறை கட்டாயமாக்கப்படும்.

220. பனிரெண்டாம் வகுப்பு வரை தமிழை ஒரு பாடமாக படித்தவர்களுக்கு மட்டுமே அரசு வேலை வழங்கப்படும். தமிழ் வழியில் கல்வி கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.

221. தமிழை தேசிய ஆட்சி மொழியாகவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகவும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆலயங்களின் வழிபாட்டு மொழியாக தமிழ் கட்டாயமாக்கப்படும்.

222. தமிழ்நாட்டில் தமிழ் ஆய்வு மையம் ஒன்று ஏற்படுத்தி தமிழ்மொழியின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படும்.

223. அரசின் அனைத்துத் துறைகளின் கோப்புகளிலும் குறிப்பாக தலைமைச் செயலக கோப்புகள் அனைத்தும் தமிழ்மொழியிலேயே செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

224. **வணிக நிறுவனங்கள், அங்காடிகள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் பெயர்ப் பலகைகள், விளம்பரங்கள், விலைப் பட்டியல் செய்தி, ஏடுகள் உள்ளிட்ட ஊடகங்கள், திரைப்படம், தொலைக்காட்சி அனைத்திலும் தமிழ்தான் என்ற நிலை உருவாக்கப்படும்.**

225. **பள்ளி ஆசிரியர்களுக்குத் தமிழ் ஒலிப்பு மற்றும் எழுத்து முறைகள் பற்றிய புத்தொளிப் பயிற்சி நடத்தப்படும்.** தமிழ் மரபுகள், தமிழ்ப்பண்பாட்டு நுட்பங்கள் தொடர்பான பிறமொழிப் பதிவேடுகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ் வளர்ச்சியில் மேம்பாடு காணப்படும். துறைவாரியான கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்படும்.

## 70. மருத்துவம் மற்றும் மருத்துவக் கல்வி

226. **குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் கிடைக்கும் அதே தரத்திலான மருத்துவம், தமிழகத்தின் கடைசி குடிமகனுக்கும் கிடைக்கவேண்டும்** என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

227. தமிழ்நாட்டில் அனைத்து மருத்துவமனைகளிலும் உலகத் தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்கப்படும். இதற்கு வசதியாக, தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.

**228. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கு கடந்த 27.01.2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான நிதியை உடனடியாக ஒதுக்கி, கட்டுமானப் பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.**

229. கடலூரில் எய்ம்ஸுக்கு நிகரான அதிஉயர் சிறப்பு மருத்துவமனை முழுக்க முழுக்க மாநில அரசின் நிதியில் அமைக்கப்படும். இம்மருத்துவமனையுடன் மருத்துவக் கல்லூரியும் இணைந்திருக்கும். இதற்கு முதல்கட்டமாக, 2019–20 ஆம் ஆண்டு ரூ.250 கோடி ஒதுக்கப்படுகிறது.

230. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஓர் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். இதை நிறைவேற்றும் வகையில், நாகப்பட்டினம், விருதுநகர், பெரம்பலூர், திண்டுக்கல், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் அடுத்த ஆண்டில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும். இதற்காக, ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

231. விழுப்புரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும்.

232. **மருத்துவர் அன்புமணி இராமதாசு அவர்களின் சீரிய முயற்சியால், தேசிய அளவில் தொடங்கப்பட்ட 108 அவசர ஊர்தித் திட்டம் விரிவுபடுத்தப்படும். தமிழ்நாட்டில் 108 அவசர ஊர்திகளின் எண்ணிக்கை 2019–2020 ஆம் ஆண்டில் 2,000 ஆக உயர்த்தப்படும்.**

233. மருத்துவர்கள் நியமனத்தில் இடஒதுக்கீடு கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கி, பல்துறை சிறப்பு மருத்துவமனை வரை அனைத்து மருத்துவமனைகளிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையின்படியே மருத்துவர்களும், பிற மருத்துவப் பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள்.

234. குடியரசுத் தலைவருக்கு இணையான மருத்துவம், அனைத்துக் குடிமக்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை தமிழகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 2 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்த்த அரசு முடிவு செய்திருக்கிறது.

## 71. பள்ளி கல்வி வளர்ச்சிக்கு தனி நிதியம்

235. **தமிழக மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்குவது குறித்த எண்ணற்ற புரட்சிகரமான திட்டங்கள் தமிழக அரசிடம் உள்ளன. எனினும், கடந்த காலங்களில் கல்வித்துறைக்கு தேவையான அளவு நிதி ஒதுக்கப்படாததால், அரசுப் பள்ளிகள் சீரழிந்துள்ளன. அவற்றை சீரமைத்து உலகத்தரம் வாய்ந்த பள்ளிக்கூடங்களாக உயர்த்தவும், கல்வியைத் தாண்டி மாணவர்களின் வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்தவும் தமிழக அரசு விரும்புகிறது.**

236. **கோத்தாரி ஆணைய பரிந்துரைப்படி, தமிழகத்தில் பள்ளிக் கல்வித்துறைக்காக ஆண்டுக்கு ரூ.80,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். ஆனால், கடந்த ஆண்டு பள்ளி கல்வித் துறைக்கு ரூ.27,205.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு தாக்கல் செய்யும் நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பே சுமார் ரூ.2 லட்சம் கோடிதான் எனும்போது, அதில் 80,000 கோடி ரூபாயை பள்ளி கல்வித்துறைக்கு ஒதுக்குவது சாத்தியமல்ல. அவ்வாறு ஒதுக்கினாலும் பள்ளிக்கல்வித் துறையின் தேவைகளை ஒப்பிடும்போது அந்த நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு ஆகும்.**

237. **எனவே, பள்ளிக் கல்வித்துறை வளர்ச்சிக்காக சமூக அக்கறை கொண்ட தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் இருந்து நிதிதிரட்ட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியைப் போன்று, தனி நிதியம் ஏற்படுத்தப்படும். இதற்கு "தமிழ்நாடு முதலமைச்சரின் கல்வி வளர்ச்சி நிதி" என பெயரிடப்படும். விருப்பம் உள்ளவர்கள் இந்த நிதிக்கு நன்கொடை வழங்கலாம். பள்ளிகள் சீரமைப்பு, தரம் உயர்த்துதல் உள்ளிட்ட கல்வி வளர்ச்சிப் பணிகளுக்காக இந்த நிதி செலவிடப்படும்.**

## 72. பள்ளிக் கல்வித்துறை

238. **அம்பானி போன்ற மிகப்பெரிய பணக்காரர்களின் குழந்தைகளுக்கு கிடைக்கும் அதே தரத்திலான கல்வி, அடித்தட்டு மக்களுக்கும் கிடைக்க வேண்டும்** என்பதுதான் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களின் குறிக்கோளாகும். இந்த குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், அனைவருக்கும் கட்டாயக் கல்வி, கட்டணமில்லாக் கல்வி, தரமான கல்வி, சுகமான, சுமையற்ற கல்வி, விளையாட்டுடன் கூடிய கல்வி வழங்கப்படும்.

239. தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தையும் அரசே செலுத்தும். இதற்கு வசதியாக பள்ளிக் கல்வித்துறைக்கான நிதிஒதுக்கீடு இருமடங்காக உயர்த்தப்படும்.

240. **தமிழ்நாட்டில் மத்திய இடைநிலைக் கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ) பாடத்திற்கு இணையான பாடத்திட்டம் 1, 6, 9, 11 ஆகிய வகுப்புகளுக்கு 2018–19 ஆம் கல்வி ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. 2019–20ஆம் ஆண்டில் 2, 7, 10, 12 ஆகிய வகுப்புகளுக்கு அறிமுகம் செய்யப்படும்.**

மாதிரிப் பள்ளிகள்

241. **தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 25 பள்ளிகள் வீதம் தமிழகம் முழுவதும் 1,000 பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக மாற்றப்படும். இந்தப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை இருக்கும். அதிநவீன வசதிகளுடன் இப்பள்ளிகளில் பாடம் நடத்தப்படும். கற்றல் என்பது சுகமான அனுபவமாக அமைய இப்பள்ளிகள் உதவும்.**

242. **தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்தப்படும். ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி வழங்க ஆண்டுக்கு ரூ.35,000 செலவிடப்படும். இதற்கேற்ற வகையில் பள்ளிக்கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்படும்.**

243. **மாணவர்கள் பள்ளிகளுக்கு எளிதாகச் சென்றுவர வசதியாக, “மாணவர்கள் மட்டும்” பேருந்துகள் இயக்கப்படும்.**

244. தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ள வசதியாக 9ஆம் வகுப்பிலிருந்தே சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

245. **பள்ளிகளில் திறன் சார் கல்வி (Skill Based Education), அறிவுசார் கல்விமுறை (Knowledge Based Education), தொழில்கல்வி (Vocational Education) ஆகிய கல்வி முறைகள் அறிமுகப்படுத்தப்படும். அதன்படி 11ஆம் ஆண்டில் வழக்கமான பாடங்களுடன் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிப்பதற்கான பயிற்சிப் பாடம் கூடுதலாச் சேர்க்கப்படும். அது மாணவர்கள் படிக்கும் விருப்பப்பாடம் சார்ந்ததாக இருக்கும்.**

246. **அனைத்து வகுப்புகளிலும் வாரத்திற்கு இரண்டு பாடவேளை நீதிபோதனை வகுப்புகள் நடத்தப்படுவது கட்டாயமாக்கப்படும். பெண் குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தமிழர்களின் மரபு சார்ந்த தற்காப்புக் கலைகள் கற்றுத்தரப்படும்.**

247. **பள்ளிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டு பசுமை மற்றும் தூய்மை வளாகங்கள் இயக்கம் நடத்தப்படும். இதன் மூலம் கல்வி நிலையங்கள் பசுமையாகவும், தூய்மையாகவும் விளங்குவது உறுதி செய்யப்படும்.**

248. அனைவருக்கும் தரமான கல்வியை வழங்க பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவேண்டும். இதற்காக, **கோத்தாரி குழு பரிந்துரையையொட்டி, மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 6 விழுக்காடு தொகை ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். அதன்படி பார்த்தால், பள்ளிக் கல்வித்துறைக்காக சுமார் 96,000 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டியிருக்கும். இந்த இலக்கு அடுத்த 3 ஆண்டுகளில் எட்டப்படும். இதன் தொடக்கமாக 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.60,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

249. கல்வி மாநில அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும் என கோரப்படும். இதை மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்துவோம். கல்விக்காக ஒதுக்கப்படும் மொத்த செலவில் 70 விழுக்காடு பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்படும். ஆரம்பக் கல்வியை மேம்படுத்த பள்ளிக் கல்வி அமைச்சகத்திலிருந்து ஆரம்பக் கல்வித்துறை தனியாக பிரிக்கப்பட்டு தனி செயலகம், தனி அமைச்சகம் உருவாக்கப்படும்.

## 73. பல்கலைக் கழகங்கள் சீரமைப்பு – மேம்பாட்டுத் திட்டம்

250. தமிழ்நாட்டில் பாரதியார் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் கணபதி, ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாலும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பி.பி.செல்லமுத்து, ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணிநீக்கம் செய்யப்பட்டதாலும் தமிழகப் பல்கலைக் கழகங்களின் மதிப்பு குறைந்துள்ளது.

251. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களை சீரமைக்கும் வகையிலும், ஊழல் குற்றச்சாட்டுகளை தவிர்க்கும் வகையிலும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1. **பல்கலைக் கழக பணியாளர் நியமனங்கள், கட்டுமான மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களை வழங்கும் அதிகாரம் ஆகியவை துணை வேந்தர்களிடம் இருந்து பறிக்கப்படும்.**
2. **உயர் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவது மட்டும்தான் துணை வேந்தர்களின் முதன்மைப் பணியாக இருக்கும்.**
3. **பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களை தேர்வு செய்து நியமிக்க அப்பழுக்கற்ற கல்வியாளர்களைக் கொண்ட ஆணையம் அமைக்கப்படும்.**
4. **பல்கலைக்கழக கட்டுமானங்கள் தமிழக அரசின் பொதுப்பணித்துறை மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும். இதற்காக பொதுப்பணித்துறையில் பல்கலைக்கழக கட்டுமானங்கள் என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.**
5. **பல்கலைக் கழகங்களுக்கான தளவாடங்கள், எழுது பொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து திறந்தநிலை ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாக மட்டுமே கொள்முதல் செய்யப்படவேண்டும்.**

**பல்கலைக் கழக மேம்பாடு**

252. உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழகம் முதலிடத்தில் இருந்தாலும், தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் வழங்கப்படும் கல்வி தரமானதாக இல்லை. இந்நிலையை மாற்றி, அனைத்துப் பல்கலைக் கழகங்களும் உலகத் தரம் கொண்டவையாக மாற்றப்படும். இதன் மூலம் தமிழக மாணவர்கள் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படித்த நிலைமை மாறி, வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பயிலும் நிலை உருவாக்கப்படும்.

253. பல்கலைக் கழகங்களில் நடந்த ஊழல்கள் காரணமாக அவற்றின் நிதிநிலை மிகவும் மோசமடைந்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பல நூறு கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக இருந்த நிலை மாறி, இன்று பல பல்கலைக் கழகங்கள் கடனில் சிக்கித் தவிக்கின்றன. வேறுசில பல்கலைக் கழகங்களில் சில லட்சங்களில்தான் நிதி உள்ளது. பல்கலைக் கழகங்களுக்கான நிதியுதவியை பல்கலைக் கழக மானியக் குழு படிப்படியாக குறைத்து வருகிறது. இதே நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் தமிழக பல்கலைக் கழகங்களில் ஊதியம் வழங்கக்கூட நிதி இருக்காது.

254. **பல்கலைக் கழகங்களின் வருவாயைப் பெருக்குவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:**

1. **தொலைநிலை கல்விமுறை சீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படும்.**
2. **பல்கலைக் கழகங்களில் சமூகத்திற்கு பயனுள்ள ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான காப்புரிமை பெறுவதன் மூலம் பல்கலைக் கழகங்களுக்கு வருவாய் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.**
3. **அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் வெளிநாடு வாழ் இந்தியப் பிரிவு உருவாக்கப்படும். பல்கலைக் கழகங்களில் கூடுதலாக 20% இடங்கள் ஏற்படுத்தப்பட்டு அது வெளிநாடு வாழ் இந்தியர் பிரிவுக்கு ஒதுக்கப்படும். இப்பிரிவில் சேரும் மாணவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.**

## 74. உயர்கல்வி

255. உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழும்போதிலும், கல்வித்தரம் என்பது கவலையளிப்பதாக உள்ளது. குறிப்பாக பொறியியல் படிப்பு பயிலும் மாணவர்களில் 70 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் வேலைபெறும் தகுதியற்றவர்களாக உள்ளனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொறியியல் மாணவர்களின் வேலைவாய்ப்புக்காக நடத்தப்படும் பொறியியல் பட்டதாரிகளின் தகுதிகாண் தேர்வின் (Graduate Aptitude Test in Engineering - GATE) தேர்ச்சி விகிதத்தில் தமிழகம்தான் கடைசி இடத்தில் உள்ளது. இந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

256. உயர் கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைத்து கல்லூரிகளிலும் இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி உள்ளவர்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதை, தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் உறுதி செய்யும்.

257. தமிழ்நாட்டில் உயர் கல்வியில் சேரும் மாணவர்கள் விகிதத்தை 50 விழுக்காடாக உயர்த்த இலக்கு நிர்ணயித்து, அதை எட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**258. அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் ஆராய்ச்சிக்கான இருக்கைகள் தொடங்கப்படும்.**

259. அனைத்து மாவட்டங்களிலும் முறையே ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் அமைக்கப்படுவது உறுதி செய்யப்படும். அந்த வகையில், அடுத்த ஆண்டில் கடலூர், கரூர், அரியலூர், திண்டுக்கல், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்.

**260. கடுமையான நிதிநெருக்கடியில் சிக்கித்தவிக்கும் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு உதவும் வகையில் ஒருமுறை நிதி உதவியாக ரூ.1,000 கோடி வழங்கப்படுகிறது.**

**261. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை 5,456 ஆக உயர்த்தப்படும். இதன் மூலம் அண்ணாமலை பல்கலைக் கழக நிதிநெருக்கடிக்கும், கூடுதல் பணியாளர்கள் வேறு கல்வி நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கும் முடிவு கட்டப்படும்.**

262. நாகப்பட்டினம், அரியலூர் மாவட்டங்களில் 2019–20 ஆம் ஆண்டில் அரசுப் பொறியியல் கல்லூரிகள் அமைக்கப்படும்.

### கல்விக்கடன் தள்ளுபடி

263. தமிழ்நாட்டில் பொதுத்துறை வங்கிகளில் கடன் பெற்று படித்து வேலையில்லாமல் தவிக்கும் மாணவர்களின் கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். தமிழக மாணவர்களுக்கு ரூ.18,000 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் வாராக்கடனின் அளவு ரூ.2,000 கோடி ஆகும். இந்தக் கடன் உடனடியாக தள்ளுபடி செய்யப்படுகிறது. இதற்கான தொகையை பொதுத்துறை வங்கிகளுக்கு தமிழக அரசே செலுத்தும்.

**264. தமிழ்நாட்டில் உள்ள மத்திய கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் 50 விழுக்காடு இடங்களை மாநில ஒதுக்கீடாக வழங்கவேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.**

265. 2019 – 2020 ஆம் ஆண்டில் உயர்கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.14,000 கோடியாக அதிகரிக்கப்படுகிறது.

### புதிய கல்வி நிறுவனங்கள்

**266. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணா பல்கலைக் கழகமும் திறன்சார் அறிவு மையங்களாக (Centre of Excellence) தரம் உயர்த்தப்படும்.**

**267. தமிழகத்தில் 6 ஒருமைப் பல்கலைக்கழகங்கள் (Unitary Universities) அமைக்கப்படும். ஆராய்ச்சிகளைச் செய்வது மட்டுமே இவற்றின் முதன்மை நோக்கமாக இருக்கும்.**

**268. சென்னையில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Science Education and Research - IISER) அமைக்க நடவடிக்கை**

**எடுக்கப்படும். மத்திய அரசிடம் வலியுறுத்தி, ஓராண்டிற்குள் இந்த உயர் கல்வி நிறுவனம் தொடங்கப்படும்.**

269. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களும் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் ஐ.ஐ.டி.க்கு இணையான ஓர் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (Tamilnadu Institute of Technology - TIT) அமைக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு சட்டக்கல்லூரியும், ஒரு வேளாண் கல்லூரியும் அமைக்கப்படும்.

270. அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும். முதல்கட்டமாக 2019–20ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் மகளிர் கல்லூரிகள் தொடங்கப்படும்.

## 75. இந்து சமய அறநிலையத்துறை

271. இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான கோவில்களின் நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து மீட்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதனடிப்படையில் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்க இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் தலைமையில் குழு அமைக்கப்படும்.

272. பழங்கால கோவில்களை சீரமைக்கவும், கோவில் குளங்களை தூர்வாரி மேம்படுத்தவும் 2019–20 ஆம் ஆண்டில் ரூ.350 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 76. ஊரக வளர்ச்சி – உள்ளாட்சிகளுக்கு உண்மையான அதிகாரம்

273. இந்திய அரசியல் சட்டத்தின் 73–ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் உருவாக்கப்பட்டதன் நோக்கமே அவை உண்மையான சுயாட்சி அமைப்பாக திகழ வேண்டும் என்பது தான். ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

274. அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 73 ஆவது திருத்தத்தின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும்.

275. **இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243ஜி பிரிவின்படி பொருளாதார மேம்பாடு மற்றும் சமூகநீதிக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.**

276. அனைத்து கிராமங்களிலும் அனைத்து வசதிகளும் கிடைக்க வழி வகை செய்யப்படும். கிராமப்புறங்களில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதன் மூலம், கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வது தடுக்கப்படும்.

277. அனைத்து கிராமங்களிலும் குடிநீர், சாலை, பள்ளிக்கூடம், சமூதாயக் கூடம், சுகாதார வளாகங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

278. 2019–2020ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், ஒன்றரை லட்சம் வீடுகளும், பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் வீடுகளும் கட்டித்தரப்படும். பசுமை வீடுகளுக்கான நிதியுதவி ரூ.3 லட்சமாகவும், இந்திரா வீட்டுவசதி திட்ட வீடுகளுக்கான நிதியுதவி ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்படும்.

279. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுமா? என்ற ஐயம் நிலவிவந்தது. அத்திட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டிருப்பதுடன் இத்திட்டத்தின்கீழ், வேலை வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கை, ஆண்டுக்கு 150 ஆக உயர்த்தப்படும்.

280. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் வேளாண்தொழிலுக்கும் விரிவாக்கப்படும்.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி**

281. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி தற்போதுள்ள 2 கோடி ரூபாயிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும்.

## 77. நகராட்சி நிர்வாகம்

282. தமிழகம் வேகமாக நகர்ப்புற மயமாகி வருகிறது. அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழக மக்கள் தொகையில் 54% நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தர வேண்டுமானால் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 74ஆவது திருத்தத்தின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும்.

283. நகர்ப்புற நிர்வாக முறையின் (Urban Governance) அனைத்து முக்கிய அம்சங்களும் நகராட்சி நிர்வாகத்தின் அங்கங்களாக்கப்படும்.

284. **தமிழ்நாட்டில் மத்திய அரசு அமைத்த 12 ஸ்மார்ட் நகரங்களை (Smart City) விரைவாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

285. தமிழகத்தில் அனைத்து நகரங்களையும், சிறுநகரங்களையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

286. **நகரங்களில் பேருந்து நிலையம், பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் இலவச வைஃபை (Wi-Fi) வசதி செய்துத்தரப்படும்.**

287. நகர்ப்புறங்களின் வளர்ச்சி, போக்குவரத்து, வீட்டுவசதி உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தும் அதிகாரம் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும்.

288. இதுவரை பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத நகராட்சிகளில் 2019–20 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இவைதவிர, 50 தேர்வுநிலை பேரூராட்சிகளில் நடப்பு ஆண்டில் பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படுத்தப்படும்.

289. அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மையான, சுவையான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். போதிய அளவில் விளையாட்டுத் திடல்களும், பூங்காக்களும் அமைக்கப்படும்.

## 78. நகர்ப்புற வீட்டுவசதி

290. **நாடாளுமன்றத்தில் கடந்த 2016ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மத்திய அரசின் ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டத்தின்படி தமிழ்நாட்டில் ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலம்**

**தமிழ்நாட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் உருவாக்கம், விற்பனை ஆகியவை முறையாக நடைபெறுவதை தமிழக அரசு உறுதி செய்யும்.**

291. அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா ஒரு வீடு கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். முதல்கட்டமாக, நடப்பு ஆண்டில் நகர்ப்புற பகுதிகளில் உள்ள நடுத்தர, குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் பொருளாதார அடிப்படையில் நலிவடைந்த பிரிவினருக்கு 25 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படும்.

292. நகர்ப்பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீட்டுமனைகளின் விலையை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

293. வீட்டுவசதி வாரியம் மூலம் உயர் வருவாய் பிரிவினருக்கே அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. இந்த நிலையை மாற்றி, நடுத்தர மற்றும் சாதாரண மக்களுக்கும் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டித்தருவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

294. தனியார் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டப்படும்போது, அதில் 20% வீடுகள் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக ஒதுக்கப்படுவதும், அந்த வீடுகளுக்கான விலை லாப நோக்கின்றி நிர்ணயிக்கப்படுவதும் உறுதி செய்யப்படும்.

295. வளர்ச்சியின் பெயரால் குடிசைவாழ் மக்கள் நகருக்கு வெளியே குடியமர்த்தப்படுவது அடியோடு கைவிடப்படும். நகரில் வாழும் உரிமை (Right to the City) என்கிற அடிப்படையில் பெருநகரங்களுக்கு உள்ளேயே தரமான வாழ்விட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## 79. குடிநீர்– தண்ணீர் பெறும் உரிமை

296. **தண்ணீர் ஒரு அடிப்படை மனித உரிமை என ஐநா அவை அறிவித்துள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள உயிர்வாழும் உரிமை என்பதில் 'தண்ணீருக்கான உரிமையும் அடங்கியுள்ளது' என இந்திய நீதிமன்றங்கள் உறுதி செய்துள்ளன. இத்தகைய சூழலில் குடிநீரை விலைக்கு வாங்கி குடிக்கும் நிலை காணப்படுவது மிகப்பெரிய அவலம் என்று அரசு கருதுகிறது. இந்நிலையை மாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.**

297. **ஒரு மாநிலத்தில் குடிநீரை விலைக்கு வாங்கி குடிக்கும் நிலை நிலவினால் அங்கு ஆட்சி நடைபெறவில்லை என்று தான் கருத வேண்டும். அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட உலகின் வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகளில் கூட புட்டிகளில் அடைக்கப்பட்ட குடிநீர் விற்பனை என்பது மிகவும் அரிதான ஒன்றாகவே காணப்படுகிறது; அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட, தரமான, சுவையான தண்ணீர் போதுமான அளவுக்கு கிடைப்பதை அந்நாட்டு அரசுகள் உறுதி செய்துள்ளன. ஆனால், ஏழை நாடான இந்தியாவில் குடிநீர் விலைக்கு விற்கப்படுவது இந்திய மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம் என்று இந்த அரசு கருதுகிறது.**

298. **சுகாதாரத்திற்கு அடிப்படை தண்ணீர். தூய்மையான குடிநீர் வழங்கப்படாவிட்டால் மக்களை நோயிலிருந்து பாதுகாக்க முடியாது. எனவே, தூய்மையான, ஊட்டச்சத்தும் தாதுச் சத்தும் நிறைந்த சுவையான தண்ணீர் அனைத்து குடிமக்களுக்கும் இலவசமாக வழங்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்யும். இதற்காக 'தண்ணீர் உரிமைத் திட்டம்' செயல்படுத்தப்படும். தண்ணீர் உரிமைத் திட்டம் செயல்பாட்டுக்கு**

**வந்த பிறகு குடிநீருக்காக எவரும் ஒரு காசு கூட செலவிடத் தேவையில்லை என்ற நிலை உருவாக்கப்படும்.**

299. **அரசு / உள்ளாட்சி அமைப்பால் தூய்மையான குடிநீர் வழங்கப்படாத நிலையில் அல்லது வழங்கப்பட்ட குடிநீர் தூய்மையாக இல்லாத நிலையில், பொதுமக்கள் எவரேனும் பணம் கொடுத்து தண்ணீர் வாங்கும் நிலை உருவானால், அதை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் குடிநீருக்காக செலவிட்டதைப் போன்று 10 மடங்குத் தொகை அவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.**

## 80. தமிழகத்தின் குடிநீர்ப் பஞ்சத்தை சமாளித்தல்

300. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கோடைக்காலத்தில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து உள்ளது. இதைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னை தவிர்த்த பிற மாவட்டங்களில் குடிநீர் வசதியைச் செய்துதருவதற்காக ரூ.1,500 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

301. சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரி, பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, சோழவரம் ஏரி ஆகிய 4 ஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 11.257 டி.எம்.சி. ஆகும். ஆனால் 04.02.2018 அன்று நிலவரப்படி இந்த ஏரிகளில் 0.990 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே உள்ளது. ஒரு டி.எம்.சி.க்கும் குறைவான நீரைக் கொண்டு கோடைக்காலம் வரைகூட தண்ணீர் வழங்க முடியாது. எனவே, சென்னை மாநகர மக்களுக்கு காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள குவாரிகளில் இருந்து குழாய்கள் மூலமாகவும், ஆழ்துளை கிணறுகளில் இருந்து டேங்கர் லாரிகள் மூலமாகவும் குடிநீர் கொண்டுவந்து விநியோகிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

302. ஆந்திர அரசுடன் பேச்சு நடத்தி கண்டலேறு அணையிலிருந்து 4 டி.எம்.சி. தண்ணீர் பெறவும், சென்னையில் அமைக்கப்பட்டுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலைகளிலிருந்து அதிக நீரை உற்பத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 81. காலநிலை செயல்திட்டம் (TN Climate Action Plan)

**303. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் கரியமிலவாயு வெளியாகும் அளவை அடுத்த 12 ஆண்டுகளுக்குள் மிக வேகமாக குறைத்தாக வேண்டும்; காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் தகவமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக துரிதப்படுத்த வேண்டும் என்று ஐநா அறிவியலாளர்கள் குழு எச்சரித்துள்ளது.**

**304. இந்த இலக்கினை அடைய வேண்டும் என்றால் உலகின் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு ஊரும் அனைத்து சமூகங்களும், அனைத்து பிரிவினரும் போர்க்கால அடிப்படையில் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும், சமாளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வகையில், தமிழக நகரங்களுக்கான காலநிலை செயல்திட்டம் (TN Urban Areas Climate Action Plan) உடனடியாக உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படும்.**

**305. பேருந்து போக்குவரத்தை மேம்படுத்துதல், நடைபாதைகளை உருவாக்குதல், வளர்ச்சிக்கான போக்குவரத்து முறையை உருவாக்குதல் (Transit Oriented Development (TOD), காற்று மாசுபாட்டை காட்டுப்படுத்துதல், ஒருமுறை பயன்படுத்தும்**

**பிளாஸ்டிக் ஒழிப்பு, வீடுவீடாக குப்பை சேகரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை, கட்டட ஆற்றல் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துதல், நகரங்களுக்கான தகவமைப்பு திட்டம் நகரங்களுக்கான பேரிடர் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதே போன்று, ஊரகப் பகுதிகளில் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக தமிழக கிராமப்புற உள்ளாட்சிகளுக்கான காலநிலை செயல்திட்டம் செயல்படுத்தப்படும்.**

## 82. மரங்கள் ஆணையம் – சதுப்பு நில ஆணையம்

306. **வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் தலைநகர் சென்னை உட்பட தமிழகம் முழுவதும் மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. ஒரு மரத்தை வெட்டினால் 10 புதிய மரக்கன்றுகள் நடப்படவேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு கடைபிடிக்கப்படுவதில்லை. இந்த நிலையை மாற்றும் வகையில், மரங்களை பாதுகாப்பதற்காக தமிழ்நாடு மரங்கள் ஆணையம் (Tree Authority) உடனடியாக ஏற்படுத்தப்படும். இதற்கான சட்டத்திருத்தம் நடப்புக் கூட்டத்தொடரில் கொண்டு வரப்படும்.**

307. தமிழகத்தின் எந்தப் பகுதியில் மரம் வெட்டவேண்டிய தேவை ஏற்பட்டாலும், அதுகுறித்து மரங்கள் ஆணையத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். மரங்கள் ஆணையம் அனுமதி அளித்தால் மட்டுமே மரங்களை வெட்ட முடியும்.

308. **தமிழ்நாட்டில் சதுப்புநிலங்களை கணக்கெடுத்து, அவற்றை பாதுகாப்பதற்காக மாநில சதுப்புநில ஆணையம் (State Wetland Authority) அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் அதிகார வரம்பு மற்றும் மாவட்ட சதுப்புநில மேலாண்மைக் குழுக்கள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய அரசாணை வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிவடைந்தவுடன் வெளியிடப்படும்.**

309. தமிழ்நாட்டில் உயிர்பன்மயத்தை (Biodiversity) பாதுகாக்கும் நோக்குடன் உயிர்பன்மய மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்படும்.

## 83. சீமைக் கருவேல மரம் ஒழிப்பு

310. தமிழ்நாட்டில் வேளாண்மைக்கும் சுற்றுச்சூலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கும் சீமைக் கருவேல மரங்களை ஒழிப்பதற்காக சிறப்புச் சட்டத்தை நிறைவேற்றும்படி, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆணையிட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து, வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரிலேயே இச்சட்டம் நிறைவேற்றப்படும்.

311. சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதைவிட, அடியோடு அழிப்பதுதான் நிரந்தர தீர்வு ஆகும். எனவே, ஒழிக்கப்பட்டு வருவதால், அதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் சீமைக் கருவேல மரங்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

312. இலை உதிர்க்கும் பூச்சி (Leaf tying moth)யை கருவேல மரங்களில் விடுவதன் மூலம் அவை அதன் இலைகளை சேதப்படுத்தி உதிரச் செய்கின்றன. இதனால், கருவேல மரம் இறக்கிறது.

313. சாறு உறிஞ்சும் வண்டுகளை (Sap sucking bug) கருவேல மரங்களில் விடுவதன் மூலம், அவை மரத்தின் சாறை உறிஞ்சி பட்டுப்போக வைக்கிறது.

314. கருவேல மரங்களை இயந்திரங்கள் மூலம் அகற்றிவிட்டு, அந்த இடத்தில் Weedcide எனப்படும் களைக்கொல்லியைத் தெளிப்பதன் மூலம் அந்த இடங்களில் மீண்டும் கருவேல மரங்கள் வளராது. இந்த 3 தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கருவேல மரங்கள் அழிக்கப்படும்.

315. யூகலிப்டஸ் தைல மரங்களும், சீமைக் கருவேல மரங்களுக்கு இணையாக நிலத்தடி நீரை உறிஞ்சும் தன்மை கொண்டவை என்பதால், அவற்றை வளர்க்கத் தடை விதிக்கப்படும்.

## 84. மதுவிலக்கு

316. **தமிழ்நாட்டில் உழைப்பாளர்கள் நாளான மே 1ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட்டு முழு மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படும்.**

317. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மது, பீர் ஆலைகளுக்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்பட்டு, மது ஆலைகள் மூடப்படும். இதன் மூலம் தமிழகத்தில் ஒரு சொட்டு மதுகூட உற்பத்தி செய்யப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும்.

318. மதுவுக்கு அடிமையான குடிநோயர்கள் அனைவரையும் அந்நோயிலிருந்து விடுவிக்க அவர்களுக்கு மதுபோதை மீட்பு மருத்துவம் அளிக்கப்படும். இதற்காக ஒவ்வொரு வட்டத்திலும் மதுபோதை மீட்பு மையம் அமைக்கப்படும். இதில் குடிநோயர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான செலவை அரசே ஏற்கும். சிகிச்சை காலத்தில் குடி நோயர்களின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

319. டாஸ்மாக் மதுக்கடைகளில் பணியாற்றியோர்களுக்கு அரசின் பிற துறைகளில் மாற்றுப்பபணி வழங்கப்படும்.

320. கள்ளச்சாராயம் விற்கப்படுவது பற்றி தகவல் தெரிவிக்க 1002 என்ற எண் கொண்ட இலவசப் பொதுத் தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்படும். தமிழக முதலமைச்சர் அலுவலகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்படும் இந்தப் பொதுத் தொலைபேசி எண்ணில் கள்ளச்சாராய விற்பனையைக் குறித்து தகவல் தெரிவிப்போருக்கு வெகுமதி அளிக்கப்படும். அவர்களின் இரகசியம் காக்கப்படும்.

321. ஒவ்வொரு பகுதியிலும் கள்ளச்சாராய விற்பனையைக் கட்டுப்படுத்துவது ஊராட்சி மன்றத் தலைவர், கிராம நிர்வாக அதிகாரி, உள்ளூர்க் காவல்துறை ஆய்வாளர்களின் பொறுப்பு ஆக்கப்படும். இதனைக் கண்காணிப்பது மாவட்ட ஆட்சியரின் கடமை ஆக்கப்படும். இந்தக் கடமையைச் செய்யத் தவறுவோர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்படுவார்கள்.

322. கள்ளச்சாராய வழக்குகளை விரைந்து விசாரிக்கும் வகையில், சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு வழக்கும் 6 மாதத்திற்குள் விசாரித்துத் தீர்ப்பு அளிக்கப்படும். தீர்ப்பு வழங்கப்படும் வரை கள்ளச்சாராய வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் வெளிவர முடியாத வகையில் சட்டத்திருத்தம் செய்யப்படும்.

## 85. சமூகநீதி – மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு

323. **இந்தியாவில் சாதியின் அடிப்படையில் அல்லாமல், பொருளாதாரத்தின் அடிப்படையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த சில சக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்க இந்த அரசு உறுதிபூண்டிருக்கிறது.** சமூகநீதியும் சமத்துவமும் நாட்டின்

மேம்பாட்டிற்கும் இணக்கமான வாழ்விற்கும் இன்றியமையாதவை ஆகும். பொருளியல் வளர்ச்சியடைந்த நாடுகளைவிட அதிக சமத்துவம் நிலவும் நாடுகளில் தான் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என்பது ஆய்வுகள் மூலம் மெய்ப்பிக்கப்பட்ட உண்மை. எனவே, ஏற்றத்தாழ்வான இன்றைய நிலையை மாற்றி முழுமையான சமத்துவ நிலையை எட்டுவது அரசின் இலக்காகும். **இந்தியச் சூழலில் தனி மனித அளவில் அல்லாமல், அவரவர் சார்ந்துள்ள குழுக்களின் அடிப்படையில்தான் ஏற்றத்தாழ்வு நீடிக்கிறது என்கிற உண்மையை அரசு கவனத்தில் கொள்கிறது.** எனவே, சாதி, மதச் சிறுபான்மை ஆகிய குழு அடையாளங்களே ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கான முதன்மையான அளவுகோலாகக் கொள்ளப்பட வேண்டும் என கருதுகிறது. அந்த வகையில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை தரப்படும்.

அ. சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு.

ஆ. கல்வி, வேலை, தொழில், வருமான நிலை, நில உடைமை, வங்கிக் கடனில் பங்கு, அரசின் ஒப்பந்தங்களில் பங்கு, வாழும் பகுதியின் வளர்ச்சிநிலை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய சாதிகளின் நிலை குறித்த வெள்ளை அறிக்கை வெளியிடுதல்.

இ. 69 சதவீத இடஒதுக்கீட்டை சாதிகளின் மக்கள் தொகை அடிப்படையில் 100 சதவீதமாக உயர்த்துவது.

ஈ. அமைப்புச் சார்ந்த தனியார் துறைகளில் சாதிவாரி இடஒதுக்கீடு.

உ. கல்வி, வேலை, தொழில் தொடங்க உதவி, அரசின் ஒப்பந்தங்களில் பங்கு உள்ளிட்ட அனைத்திலும் ஒவ்வொரு சாதியினருக்கும் மக்கள் தொகை அளவுக்கு ஏற்ப ஒதுக்கீடு.

ஊ. உரிய பிரதிநிதித்துவம் இல்லாத பிரிவினருக்கு முன்னுரிமை.

எ. இந்திய சிறுபான்மையினர் துறை அமைச்சகத்தின் பன்முகத்தன்மைக் குறியீடு (Diversity Index) அளவீட்டினை முன்மாதிரியாகக் கொண்டு சாதி மேம்பாட்டுக் குறியீடு (Caste Development Index) **எனும் அளவீட்டு முறையை ஏற்படுத்துதல், இதன் மூலம் அனைத்து சாதியினரும் சம வளர்ச்சியை எட்ட வழி செய்தல்.**

ஏ. பின்தங்கியப் பிராந்தியங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல் சட்ட அடிப்படையில் தனி வாரியம்.

## 86. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

324. சமூகநீதி என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டவாறு, அனைத்து சாதியினருக்கும் அவரவர் மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க சட்டதிருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அவை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9ஆவது பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

325. தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அரசியல் சாசன அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும், தேசிய அளவில் பிற பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்தி வெற்றிபெறுவோம்.

326. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கிரிமிலேயர் முறையை நீக்க வேண்டும். இடைக்கால ஏற்பாடாக கிரிமிலேயருக்கான வருவாய் வரம்பை தற்போதுள்ள ரூ.8 லட்சத்திலிருந்து ரூ.12 லட்சமாக உயர்த்த வேண்டும் என மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.

327. மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கிரிமிலேயர் அல்லாதவர்கள் கிடைக்காவிட்டால், அந்த இடத்தை கிரிமிலேயரைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.

328. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.1,800 கோடியாக உயர்த்தப்படும்.

329. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ–மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.300 கோடியாக உயர்த்தப்படுகிறது.

## 87. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன்

330. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்புக்கூறு திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படும்.

331. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ–மாணவியர்கள் கல்வி உதவித்தொகைக்கான நிதி ஒதுக்கீடு 50% அதிகரிக்கப்படும்.

332. அட்டவணை இன மக்களுக்கான சிறப்புக் கூறுத்திட்டம், பழங்குடியினர் உட்கூறுத் திட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

333. அரசுத் துறையில் நிரப்பப்படாத பணியிடங்களைச் சிறப்புப் பணி நியமனங்கள் மூலமாக நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

334. மனிதக் கழிவுகளையும், கழிவுநீர்ப் பாதை மற்றும் தொட்டிகளையும் மனிதர்களே அகற்றும் அநீதிக்கு முடிவு கட்டப்படும். இந்தப் பணிகளில் இதுவரை ஈடுபடுத்தப்பட்டு வந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வழங்கப்படும்.

335. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ–மாணவியர்கள் கல்வி உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1,000 கோடியாக உயர்த்தப்படுகிறது.

336. சமுதாயத்தில் மிக மிக நலிவடைந்த அருந்ததியினர் மேம்பாட்டில் அரசு மிகுந்த அக்கறை கொள்கிறது. அருந்ததியர் கல்வி, வேலைவாய்ப்புக்கான 3 சதவீத இடஒதுக்கீடு எல்லா நிலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்படும். அருந்ததியர் நலனைக் காப்பாற்ற அருந்ததியர் நலவாரியம் ஒன்று ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 88. மகளிர் மற்றும் குழந்தைகள் நலன்

### மகளிருக்கு 50% இடஒதுக்கீடு

337. பெண் கல்விக்கும், பெண்ணுரிமைக்கும் பெரும் ஆபத்தாக மாறி இருக்கும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

338. காவல்துறையில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்கப்படும்.

339. பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகச் சென்னையைப் போன்று பிற மாவட்டங்களிலும் மகளிர் மட்டும் பேருந்துகள் இயக்கப்படும்.

340. பெண்களுக்கான திருமண வயதை 21ஆக உயர்த்தும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

341. தமிழக அரசால் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டத்திலும் சுமார் 50% தொகை பெண்களுக்காக ஒதுக்கப்படும். இதுகுறித்த விவரங்கள் அடங்கிய பாலின நிதிநிலை அறிக்கை தமிழகச் சட்டப்பேரவையில் ஒவ்வொரு ஆண்டும் தாக்கல் செய்யப்படும்.

342. தமிழக அரசுத் திட்டங்களில் குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டுக்காகச் செலவிடப்படும் நிதியின் அளவு 23.43% என்ற அளவில் இருந்து குழந்தைகளின் மக்கள் தொகைக்கு ஏற்ப 39% ஆக உயர்த்தப்படும்.

**திருநங்கையர்கள் நலன்**

343. தமிழகத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் திருநங்கையர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும். திருநங்கையர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பு மூலம் உறுதி செய்த பிறகு, இடஒதுக்கீட்டின் அளவு தீர்மானிக்கப்படும்.

344. திருநங்கையர்கள் மீது சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் அன்புகாட்டி அரவணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் செய்யப்படும்.

345. குடும்பத்தைப் பிரிந்து வாடும் திருநங்கையர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வசதியாக விடுதிகள் அமைத்துத் தரப்படும்.

## 89. பெண் குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் நிதியுதவித் திட்டம்

346. தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 2016ஆம் ஆண்டு நிலவரப்படி, தமிழகத்தில் 1000 ஆண் குழந்தைகளுக்கு இணையான பெண் குழந்தைகளின் விகிதம் 840ஆக குறைந்துள்ளது. குழந்தைகள் பாலின விகிதம் இந்த அளவுக்கு குறைந்திருப்பது மிகவும் கவலை அளிக்கிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

347. பெண் குழந்தைகளை பெற்றோர் சுமையாகக் கருதுவதுதான் பாலின விகிதம் குறைவதற்குக் காரணமாகும். இந்த மனநிலையை மாற்றும் நோக்குடன் பெண் குழந்தைகள் 18ஆவது வயதைப் பூர்த்தி செய்யும்போது அவர்களின் கல்வி மற்றும் எதிர்கால செலவினங்களுக்காக ரூ.5 லட்சம் கிடைக்கும் வகையில், ஒரு குறிப்பிட்ட தொகை அவர்கள் பிறந்தவுடன் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு, அதற்கான சான்றிதழ் பெற்றோரிடம் வழங்கப்படும். ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய்க்கும் குறைவான குடும்ப வருமானம் கொண்டவர்களின் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.

348. மகளிரின் முன்னேற்றத்திற்காக மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மேம்படுத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்களின் எண்ணிக்கை 2019–2020 ஆம் ஆண்டில் 9 லட்சமாக அதிகரிக்கப்படும். இக்குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ.10,000 கோடி அளவுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

349. **தமிழ்நாட்டில் ஒருதலைக் காதல் என்ற பெயரில் இளம்பெண்கள் கொல்லப்படும் கொடுமை இனி நடக்கக்கூடாது என்பதில், இந்த அரசு உறுதியாக உள்ளது.**

**மாணவிகள் மற்றும் இளம் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் கடுமையான குற்றமாக கருதப்படும். இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க வகை செய்யப்படும். மாணவிகளும், இளம் பெண்களும் முறையே பள்ளி, கல்லூரிகளுக்கும், பணி இடங்களுக்கும் செல்லும் வழியில் அவர்களை சீண்டும் வகையில் எவரும் செயல்படுவதை தடுக்க சாதாரண உடையில் உள்ள மகளிர் காவலர்களைக் கொண்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.**

## 90. சத்துணவுத்திட்டம்

350. சத்துணவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பாண்டில் 2,250 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.

351. சத்துணவு உட்கொள்ளும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மாலையில் பால் மற்றும் ரொட்டி வழங்கப்படும்.

### ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

352. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்திற்கான நிதிஒதுக்கீடு 2018–19ஆம் ஆண்டில் ரூ.2,000 கோடியாக உயர்த்தப்படும்.

353. சென்னை, வேலூர், விழுப்புரம், நாகை உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வரும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ண ஆடைகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டு முதல் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## 91. முதியோர், ஆதரவற்றோர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் நலன்

354. 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மாதம் ரூ.2,000 ஓய்வூதியம் வழங்கப்படும். இதற்காக, அவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அரசிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவர்கள் அடையாளம் காணப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்படும்.

355. 60 வயதான அனைவருக்கும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

356. கணவனை இழந்த பெண்களுக்கும், ஆதரவற்ற அனாதைகளுக்கும் உடல் ஊனமுற்ற வேலை செய்ய இயலாதவர்களுக்கும், இதே போல மாதம் ரூ.2,500 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

357. முதியோர், ஆதரவற்றோர் ஓய்வூதியத்திற்கான நிதி ஒதுக்கீடு 2018–19ஆம் ஆண்டில் ரூ.8,150 கோடியாக உயர்த்தப்படும்.

## 92. மாற்றுத்திறனாளிகள் நலன்

358. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்குரிய 3 விழுக்காடு இடஒதுக்கீடு கண்டிப்பாக செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

359. மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 2018 –19ஆம் ஆண்டில் ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

360. **மாற்றுத்திறனாளிகள் எந்த வகையிலும் அவமதிக்கப்படவோ, இழிவுபடுத்தப்படவோ கூடாது என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசியல் மேடைகளிலும், பொது இடங்களிலும் மாற்றுத் திறனாளிகளை இழிவுபடுத்தும் வகையில் பேசுவது குற்றமாகக் கருதப்பட்டு, உரிய தண்டனை அளிக்கும் வகையில் தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.**

## 93. இலங்கைத் தமிழர்கள் நலன்

361. இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட அகதிகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை வரையறுக்கும் வகையில் சட்டம் இயற்ற மத்திய அரசு மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

362. தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழும் வகையில் அனைத்து வசதிகளும், சலுகைகளும் வழங்கப்படும். அவர்கள் விரும்பும் பட்சத்தில், அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்.

363. தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும், தமிழக மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் வழங்கப்படும். தமிழகத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எந்தக் கட்டுப்பாடும் இன்றி, அவர்கள் சேர வகை செய்யப்படும்.

364. இலங்கை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க பன்னாட்டு நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையம் மற்றும் ஐ.நா. அமைப்புக்கு அழுத்தம் தரும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

365. இலங்கையில் தமிழர்களும், சிங்களர்களும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பே இல்லை என்பதால், தமிழர்களின் பூர்வீகப் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாநிலங்களை இணைத்து தனித் தமிழீழம் அமைக்க வேண்டும். இதற்காக ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்தியா செய்ய வேண்டும்.

## 94. சிறுபான்மையினர்

366. இன்றைய மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் சிறுபான்மையினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

367. கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட மத சிறுபான்மையினரின் நலன் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கப்படும்.

368. சிறுபான்மையினர் நலனுக்கு ஒரு சிறப்புக் கூறுத் திட்டத்தை (Special Component Plan) அரசு செயல்படுத்தும். அவர்களுடைய திறன் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 95. ஆசிரியர்கள் நலன்

369. **எதிர்காலத் தலைமுறையினரின் கல்விக் கண்களைத் திறக்கும் ஆசிரியர்களுக்கு எந்த குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும். ஆசிரியர்களின் ஊதிய**

**விகித முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பான சித்திக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. அவை ஆய்வு செய்யப்பட்டு அடுத்த சில மாதங்களில் செயல்படுத்தப்படும்.**

370. ஆசிரியர்கள் உரிய தேர்ச்சி விகிதத்தைக் காட்டும் பட்சத்தில் அவர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட மாட்டார்கள். அதேநேரத்தில் ஆசிரியர்கள் விரும்பும் பட்சத்தில், அவர்கள் விரும்பிய இடத்திற்கு பணியிட மாறுதல் வழங்கப்படும்.

## 96. அரசு ஊழியர்கள் நலன்

371. **புதிய ஓய்வூதியத்திட்டம் இரத்து செய்யப்பட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட அரசு ஊழியர்களின் அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும். அவற்றில் சாத்தியமான கோரிக்கைகளை தமிழக அரசு செயல்படுத்தும்.**

372. **தமிழ்நாடு அரசுத் துறைகளில் காலியாக உள்ள 5 லட்சம் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும். இதன் மூலம் 5 லட்சம் படித்த இளைய தலைமுறைக்கு அரசு வேலை வழங்கப்படும்.**

373. **அரசு ஊழியர்களுக்கான மாத ஊதியம் 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் இரு தவணைகளில் வழங்கப்படும்.**

374. **அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு பதவி உயர்வு கிடைப்பது உறுதி செய்யப்படும்.**

375. **அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ரூ.2,000 கோடி மதிப்பிலான ஓய்வூதியப் பயன்களில், அண்மையில் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை உடனடியாக வழங்கப்படும்.**

376. **அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டு அவர்கள் சார்பில் பல்வேறு கணக்குகளில் செலுத்தப்படவேண்டிய தொகையும் உடனடியாக செலுத்தப்படும்.**

377. **அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக்கப்படுவார்கள்.**

378. அரசு ஊழியர்களில் 40 வயதுக்குட்பட்ட பெண் ஊழியர்களுக்கு மட்டும் தற்செயல் விடுப்பு 12 நாட்களில் இருந்து 24 நாட்களாக அதிகரிக்கப்படும்.

## 97. தொழிலாளர்கள் நலன்

379. அனைத்து தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்படும்.

380. அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

381. பனைத் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும்.

## 98. ஓய்வூதியர் நலன்

382. **அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளன்றே அவர்களுக்கான அனைத்து ஓய்வூதியப் பயன்களும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

383. ஓய்வூதியதாரர்களை இழந்து தவிக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகையின் அளவு ரூ.50,000–லிருந்து ரூ. 75,000 ஆக வழங்கப்படும்.

## 99. பத்திரிகையாளர்கள் நலன்

384. அரசு சார்பில் அனைத்து ஊடகங்களுக்கும் வழங்கப்படும் விளம்பரங்களில் இருந்து 3% தொகை பத்திரிகையாளர்கள் நல நிதிக்கு வழங்கப்படும். இந்த நிதியைக் கொண்டு, பத்திரிகையாளர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும்.

385. உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனப் பணியாளர்களுக்காக நீதிபதி மஜிதியா ஆணையம் பரிந்துரைத்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

386. ஆந்திராவில் செயல்படுத்தப்படுவது போன்று பத்திரிகையாளர்களுக்காகச் சிறப்பு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான பிரீமியத்தொகை முழுவதையும் அரசே செலுத்தும். இத்திட்டத்தின்படி, ஆண்டுக்கு ரூ.4 லட்சம் வரை மருத்துவம் பெறமுடியும்.

387. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற, நலிந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.15,000 ஆக உயர்த்தப்படும்.

388. பணிக்காலத்தின்போது உயிரிழக்கும் பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.2 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 100. வணிகர் நலன்

389. **கருப்புப் பணத்தை ஒழிக்கும் நோக்குடன் மின்னணு பணப்பரிமாற்ற முறையை மத்தியஅரசு வலியுறுத்தி வருகிறது. தமிழகத்தில் உள்ள சிறு வணிகர்களால் கடன் அட்டை மற்றும் பற்று அட்டை மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் எந்திரங்களை வாங்க இயலாது. அவர்களுக்கு உதவும் வகையில் இந்த எந்திரங்களை தலா ரூ.500 என்ற மானிய விலையில் தமிழக அரசு வழங்கும்.**

390. சில்லரை வணிகத்தில் ஈடுபடுபவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை அரசு சரியான முறையில் செயல்படுத்தும். அவர்களுக்குக் கடன் அட்டைகள் வழங்கப்படும். மேலும், வணிகர்களிடையே சுயஉதவிக்குழுக்களை அமைத்துக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக சிறு வணிகர்களுக்கு ரூ.50 கோடி கடன் வழங்கப்படும்.

## 101. நடப்பு நிதியாண்டின் (2019 – 2020) ஒட்டுமொத்த நிதிநிலை

391. 2018–2019 ஆம் ஆண்டிற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வரவு–செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய விபரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை

### 2019 – 2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம்


(ரூபாய் கோடியில்)

| வரிசை எண் | இனம் | 2017–18 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட திருத்த மதிப்பீடு* | 2018–19 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு* | 2019 – 20ஆம் ஆண்டு வரவு செலவு திட்டமதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | வருவாய் வரவுகள் (1.1. to 1.4.) | 2,12,454.00 | 2,30,517.00 | 4,21,026.00 |
| 1.1 | வரி வருவாய் | 1,49,457.00 | 1,61,457.00 | 1,96,416.00 |
| 1.2 | வரியில்லாத வருவாய் | 10,972.00 | 12,447.00 | 1,62,564.00 |
| 1.3 | மத்திய வரி வசூலில் பங்கு | 26,045.00 | 29,045.00 | 32,614.00 |
| 1.4 | மத்திய அரசிடம் இருந்து பெறும் மானியம் | 25,980.00 | 27,568.00 | 29,432.00 |
| 2. | மாநிலத்தின் மொத்தச் செலவு (2.1 & 2.2) | 2,19,542.00 | 2,38,319.00 | 4,27,815.00 |
| 2.1 | வருவாய்க் கணக்கில் செலவு | 1,80,317.00 | 2,01,317.00 | 3,51,203.00 |
| 2.2 | மூலதனக் கணக்கில் செலவு | 39,225.00 | 37,002.00 | 76,612.00 |
| 3 | நிதி பற்றாக்குறை / உபரி (1–2) | (–) 7,088.00 | (–) 7,802.00 | (–) 6,789.00 |
| 4 | வருவாய் கணக்கில் உபரி / பற்றாக்குறை (1 – 2.1) | (+) 32,137.00 | (+) 29,200.00 | (+) 69,823.00 |

* பாட்டாளி மக்கள் கட்சியின் மதிப்பீடு

# மூன்று ஆண்டிற்கான மொத்த வரவு - செலவு

(ரூபாய் கோடியில்)




* பாட்டாளி மக்கள் கட்சியின் மதிப்பீடு

392. தமிழக அரசின் 2017–18 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திருத்த மதிப்பீடும்; 2019–20 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. பாட்டாளி மக்கள் கட்சியின் மதிப்பீட்டின்படி, நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு அரசின் வருவாய் வரவுகள் ரூ.4,21,026 கோடியாக இருக்கும். கடந்த ஆண்டின் வருவாய் வரவான ரூ.2,30,517 கோடியைவிட ரூ.1,90,509 கோடி அதிகமாக இருக்கும். இந்த ஆண்டில் ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூ.3,51,203 கோடியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டின் வருவாய்ச் செலவான ரூ.2,01,317 கோடியைவிட ரூ.1,49,886 கோடி அதிகமாக இருக்கும். இந்த ஆண்டின் வருவாய் வரவுகள், வருவாய்ச் செலவைவிட ரூ.69,823 கோடி அதிகமாக இருப்பதால், அது இந்த ஆண்டின் வருவாய் உபரியாக இருக்கும். நடப்பாண்டில் வரியல்லாத வருவாய், கலால்வரி மூலமான வருவாய் ஆகியவை அதிகரித்திருப்பதாலும், பல்வேறு துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ள போதிலும், அரசின் செலவுகள் குறைக்கப்பட்டிருப்பதால் வருவாய் உபரி இந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

393. நடப்பு ஆண்டின் வருவாய் செலவினங்களான ரூ.3,51,203 கோடியில் ரூ.50,000 கோடி நிலுவையில் உள்ள கடனை அடைப்பதற்காக அசலாக செலுத்தப்படும். இதன்படி, அடுத்த 5 ஆண்டுகளில் தமிழக அரசின் தற்போதைய கடன் கட்டுக்குள் கொண்டுவரப்படும். வளர்ச்சித் திட்டங்களுக்காக புதிதாக வாங்கப்படும் கடன் மிகமிக குறைந்த அளவிலேயே இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

394. நடப்பு ஆண்டின் வருவாய் உபரி ரூ.69,823 கோடியாக இருக்கும். இது சென்ற ஆண்டின் வருவாய் உபரியான ரூ.29,200 கோடியைவிட அதிகமாகும். கனிம வளங்களை திறம்பட மேலாண்மை செய்ததால், தமிழக அரசின் வரியில்லாத வருவாய் ரூ. 1,62,564 கோடியாக அதிகரித்ததன் பயனாகவே, கடனுக்காக ரூ.50,000 கோடி செலுத்திய பிறகும், இந்த அளவுக்கு வருவாய் உபரி சாத்தியமானது.

395. வருவாய் வரவுகள், மாநிலத்தின் சொந்த வருவாயாகவும், மத்திய வரி வசூலில் இருந்து கிடைக்கப்பெறும் பங்காகவும் பெறப்படும். தமிழகத்தின் வரி வருவாய் கடந்த ஆண்டின் அளவான ரூ.1,61,457 கோடியிலிருந்து, 21.65 விழுக்காடு அதிகரித்து, இந்த ஆண்டில் ரூ.1,96,416 கோடியாக இருக்கும்.

396. மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும் வருவாய், மத்திய வரி வசூலின் பங்காகவும், மத்திய அரசிடமிருந்து பெறும் மானியங்களாகவும் இருக்கிறது. நடப்பு ஆண்டில், மத்திய அரசின் வரி வசூலிலிருந்து தமிழகத்திற்கு ரூ.32,614 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சென்ற ஆண்டின் பங்கைவிட ரூ.3,569 கோடி அதிகமாக இருக்கும். ஆனால், மத்திய அரசிடம் இருந்து பெறும் மானியங்கள், சென்ற ஆண்டின் மானியத் தொகையான ரூ.27,568 கோடியில் இருந்து ரூ.29,432 கோடியாக உயரும். அதாவது ரூ.1,864 கோடி கூடுதலாக இருக்கும்.

397. ஒட்டுமொத்தமாக மாநிலத்தின் மொத்த வருவாயையும், மொத்தச் செலவையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, இந்த ஆண்டு ரூ.6,789 கோடி நிதிப் பற்றாக்குறையாக இருக்கும். மூலதனக் கணக்கில் ரூ. 76,612 கோடி செலவிடப்படும்.

398. "வளரும் தமிழகத்திற்கு வலிமையான கட்டமைப்பு – 2025" என்ற தலைப்பிலான தொலைநோக்குத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ.50,000 கோடி நிதி ஒதுக்க வேண்டியிருப்பதால் தமிழக அரசின் மூலதன செலவு இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

## 102. நிறைவுரை

399. தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியில் தமிழக அரசின் நிதிநிலை குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் வகையிலும் அனைத்து தரப்பினரின் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், இன்றைய பொருளாதார சூழ்நிலை, மக்களின் அவசிய அத்தியாவசியத் தேவைகள், எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

400. நடப்பாண்டின் தேவைகளையும், வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றுவதோடு நீடித்த, நிலைத்த, தொலைநோக்குத் திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

401. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டின் அரசு நிதிநிலை அறிக்கையால் எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து வாழ்க்கைத்தரம் உயரும், வாழ்வு மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும் என்ற நம்பிக்கையோடும் இந்த நிழல் நிதிநிலை அறிக்கை தமிழக அரசுக்கும், பொது மக்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்ற மிகுந்த எதிர்பார்ப்போடு முன் வைப்பதில் பாட்டாளி மக்கள் கட்சி பெருமையடைகிறது.

************